₹10

fmpb

# அறைகூவல்

Volume 53 | Issue 3 | March 2023




*அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. – ரோமர் 12:1*

## ஜீவபலியாகத் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்

## என்னை ஜீவ பலியாய்...



*'ஜீவ' பலியாக
ஏற்கப்பட முடியாமல்
இருப்பதின் சிக்கலே,
அது பலிபீடத்தை விட்டு
நகர்ந்து சென்றுகொண்டே
இருப்பதுதான்.
- டாக்டர். டேவிட் ரீஸ்*

# ஆரம்ப வரிகள்...

ஸ்காட்லாந்து தேசத்திலுள்ள ஒரு சிறிய சபையில் ஊழியம் செய்துகொண்டிருந்த வயதான போதகரொருவர், அந்த சபையில் ஒரு ஆத்துமாக்கூட இரட்சிக்கப்பட்டு சபையில் இணையவில்லையென்பதால், ராஜினாமா செய்ய வற்புறுத்தப்பட்டார். ஆனால் அதற்கு அந்தப் போதகர், தன் சபையில் விபாபி என்னும் ஒரு சிறுவன் திருமுழுக்கு எடுத்து, தன்னை ஒரு கூடுகையில் முழுநேர ஊழியத்திற்கு ஒப்புக்கொடுத்திருக்கிறான் என்று தெரிவித்ததோடு, அவன் காணிக்கையெடுக்கும் சமயத்தில் தன்னிடம் காணிக்கைக்குப் பணம் ஏதுமில்லாததால் காணிக்கை எடுப்பவரின் கையிலிருந்த தட்டைக் கீழே வைக்கச்சொல்லி, அதன்மீது அவன் ஏறி நின்று, “நான் என்னையே காணிக்கையாகக் கொடுக்கிறேன்” என்று சொல்லி தன்னை அர்ப்பணித்த நிகழ்வையும் விவரித்தார். பிற்காலத்தில் இந்த விபாபிதான் டாக்டர். ராபர்ட் மொஃபெட்டாக மாறி, ஜாண் வில்லியம் என்ற மற்றொரு இளம் ஊழியரோடு ஆப்பிரிக்கா கண்டத்திற்கு மிஷனரியாகப் புறப்பட்டுச் சென்று பல ஆண்டுகள் தேவப்பணியை நிறைவேற்றினவர். அவரைத் தொடர்ந்து அவரின் மகள் அங்கு மிஷனரி டேவிட் லிவிங்ஸ்டனை திருமணம் செய்து, தேவ ஊழியத்தைத் தொடர்ந்து செய்துவந்தார். அன்று அச்சிறுவன் தன்னையே முழுமையான காணிக்கையாக அதாவது, ஜீவபலியாக அர்ப்பணித்ததின் விளைவு ஒரு சமுதாயமே சீரமைய அது வழிவகுத்தது.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தேவனோடுள்ள உறவை மேம்படுத்தவும், வலுவுறச்செய்யவும் பலிகள் போன்ற நியதிகளை தேவன் ஏற்படுத்தினார். மேலும் அந்நியதிகள் தேவன் மீதுள்ள அன்பினாலும், கீழ்ப்படிதலினாலும் நிறைவேற்றப்படவேண்டும் என்பதை தேவன் எதிர்பார்த்தார் (1 சாமு.15:22-23). எனவே, இதை ஒருவர் நிறைவேற்றும்போது அவருடைய இருதயம் தேவனைவிட்டு தூரமாயிருந்தால், அந்த முறைமைகள் அர்த்தமற்றதாகவும், தேவனை நிந்திப்பதாகவும் மாறிவிடும். இதைத்தான் ஆமோ.5:21-24-ல் 'இஸ்ரவேலரின் இருதயம் ஆராதனைகளையும், பலிகளையும் செலுத்தும்போது தேவனைவிட்டு தூரமாக இருந்ததால், அதைப் பகைத்து வெறுக்கிறேன்' என்று கர்த்தர் சொல்கிறார். அன்று பலி செலுத்த ஒரு புறாவையோ, மாட்டையோ பலிபீடத்தின்மீது சந்து சந்தாகத் துண்டித்து வைப்பார்கள் (லேவி.1:12,8:20). ஆனால் இன்று அத்தகைய பலிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவே, தேவன் தமது குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை நமக்காக ஒரேதர ஜீவபலியாக ஒப்புக்கொடுத்தார் (எபி.10:12). ஆகவே தேவன் இன்று நம்மிடத்தில் எதிர்பார்ப்பதெல்லாம், நொறுங்குண்டதும் நறுங்குண்டதுமான இருதயமும் (சங்.51:17), உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியுமே (எபி.13:15). இவை இரண்டையும் உள்ளடக்கும் வண்ணமாக தேவனை ஆராதிக்கும்போது, நாமும் ராபர்ட் மொஃபெட் போலவே நம்முடைய சரீரம் முழுமையையும் தேவனுடைய சந்நிதானத்தில் ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும். 'ஜீவபலி' என்பது ஒருநாள் மரிப்பதற்காக ஒப்புக்கொடுப்பது அல்ல; அனுதினமும் நம்முடைய சுயம் நீங்க நமது வாழ்நாள்முழுவதும் சிலுவையில் அறையப்பட நம்மை ஒப்புக்கொடுத்து வாழ்வதேயாகும். இதனையே பவுல் புத்தியுள்ள ஆராதனை (ரோ.12:1) என்று குறிப்பிடுகிறார். அதாவது, பழைய மனிதனையும் அவனின் செயல்களனைத்தையும் சிலுவையில் அறைந்து, 'இனி நான் அல்ல, கிறிஸ்துவே!' என வாழ்வோரும், தேவ சத்தத்திற்கும் தேவ சித்தத்திற்கும் மட்டுமே தங்களை விலைக்கிரயமாக்கினவர்களும், பரிசுத்தமாக வாழ தங்களையே பணயம் வைத்தவர்களுமே தங்களை ஜீவபலியாக ஒப்புகொடுத்தவர்கள். கிறிஸ்துவுக்காக ஒரே நாளில் மரிப்பது என்பது எளிது. ஆனால், கிறிஸ்துவுக்காக ஜீவபலியாக அனுதினமும் வாழ்வது மிகக் கடினம். நம்முடைய சிந்தை, வார்த்தை, செயல்கள், பழக்கவழக்கங்கள் அனைத்திலுமே கிறிஸ்து இயேசுவின் சிந்தை ஆட்கொள்ளப்பட நம்மை அனுதினமும் ஜீவபலியாக ஒப்புக்கொடுப்போம். நறுமணம் வீசும் நற்கந்தங்களாக தேசமெங்கும் வலம் வருவோம். கர்த்தர் தாமே அதற்கு நமக்கு உதவுவாராக!

**- மெர்சி செல்வின்** *(தகவல் தொடர்புத்துறை)*

**கிறிஸ்து நமக்காகத் தம்மை தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல, நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள்.**

*– எபேசியர் 5:2*

**கிறிஸ்துவின் சிலுவையை நான் கருத்தில் கொள்ளும்போது, நான் செய்யும் எதையும் *தியாகம்* என்று எப்படி சொல்ல முடியும்!**

*– ஏமி கார்மைக்கேல்*

**ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டு வருகிறீர்கள்.**

*– 1 பேதுரு 2:5*

**பூலோக இராஜா இடும் கட்டளையை மிக கனத்துக்குரியதாகக் கருதுவோமாயின், பரலோக இராஜா இடும் கட்டளையை மாத்திரம் எவ்வாறு *தியாகம்* எனக் கருத இயலும்?**

*– டேவிட் லிவிங்ஸ்டன்*


# அறைகூவல்

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின்**
**மாதம் ஒருமுறை மலரும் சத்தியப் பூ**

ஆசிரியர்: S. சுதர்சன் தாமஸ் ஜெயராஜ்

| | |
|---|---|
| தனிப்பிரதி ரூ.10/- | வெளிநாடு |
| ஆண்டு சந்தா ரூ.48/- | ஆண்டு சந்தா ரூ.480/- |
| ஆயுள் சந்தா ரூ.500/- | ஆயுள் சந்தா ரூ.5000/- |



*தொடர்பு மற்றும் நிதி உதவிக்கு*

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு**

29, உயர்நிலைப்பள்ளி சாலை, அம்பத்தூர்,
சென்னை - 53. தொலைபேசி: 044-26570404
பேக்ஸ்: 044-26573353 கைபேசி: 9444394342
மின்னஞ்சல்: *info@fmpb.org*
வலைதளம்: *www.fmpb.co.in*


**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு**

**நமது தரிசனம்:**

சந்திக்கப்படாத இந்தியர்களை இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தால் சந்திப்பது.

**நமது ஊழியம்:**

தேசமக்களுக்கு இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கூறவும், சமுதாயத்தை மறுரூபப்படுத்த உதவி செய்யவும் இந்தியத் திருச்சபைகளை அதிக அளவில் ஈடுபட வைப்பதற்கான நோக்கத்தைப் பகிர்ந்து கொள்வது.

இந்தியத் திருச்சபையின் மனமொத்த ஆதரவுடன் இது தனது சேவைப்பணியை நாடெங்கும் தொடர்கிறது. சபைகள், நிறுவனங்கள், குடும்பங்கள், தனி நபர்கள் ஆகிய இவர்களின் ஜெபமும், ஈடுபாடும், தியாகமான ஈகையும் இவ்வியக்கத்தின் பணிச்சக்கரத்தைச் சுழலச்செய்யும் அச்சாணிகள். இதில் நீங்கள் இணைவதோடு பிறரும் இணைய அறிமுகம் செய்யுங்கள்.

**feedbackfmpb@fmpb.org**
உங்கள் மேலான ஆலோசனைகளை இந்த மின்னஞ்சலில் அனுப்பலாம்.

# பொதுச்செயலாளரிடமிருந்து...

இயேசுகிறிஸ்துவை ஒருமுறைக்கூட அறியாத இந்தியரனைவரும் அவரை அறிந்திடச் செய்யும் உன்னதப்பணியில் எங்கள் உடன் பங்காளிகளுக்கு, சர்வ வல்ல ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் எனது அன்பின் நல்வாழ்த்துக்கள்!

இவ்வருடம் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவிற்கு தேவன் தந்துள்ள ''நான் உன்னைத் தெரிந்துகொண்டேன்" என்ற கருப்பொருளின் கீழ் அமைந்துள்ள சத்தியங்களை இந்த ஆண்டு எல்லா கூட்டங்களிலும் நாம் கற்றுவருகிறோம். நாம் அதிகம் விரும்பும் அல்லது மிக நெருக்கமாக வைத்திருக்கும் எல்லாவற்றையும் தேவனுடைய பலிபீடத்தில் தியாகமாய் படைத்துவிட்டு, அவரை நமது வாழ்வின் அனைத்துப் பகுதிகளையும் ஆளும் ராஜாவாக ஏற்க தேவன் நம்மைத் தெரிந்தெடுத்துள்ளார். அதைத்தான் பரிசுத்த ஆவியானவர் வல்லமையாக மாற்கு 10:17-31-ம் வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பவத்தின்படி நமக்குக் கற்றுத்தருகிறார். இது இயேசுவிற்கும் ஒரு ஐசுவரியவானுக்கும் இடையே நித்திய ஜீவனைச் சுதந்தரிப்பதைக் குறித்ததான சந்திப்பு. வசனம் 21 - 'இயேசு அவனைப் பார்த்து, அவனிடத்தில் அன்புகூர்ந்து' எனக் கூறுகிறது. இயேசு அந்த மனிதனிடம் அன்பு கொண்டு, உன்னிடத்தில் ஒருகுறைவு உண்டு; நீ போய், உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்று தரித்திரருக்குக் கொடு எனக் கூறினார். பின்பு வசனம் 29-ல், ஒருவன் யாதொன்றையாவது இயேசுவினிமித்தமாகவும், சுவிசேஷத்தினிமித்தமாகவும் தியாகம் செய்தால் அல்லது இழந்தால், அதை அவர்கள் இம்மையிலே நூறத்தனையாகவும் மறுமையிலே நித்திய ஜீவனையும் அடைவார்கள் என இயேசு வாக்களித்தார். நன்மையான யாதொன்றையும் அடைவதற்கு அல்லது பெற்றுக்கொள்வதற்கான வழி - அதை நாம் இயேசுவுக்கென்றும், சுவிசேஷத்திற்கென்றும் தியாகம் செய்வதுதான்.

கடந்த மாதம் முழுவதும் நாட்கள் பலதரப்பட்ட நிர்வாகக்கூடுகைகள் மற்றும் இதர கூடுகைகளினால் மிகவும் பரபரப்புடன் காணப்பட்டது. ஆயினும் அனைத்து கூடுகைகளிலும் கர்த்தர் அவரது பிரசன்னத்தினாலும், அவரது ஜீவனுள்ள வார்த்தையினாலும் நல்லவராகவே இருந்தார்.

**ஊழிய கவுன்சில்:** 2023 ஜனவரி 19, 20-ம் தேதிகளில் 7-வது ஊழிய கவுன்சில் நடைபெற்றது. 18-ம் தேதி உபவாசத்துடன்கூடிய ஜெபநாளாக இருந்தது. பணித்தளம், விரிவுப்பணி மற்றும் தலைமைச் செயலகப் பிரிவுகளிலிருந்து பிராந்தியம் மற்றும் அதற்கும் மேலான அளவில் பொறுப்புகளை ஏற்றிருக்கும் நமது மிஷனரிகள் யாவரும் வருங்கால ஊழியத்தைக் குறித்து திட்டமிடக் கூடினோம். இதில் சிறப்பு நடத்துனர்களாக வெளியிலிருந்து மூன்று பேர் ஆறு சிறப்பு ஊழிய விளக்கங்கள் அடங்கிய கருத்துக்களைச் சமர்ப்பிக்கவும், அதைத்தொடர்ந்து ஒவ்வொரு விளக்கக் கருத்தாளங்களுக்குப் பின்பும் அதற்கு போதுமான அளவு அதைக் குறித்து கலந்தாலோசிக்கவும் அவகாசம் அளிக்கப்பட்டது. பின்பு அக்கவுன்சில் ஊழியங்களில் தற்போது நிலவிக்கொண்டிருக்கும் சூழ்நிலைகளைக் குறித்து ஆலோசித்து, அதன்பின் இயேசுவின் வல்லமையைக் கொண்டு சுவிசேஷத்தைப் பிற இந்தியர்களுக்கு எவ்வித தயக்கமுமின்றி அறிவிக்க ஒருமனதாக தீர்மானமெடுத்தது.

**அழகிய சங்கமம்:** தரங்கம்பாடியில் வைத்து, 'அழகிய சங்கமம்' வருடாந்திர ஸ்கேன் கூடுகை ஜனவரி 28-29-ம் தேதிகளில் நடைபெற்றது. சுமார் 1000 வியாபாரிகள் தங்களது குடும்பங்களுடன் 317 வருடங்களுக்கு முன் நவீன புராட்டஸ்டன்ட் மிஷனிற்கு வித்திடப்பட்ட இடத்தில் அழகாகக்கூடி, தங்களது ஆவிக்குரிய வாழ்வில் புத்துணர்ச்சி பெற்றதோடு, தேசத்தின் சந்திக்கப்படாத பகுதிகளைச் சுவிசேஷத்தினால் சந்திப்பதற்கும் தங்களை அர்ப்பணித்தனர்.

**நிதி நிர்வாகக்குழு & நிர்வாகக்குழு:** நிதி நிர்வாகக்குழு பிப்ரவரி 4-ம் தேதி நடத்தப்பட்டு, அதில் 2023-2024-ம் நிதியாண்டிற்கான வருமான பட்ஜெட் ரூ.83 கோடி என பரிந்துரைக்கப்பட்டது. அதன்பின் நிர்வாகக்குழு கூட்டம் நடைபெற்றது.

**நேர்காணல்:** புதிய மிஷனரிகளைத் தெரிந்தெடுப்பதற்கான நேர்காணல் பிப்ரவரி 6,7-ம் தேதிகளில் நடைபெற்றது. அதில் 22 பேர் பங்கேற்றதில் 17 பேர் மிஷனரிகளாகத் தெரிந்தெடுக்கப்பட்டனர். பின்பு அவர்களுக்கு உரிய மருத்துவ பரிசோதனைகள் செய்யப்பட்டு, அவர்கள் ஒருமாத காலத்திற்கு நமது விரிவுப்பணி ஊழியத்தைக் குறித்தும், அதன்பின் 5 மாத காலம் பணித்தள ஊழியத்தைக் குறித்தும் அறிந்து கொள்ள அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். தயைக்கூர்ந்து அவர்களை உங்கள் ஜெபங்களில் நினைவுகூருங்கள்.

**தேசிய திட்டக்கூடுகையும், ஜெபமும்:** பிப்ரவரி 10-ம் தேதி தேசிய திட்டக்கூடுகைக்கான 12 மணிநேர ஜெபம் நடத்தப்பட்டது. ஒவ்வொரு ஊழியச்செயலர்களும் பகிர்ந்து கொண்ட குறிப்புகளுக்கு அங்குக் கூடியிருந்தவர்கள் ஊக்கமாக ஜெபித்தனர். பின்பு பிப்ரவரி 11, 12-ம் தேதிகளில் தேசிய திட்டக்கூடுகை சென்னையிலுள்ள குருகுலம் ஆடிட்டோரியத்தில் வைத்து நடைபெற்றது. ஊழிய அறிக்கை மற்றும் கலந்துரையாடல் நேரங்கள் மிகவும் சிறப்புடன் அமைந்திருந்தன. 2023-2024-ம் ஆண்டு மற்றும் அதற்கும் மேலான ஆண்டுகளுக்கான தொலைநோக்குத் திட்டங்களும் கூடுகையின் முடிவில் அறிவிக்கப்பட்டன.

**செயற்குழு கூட்டம்:** பிப்ரவரி 12,13-ம் தேதி களில் 213-வது செயற்குழு கூட்டம் நடை பெற்றது. கர்த்தரின் சித்தத்தை அடித்தளமாய் கொண்டு, அக்குழு தங்களது தீர்மானங்களை எடுக்க கர்த்தர் உதவிசெய்தார்.

**சங்கலிகளால் கட்டிவைக்க முடிய வில்லை:** உத்தரப்பிரதேசத்தில் சிறையில் வைக்கப்பட்டிருந்த சுதேச ஊழியர்களும் விசுவாசிகளும் உயர் நீதிமன்றத்தில் ஜாமீன் பெற்றனர். இப்படிப்பட்ட உபத்திரவத்தின் மத்தி யிலும், அவர்கள் அவர்களை கர்த்தருக்குள் மகிழ்ச்சியாக வைத்திருக்கவும், பிற கைதி களுக்கு முன்பாக கர்த்தருடைய குணத்தைப் பிரதிபலிக்கவும் பரிசுத்த ஆவியின் வல்லமை அவர்களுடன் இருந்ததை அவர்களுடைய சாட்சி நமக்கு சாட்சிப்பகருகின்றது.

**ஜாவ்டா பள்ளி வெள்ளி விழா:** 1997-ல் தொடங்கப்பட்ட மிக தாழ்மையான ஒரு ஆரம்பம், இன்று குஜராத்திலுள்ள ஜாவ்டா கிராமத்தில் ஆங்கிலவழி உயர்நிலைப்பள்ளியாக எழும்பி, வாழ்க்கையின் பல நிலைகளில் உயர் பதவிகளில் பல குழந்தைகளை உருவாக்கியுள்ளது. வட இந்திய திருச்சபை - குஜராத் மறைமாவட்ட பேராயர் Rt. Rev. சிவான்ஸ் கிறிஸ்டியன் இந்த வெள்ளிவிழா கொண்டாட்டத்தில் நமது மிஷனரிகள், ஜெபக்குழுத்தலைவர்கள் மற்றும் அரசியல் தலைவர்களோடு பங்கேற்றார். தேவன் பாராட்டின நன்மைக்கு இப்பள்ளி ஓர் நல்ல உதாரணமாக நிற்கிறது.

**முக்கிய கூடுகைகளும், மார்ச் மாத நிகழ்ச்சிகளும்:** மார்ச் 4,5-ம் தேதிகளில் தூத்துக்குடியில் வைத்து உபவாச ஜெபமும், கூட்டங்களும் நடக்கவிருக்கிறது. மார்ச் 10-ம் தேதியில் உயர்கல்விக்கான கமிட்டிக்கூடுகை நடைபெற உள்ளது. மார்ச் 13-16-ம் தேதிகள் வரை நாக்பூரில் வைத்து பணித்தள மண்டலச் செயலர்களுக்கு ஜெபமும், கூடுகையும் நடக்கவிருக்கிறது. நான் கலந்து கொள்ளப்போகும் இக்கூட்டங்களுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்.

**கலாச்சாரம் கடந்த ஊழியத்தொடர்பு பயிற்சி:** NIM - ஜான்சியில் வைத்து வரும் மார்ச் 25-ல் பட்டம் பெறவிருக்கும் நமது மிஷனரிப்பயிற்சி பெறும் பிள்ளைகளுக்கு மார்ச் 17-24-ம் தேதிகள் வரை கலாச்சாரம் கடந்த ஊழியத்தொடர்பு குறித்து வகுப்பெடுக்க இருக்கிறேன். இப்பாடப்பகுதி கலாச்சாரம் கடந்த நிலையில் அவர்கள் எவ்வாறு சுவிசேஷத்தை அறிவிப்பது என்பதற்கு மிகுந்த பயனுள்ளதாக இருக்கும்.

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியத்திற்கு தாங்கள் ஏறெடுக்கும் கருத்தான ஜெபங் களுக்கும், காட்டும் ஆதரவுகளுக்கும் நன்றி கூறுகிறோம். இவ்வியக்கத்தின் அனைத்து மிஷனரிகளையும் உங்களது அனுதின ஜெபங்களில் ஒருமுறையாவது நினைத்துக்கொள்ளுங்கள்.

தேவ ஊழியத்தில் தங்கள் சக ஊழியன்,



**அருட்திரு. S. ஜாண் பெர்லின்**

# தியாகத்திற்கான தெரிந்தெடுப்பு



அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுலடியார் எபேசியருக்கு எழுதிய கடிதத்தின் 1-ம் அதிகாரம் 4-ம் வசனத்தில், ‘‘தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்த முள்ளவர்களும் குற்றமில்லாதவர்களு மாயிருப்பதற்கு, அவர் உலகத்தோற்றத்துக்குமுன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டபடியே...’’ என்று எழுதுகிறார். உலகம் தோன்றுவதற்கு முன்பே நம்மை கர்த்தர் தம்முடையவர்களாகத் தெரிந்துகொண்டிருக்கிறார் என்பது நமக்கு மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது.

வேதத்தில் கர்த்தர் பல காரணங்களுக்காக மனிதர்களைத் தெரிவு செய்வதை நாம் படிக்கலாம். கர்த்தர் தாம் அழிக்கப்போகும் பூமியில் மனுக்குலம் மீண்டும் பலுகிப் பெருக நோவாவையும், அவன் குடும்பத்தையும் தெரிவு செய்தார். தமக்கென ஒரு மக்கள் கூட்டத்தை ஏற்படுத்துவதற்கு முன்னோடியாக ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோரைத் தெரிந்துகொண்டார். எகிப்தின் அடிமைத்தனத்தினின்று இஸ்ரவேலரை விடுவித்து வழிநடத்த மோசேயையும், அவனுக்குப்பின் கானான் தேசத்தைப் பங்கிடுவதற்கு யோசுவாவையும் தெரிந் தெடுத்தார். இஸ்ரவேலரை நடத்துவதற்குப் பல நியாயாதிபதிகளையும், முதல் அரசனை அபிஷேகிக்கும் தீர்க்கனாக சாமுவேலையும், தமது இருதயத்திற்கேற்ற ராஜாவாக தாவீதையும், தவறும் இஸ்ரவேலரை எச்சரித்து மேசியாவின் முதல் வருகையை அறிவிக்கும் தீர்க்கர்களாக ஏசாயா, எரேமியா போன்றவர்களையும் கர்த்தர் தெரிந்தெடுத்தார்.

இயேசு கிறிஸ்துவின் ஊழிய நாட்களிலும் அவர் தம்மைப் பின் பற்றவும், தம் பணியைத் தொடரவும், தம் சீடர்களில் பன்னிருவரைத் தெரிந்தெடுத்து அவர்களுக்கு ‘அப்போஸ்தலர்கள்’ என்று பெயரிட்டார் (லூக்.6:13,14). பல இடங்களில் இயேசு கிறிஸ்து தம்முடைய தெரிந்தெடுப்பைக் குறித்து கூறுவதை நாம் வேதத்தில் படிக்கலாம். இன்றும் இந்த தெரிந்தெடுப்பு தொடர்கிறது. மத்தேயு 22:14 – “அந்தப்படியே, அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் சிலர்.” இயேசு கிறிஸ்துவின் அழைப்பிற் கிணங்கி அவரை இரட்சகராக ஏற்றுக் கொண்டு, அவரது பிள்ளைகளானவர்கள் எண்ணற்றவர்கள். ஆனால், அவர்கள் மத்தியிலிருந்து அவரது நோக்கத்தை நிறைவேற்றுவதற்கென்று தெரிந் தெடுக்கப்பட்டவர்களும் தெரிந்தெடுக்கப் படுபவர்களும் சிலரே. இந்த தெரிந்தெடுப்பு நம்முடைய தனிப்பட்ட விருப்பத்தின் படியோ, அல்லது பிறருடைய சிபாரிசின் பேரிலோ நடப்பதல்ல. யோவான் 15:16-ல் இயேசு கூறுகிறார், ‘‘நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்” என்று. இயேசு கிறிஸ்து தமது நோக்கத்தை இவ்வுலகில் நிறைவேற்ற கிருபையாக நம்மைத் தெரிந்துகொண்டார்.

கர்த்தருடைய தெரிந்தெடுப்புக்கு செவி கொடுப்பவர்களைச் சாதனையாளர்களாகப் பயன்படுத்துகிறார். சிலரை முழுநேர மிஷனரிகளாகவும், சிலரை முழுநேர

போதகர்களாகவும், சிலரை சுவிசேஷகர்களாகவும், சிலரை தலைமைத்துவ பணியாளர்களாகவும், சிலரை கூடுதல் நேர பணியாளர்களாகவும் கர்த்தர் தெரிந்தெடுத்திருக்கிறார். 1 பேதுரு 2:9-ன் படி, “நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்.” இயேசு கிறிஸ்துவை தங்களது இதயத்தில் ஏற்றுக்கொண்ட அனைவரும் தங்களை மாற்றிய இயேசு கிறிஸ்துவையும், அவர் தங்கள் வாழ்வில் செய்த நன்மைகளையும் பிறருக்கு அறிவிப்பவர்களாக இருக்க அவர்களைக் கர்த்தர் தெரிந்துகொண்டதாகப் பரிசுத்த பேதுரு தன் நிருபத்தில் எழுதுகிறார். இதை நமக்குக் கொடுக்கப்பட்ட கட்டளையாக மத்தேயு 28:19&20; மாற்கு 16:15 ஆகிய வசனங்களில் இயேசு கிறிஸ்து தாம் பரத்துக்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்பு கூறுகிறார்.

மனுக்குலத்தை மீட்பதற்கென்று தம்மையே ஜீவபலியாகத் தந்தவர் நம்மையும் அவருக்கு ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று விரும்புகிறார். ரோமர் 12:1 – “அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்.” இந்த வசனத்திலுள்ள “ஜீவபலி” என்ற வார்த்தை ‘‘living sacrifice’’ என்று ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ‘‘sacrifice’’ என்பதற்கு நேரடியான தமிழ் அர்த்தம் ‘‘தியாகம்.’’ நம்மை நாம் கர்த்தருக்கு முழுமையான ஜீவபலியாக அல்லது முழுமையாக தியாகம் செய்வதற்கு ஒப்புக்கொடுக்கவேண்டும். அப்படிப்பட்ட தியாகம் நிறைந்த வாழ்வு வாழவே நாம் தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிறோம்.

## எவைகளில் தியாகம் அவசியம்

பொதுவாக மனிதர்கள், ‘தங்களிடமிருப்பவை அனைத்தும் தங்களுக்கே சொந்தம்’ என நினைக்கிறார்கள். ஆனால் நாம் தெரிந்துகொள்ளவேண்டியது, நம்மிடம் இருப்பவைகள் எதுவும் நமக்குச் சொந்தமல்ல; அவைகள் அனைத்தும் கர்த்தருக்கே சொந்தம். அவைகளை தேவ மகிமைக்கென்று நிர்வாகம் செய்வது தான், நமது பொறுப்பு. சங்கீதம் 24:1 சொல்வது, ‘‘பூமியும் அதின் நிறைவும், உலகமும் அதிலுள்ள குடிகளும் கர்த்தருடையது.” நாம் வாழும் பூமியும் அதில் வாழும் குடிகளும் கர்த்தருக்குச் சொந்தம். 1 கொரிந்தியர் 6:13-ல் “நமது சரீரம் கர்த்தருடையது” என்றும், 1 கொரிந்தியர் 6:19-ல் “நமது சரீரம் கர்த்தருடைய ஆலயம்” என்றும் படிக்கிறோம். அப்படியானால் நாம், நமது வாழ்க்கை, நமது உடமைகள், நமது குடும்பம் – இது எதுவுமே நம்முடையது அல்ல. அவைகள் அனைத்தும் கர்த்தருக்கே சொந்தம். அவைகளைக் கர்த்தருக்கென்று தியாகம் செய்வதற்கு நாம் எப்பொழுதும் ஆயத்தமாக இருப்பதற்கென்று தெரிந்து கொள்ளப்பட்டிருக்கிறோம்.

நாம் புரிந்துகொள்ளவேண்டியது, ‘தியாகம்’ என்பதற்கு நம்மிடம் உள்ளவைகளை இழப்பது என்று பொருளல்ல. ‘தியாகம்’ என்பது நமக்குக் கொடுக்கப்பட்டிருப்பவைகள் அனைத்தையும் தேவ நாமம் மகிமைப் படும்படி பொறுப்போடும், உத்தமத்தோடும் செலவு செய்வது அல்லது பயன்படுத்துவது என்று தான் அர்த்தம்.

தேவ நாமத்தை மகிமைப்படுத்த நாம் தியாகம் செய்ய வேண்டிய மூன்று காரியங்கள் – முதலாவது நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் நேரம், இரண்டாவது நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் திறமைகள்

அல்லது தாலந்துகள் அல்லது வரங்கள் மற்றும் மூன்றாவது நம்மிடம் இருக்கும் நமது செல்வம் அல்லது உலக சம்பத்து.

## நமது நேரம்

நேரம் அனைவருக்கும் பாரபட்சமின்றி சமமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் நேரத்தை வீணாக்காமல் பயனுள்ள விதத்தில் பயன்படுத்தவேண்டும். நமது உலகப் பிரகாரமான பணிகளைச் சரியாகத் திட்டமிட்டு அவைகளைத் திட்டமிட்ட நேரத்தில் முடிக்காவிட்டால், தேவ பணியைச் செய்வதற்கு நமக்கு நேரம் கிடைப்பது கடினம். 8 மணி நேரத்தில் செய்ய வேண்டிய வேலையை 12 மணி நேரத்தில் முடித்தால், வேறு வேலை செய்வதற்கு நேரம் இருக்காது. அதாவது வேதம் வாசிக்க, ஜெபிக்க, ஊழியம் சார்ந்த பணிகளைச் செய்ய, குடும்பத்திற்கு நேரம் கொடுக்க, ஓய்வு எடுக்க இயலாது.

இயேசு கிறிஸ்து வாழ்ந்தபோது தமது பணியை நிறைவேற்றி முடிக்க 3 1/2 வருடங்களே உண்டு என்பதை அவர் அறிந்திருந்தார். ஆனாலும் குறைந்த நாட்களே உண்டு என்பதால், அவர் தம் பணியை அவசரப்பட்டும் செய்யவில்லை. தம்முடைய அனைத்துப் பணிகளையும் நிதானமாக நேர்த்தியாகச் செய்தார் என்று வேதத்தில் நாம் படிக்கிறோம். பரி. பவுல் எபேசியர் 5:16-ல் ‘‘நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்” என்று எழுதுகிறார். நாம் வாழும் நாட்கள் கொடிதான நாட்களானதால் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள காலத்தை அல்லது நேரத்தை நேர்த்தியாகப் பயன்படுத்த வேண்டும்.

நேரத்தைச் சரியாகப் பயன்படுத்த எதை முதலில் செய்யவேண்டும், எதை இரண்டாவது செய்யவேண்டும் என்று முன்னுரிமை கொடுக்கவேண்டும். லூக்கா 15:8-10-ம் வசனங்களில் நாம் படிக்கும் பெண் – தொலைந்துபோன தனது வெள்ளிக் காசைக் கண்டுபிடிக்க முதலாவது விளக்கைக் கொளுத்தி, பின் வீட்டைப் பெருக்கி, மூன்றாவதாக ஜாக்கிரதையாகத் தேடி காசைக் கண்டுபிடிக்கிறாள். இப்படி திட்டமிட்டுப் பணிபுரிந்தால் நேரம் விரயமாவதைத் தடுக்கலாம். ஊழியத்தில் திட்டமிடக் கூடாது என்று சிலர் கருதுகிறார்கள். லூக்கா 14:28-30-ம் வசனங்களில் கோபுரம்கட்டுமுன்னும், போருக்குச் செல்லுமுன்னும் திட்டமிடுவதைக் குறித்து இயேசு பகர்ந்து கொள்வதைப் படிக்கிறோம். எனவே திட்டமிட்டு நமது நேரத்தை முறையாக, தேவ நாமம் மகிமைப்படும் விதத்தில் செலவு செய்யவேண்டும்.

## நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் திறமைகள் (தாலந்துகள்)

திறமைகள் / தாலந்துகள் / வரங்கள் எல்லோருக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. எல்லோருக்கும் சமமாகக் கொடுக்கப் படாவிட்டாலும், ஒவ்வொருவருக்கும் குறைந்தது ஒரு தாலந்தாவது / வரமாவது கொடுக்கப்பட்டிருக்கும். ரோமர் 12:6-ன் படி ஒவ்வொருவருக்கும் வெவ்வேறான வரம் கொடுக்கப்பட்டுள்ளது. பலர் தங்களுக்கு எந்த திறமையும் / தாலந்தும் கொடுக்கப்படவில்லை என்று நினைக்கிறார்கள். நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் தாலந்தைக் கண்டுபிடித்து, அதை தேவ நாம மகிமைக்காகப் பயன்படுத்தவேண்டும். நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் திறமைகளையும் தாலந்துகளையும் பிறர் நலனுக்காகப் பயன்படுத்த வேண்டும். 1 பேதுரு 4:10 – “அவனவன் பெற்ற வரத்தின்படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்துகொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர்போல, ஒருவருக்கொருவர் உதவிசெய்யுங்கள்.”

நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும்

வரங்களை நாம் பயன்படுத்தினால், நமக்குக் கூடுதல் ஆசீர்வாதங்கள் கிடைக்கும். பயன்படுத்தாவிட்டால், நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வரங்களையும் நாம் இழந்துவிடக்கூடும். மத்தேயு 25:14-30-ல் இயேசு கிறிஸ்து கூறும் தாலந்துகள் உவமையில், தங்களுக்குக் கொடுக்கப்பட்ட தாலந்துகளைப் பயன்படுத்தியவர்கள் கூடுதல் ஆசீர்வாதங்களைப் பெற்றனர். ஆனால், பயன்படுத்தாமல் மண்ணில் புதைத்துவைத்தவனிடமிருந்து இருந்ததும் எடுத்துக்கொள்ளப்பட்டது; அவன் தண்டனையும் பெற்றான். எனவே, நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் திறமைகளையும், தாலந்துகளையும், வரங்களையும் தேவ நாமம் மகிமைப்படும்படி பயன்படுத்த அழைக்கப்படுகிறோம்.

## நமது செல்வம்

செல்வமும் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறான அளவில் கொடுக்கப் பட்டுள்ளது. நாம் பயன்படுத்தும் அளவுக்கு ஏற்றபடி நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. செல்வத்தைக் கையாளுவதில் நாம் மிகவும் கவனமாக இருக்கவேண்டும். லூக்கா 12:34-ல் "உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்'' என்றும், அதே நேரத்தில் 1 தீமோத்தேயு 6:10-ல் ''பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது'' என்றும் படிக்கிறோம். பணம் நம்மால் பயன்படுத்தப்பட வேண்டுமே அல்லாமல், பணத்திற்கு நாம் அடிமைகளாகிவிடக் கூடாது. பொதுவாக மனிதர்கள்- ''இது என் பணம். என் தொழில் மூலம், என் வியாபாரத்திலிருந்து நான் சம்பாதித்தது. இதில் ஆண்டவருக்குக் கொடுக்கவேண்டிய தசம பாகத்தைக் கொடுத்துவிடுவேன். மீதமுள்ளவைகள் என்னுடையவைகள். அவைகளை என் விருப்பத்தின்படி செலவுசெய்வேன்" என நினைக்கிறார்கள். இது தவறான மனப்பான்மை. அனைத்தும் கர்த்தருடையது. அவருடையதை அவருடைய விருப்பத்தின்படி செலவு செய்ய வேண்டும். ஏனெனில், ஐசுவரியத்தைச் சம்பாதிக்கிறதற்கான பெலனைக் கொடுக்கிறவர் கர்த்தர் என்று உபாகமம் 8:18 சொல்கிறது.

நமது செல்வத்தை ஊழியங்களுக்கு உதவ நாம் தியாகம் செய்யும்போது, உண்மையான ஊழியங்களுக்கு உதவ கவனமாயிருக்க வேண்டும். ஏனென்றால் தவறான ஊழியர்களும், ஊழியங்களும் பெருகிப்போன நாட்களில் நாம் வாழ்கிறோம். எனவே, உண்மையான ஊழியங்கள் வளர நமது செல்வத்தைத் தியாகம் செய்யவேண்டும். அது தான் ஆசீர்வாதம். 'தியாகம்' என்பது நம்மைப் பாதிக்கவேண்டும். நிறைவிலிருந்து தியாகம் செய்வதைப் பார்க்கிலும், தேவைகள் மத்தியிலிருந்து நாம் தியாகம் செய்வதையே ஆண்டவர் விரும்புகிறார் (மாற்.12:41-44).

தியாகம் செய்வதற்கு, ஜீவபலியாக நம்மை முழுமையாக அவரிடம் ஒப்புக்கொடுப்பதற்கு கர்த்தர் நம்மைத் தெரிந்துகொண்டார். இயேசு கிறிஸ்து நமக்காகத் தமது ஜீவனையே தியாகம் செய்தார். இயேசு கிறிஸ்துவுக்காக நாம் நமது நேரத்தையும், திறமையையும், செல்வத்தையும் தியாகம் செய்ய ஆயத்த மாயிருக்கிறோமா? ஜிம் எலியட்டின் புகழ்பெற்ற வார்த்தைகள்: "தன்னால் இழக்க முடியாததைப் பெறுவதற்கு தன்னால் வைத்திருக்க முடியாததைக் கொடுப்பவன் முட்டாளல்ல.'' நம்மிடம் இருப்பவைகள் எதுவும் நிரந்தரமல்ல. நிரந்தரமான நித்திய வாழ்வைப் பெறுவதற்கு நிரந்தரமற்ற நமது அனைத்தையும் நாம் இழக்க அல்லது தியாகம் செய்ய ஆயத்தமாகுவோம்.

*"உனக்காக நான் மரித்தேனே,*
*எனக்காக நீ என்ன செய்தாய்?"*

**- திரு. ரெஜினால்டு,**
நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு - தலைவர்.



# அழகிய சங்கமம் - 2023

அறுவடை நாயகரே ஒன்றாய் கூடி வந்தோம், எத்தனை அழகு அல்லேலூயா, இது அழகிய சங்கமம் அல்லேலூயா! திரளானோர் கலந்து கொண்ட அழகிய சங்கமத்தில் கர்த்தர் ஆகாய் தீர்க்கதரிசி மூலம் செருபாபேலுக்கு "ஆனாலும், செருபாபேலே, நீ திடன் கொள். தேசத்தின் எல்லா ஜனங்களே, நீங்கள் திடன் கொள்ளுங்கள், வேலையை நடத்துங்கள். நான் உங்களுடனே இருக்கிறேன். நான் உன்னை முத்திரை மோதிரமாக வைப்பேன், **நான் உன்னைத் தெரிந்துகொண்டேன்"** என்று சொன்ன வசனத்தின் அடிப்படையில் தேவனுடைய வார்த்தையைப் பகர்ந்து கொண்ட **முனைவர். வேலண்டைன் டேவிதார்,** இயக்கத்தின் பொது காரியதரிசி **அருட்திரு. ஜாண் பெர்லின்,** இயக்கத்தின் எதிர்பார்ப்பு, வாழ்த்துரை போன்றவைகளைப் பகர்ந்து கொண்ட இயக்கத்தின் தலைவர். **திரு. ரெஜினால்டு** இவர்களுக்காக தேவனைத் துதிக்கிறோம். இயேசுவின் குடும்பத்தின் அங்கங்களாய், நற்செய்திப்பணியின் பிம்பங்களாய் ஐக்கியம், அன்பு போன்ற குணாதிசயங்களோடு இந்த வரலாற்றுப் புகழ்பெற்ற **பர்தலேமேயு சீகன்பால்க்** ஊழியம் செய்த தரங்கை கடற்கரையில் 2023 ஜனவரி 28 சனிக்கிழமை மாலை மயங்கும் சந்தியா நேரத்தில் பாடல் மற்றும் TELC தரங்கை சேகரத்தின் ஆயர் **அருட்திரு. சாம்சன் மோசஸ்** அவர்கள் சீகன்பால்க் அவர்களின் மிஷனரி ஊழியத்தைப்பற்றி வெகுசிறப்பாக எடுத்துக்கூறியது, அனைவரது உள்ளத்தையும் தொட்டது. அதன்பிறகு தேவனுடைய வார்த்தை வழங்கப்பட்டு, அர்ப்பணிப்பின் ஜெபத்தோடு அந்த நாளின் கூடுகை நிறைவுபெற்றது. மறுநாள் ஜனவரி 29 ஞாயிறு காலை 5.45 மணிக்கு ஞாயிறு ஆராதனை மற்றும் கர்த்தரின் பந்தியை நடத்திக்கொடுத்த CSI திருச்சி – தஞ்சை பேராயம், காரைக்கால் தரங்கம்பாடி மறைமாவட்டத் தலைவர் **அருட்திரு. திருமதி. மேரி ஜெஸி, CSI** காரைக்கால் தரங்கம்பாடி போதகசேகரத்தின் ஆயர் **அருட்திரு. ரூபன் பிரபு, TELC** தரங்கை சேகரத்தின் ஆயர் அருட்திரு. சாம்சன் மோசஸ் மற்றும் மிஷனரி ஆயர்கள் ஆகியோருக்காக தேவனைத் துதிக்கிறோம். அதனைத் தொடர்ந்து தேவனுடைய வார்த்தை, தொழில் முனைவோர் நேர்காணல், ஆடிட்டர் கலந்துரையாடல், அரசாங்கச் சலுகைகள் **(திரு. தங்கராஜ், CIM)**, குறுநாடகம், அபிநயம் போன்றவைகள் கூடுகையின் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தன.

கூடுகையில் 1152 பேர் (60% ஸ்கேன் அங்கத்தினர்கள், தலைவர்கள் மற்றும் 40% ஜெபக்குழுத்தலைவர்கள், கௌரவ முன்னேற்றப்பணி செயலர்கள் மற்றும் மிஷனரிகள்) பங்கேற்றனர். கூடுகையில் பங்குபெற்றோர் சாட்சியாக வாழவும், தேசத்தின் பாரத்தைப் பெற்றுக்கொள்ளவும், ஜெபக்குழு அமைத்து ஜெபிக்கவும், நற்செய்தி ஊழியம்



செய்யவும், மிஷனரிப்பணியில் தலைவர்களாகச் செயல்படவும், ஆலயத்திற்கு குடும்பமாகச் செல்லவும், வியாபாரத்தில் உண்மையாய் இருக்கவும், வேதவாசிப்பு, தனிஜெபம், குடும்ப ஜெபம் செய்வோம் என்றும் தீர்மானித்தனர். இக்கூடுகையின் மூலமாக 24 மிஷனரி ஆதரவாளர்கள், 25 குழந்தை ஆதரவாளர்கள், 65 புதிய சந்தாதாரர்கள் கிடைக்கப்பெற்றனர். அன்று ஞாயிறு மாலை 4.00 மணியுடன் கூடுகை நிறைவுற்றது. கூடுகை நாட்களில் வளாகத்தைத் தந்து உதவிய TELC நிர்வாகத்தினர்களுக்கும், பள்ளி மற்றும் விடுதியைத் தந்து உதவிய தலைமை ஆசிரியருக்கும் மற்றுமுள்ள விடுதிக்காப்பாளர்களுக்கும், உதவி செய்த தரங்கம்பாடி ஜெபக்குழுத்தலைவர்களுக்கும் **(திரு. ஜேம்ஸ்ரூபன் ஜெயக்குமார் & Er. நெல்சன்)**, வாலிபர்களுக்கும், மிஷனரிகளுக்கும், தன்னார்வ ஸ்கேன் / ஜெபக்குழுத்தலைவர்கள், கூடுகையின் கன்வீனர், பொருளாளர், உணவு, பந்தல், ஒலி-ஒளி, பதிவு மற்றும் பல்வேறு உதவிகள் செய்த அனைவருக்காகவும் தேவனைத் துதிக்கிறோம். கூடுகை முடிந்ததற்குப் பிறகு 'ஜெபத்தின் வல்லமை எவ்வளவு பெரிது' என்பதை அனைவரும் கற்றுக்கொள்வதற்கு தேவன் உதவிசெய்தார். எப்படியெனில், அன்று இரவிலிருந்து தொடர்ந்து 4 நாட்கள் மழை கொட்டித் தீர்த்தது. "இந்த ஜனத்தை எனக்கென்று ஏற்படுத்தினேன்; இவர்கள் என் துதியைச் சொல்லி வருவார்கள்" (ஏசா.43:21) என்ற வசனத்தின்படி முகாமை தேவன் ஆசீர்வதித்துக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

**- அருட்திரு. அகஸ்டஸ் புஷ்பராஜ்**

ஸ்கேன் பிரிவு - (FMPB)



# மிஷனரிப் பிரதிஷ்டை

மதுரை, திருப்பாலை - தூய பேதுரு ஆலயத்தில் வைத்து, 2022 டிசம்பர் 4-ம் தேதி தூய பேதுரு ஆலயம் சார்பாக திரு. அருண்குமார் (லக்கன்பூர் - சத்தீஸ்கர்), தோப்பூர் திரு. தாமஸ் விஜயகுமார் குடும்பம் சார்பாக திருமதி. சாரதி அருண்குமார் (லக்கன்பூர்), திருநகர் - ஜெபக்குழுத்தலைவர் திரு. தங்கராஜ் குடும்பம் சார்பாக திரு. எலியா சந்திரன் (சிநேகாலயா, சென்னை) ஆகியோர் நமது மிஷனரிகளாக அச்சபை போதகர் அருட்திரு. J. ஜெபக்குமார் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டனர். சபை செயலர் திரு. P. மதிவாணன் இன்பராஜ் பிரதிஷ்டை ஆராதனையைச் சிறப்பாக ஒழுங்குச் செய்திருந்தார்கள். தேவனுக்கே மகிமை!



இந்தக் கல்வியாண்டு 2022-2023-ல் 10-ம் & 12-ம் வகுப்பு அரசாங்கப் பொதுத்தேர்வு எழுத இருக்கும் நமது மிஷனரிகளுடைய பிள்ளைகளின் பெயர்ப்பட்டியல்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. இப்பிள்ளைகளின் பெயர்களைச் சொல்லி ஜெபிக்கும்போது, நமது விடுதிகளில் 10-ம் & 12-ம் வகுப்புகள் படிக்கின்ற மற்ற பிள்ளைகளையும், நமது அங்கத்தினர்களின் பிள்ளைகளையும் தங்கள் ஜெபங்களில் தவறாமல் நினைவுகூரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

## 10-ம் வகுப்பு

| வ. எண் | பிள்ளையின் பெயர் | பெற்றோரின் பெயர் |
|---|---|---|
| 1. | ஆஷின் அலெக்ஸ் பிரசாத் | - அருட்திரு. ஜாண் குமார் C. |
| 2. | ஜோவிட்டா சன்னிதி | - திரு. பெஞ்சமின் B. |
| 3. | பால் ஜாய்சன் | - அருட்திரு. பொன்னுசாமி S. |
| 4. | காலேப் பிரய்னார்ட் ராஜ் | - அருட்திரு. விஜயன் T. |
| 5. | ஆயூஷ் பிபோர் கிஸ்கு | - திரு. மிர்ஜியோ கிஸ்கு |
| 6. | நிதின் எபினேசர் புன்யா | - அருட்திரு. லவ்லின் புன்யா |
| 7. | அபிகா கிரேஸ் | - அருட்திரு. எட்வர்ட் ராஜதுரை R. |
| 8. | ஜாய்ஸ் ஏஞ்சலின் | - அருட்திரு. அமிர்காந்தா டிகல் |
| 9. | நய்திக் குமார் | - அருட்திரு. சோமாபாய் வாலுபாய் |
| 10. | ஏனஸ்ட் கமலேஷ் | - திரு. கமித் கமலேஷ் சிங்கபாய் |
| 11. | கருணா சூசன் ஆபிரகாம் | - அருட்திரு. ஆபிரகாம் தாமஸ் |
| 12. | ஜெபா மார்சியா | - அருட்திரு. குமார் V. |
| 13. | ஷாரோன் ஏஞ்சலின் | - அருட்திரு. ஜாண் சாமுவேல் A. |
| 14. | ஐடா ஜெயா ஷாரோன் | - அருட்திரு. டேனியல் அருள்மணி J. |
| 15. | ஜோசப் டேனியல் | - திரு. செந்தில் குமார் P. |
| 16. | சலோனி பானி | - அருட்திரு. மனோஜ் குமார் பானி |
| 17. | சுன்கிம் | - திரு. டிட்டுங்பௌ K. |
| 18. | பியர்சன் பிரின்ஸ் | - திரு. போர்சத் பாபுபாய் |
| 19. | எமிலின் ஷாரோன் | - திரு. கின்ஸ்லி A.R. |
| 20. | ரோஷ்னி | - திரு. பத்வி சோமாலியா |
| 21. | ராக்லேண்ட் | - திரு. பால்ராஜ் R. |

| | | |
|---|---|---|
| 22. | விஜ்யகுமார் நாயக் | – அருட்திரு. மஞ்சியா நாயக் G. |
| 23. | பிரென்சி ஜாஸ்மின் | – திரு. பர்னபாஸ் A. |
| 24. | ஷெர்வின் எபினேசர் | – திரு. ஜெபகுமார் P. |
| 25. | கிறிஸ்டினா பிரீத்தி ஏஞ்சல் | – திரு. துரைசாமி K. |
| 26. | ஜட்சன் டெய்லர் | – அருட்திரு. ஜஸ்டின் Y. |
| 27. | மெல்வின் பிளஸ்ஸோ | – திரு. மித்ரன் E. |
| 28. | ஸ்வீட்லின் ரேச்சல் | – அருட்திரு. ஜாண் பெனின் J. |
| 29. | அனுராக் | – திரு. கெடாம் ஸ்ரீனிவாச ராவ் |

## 12 -ம் வகுப்பு

| வ. எண் | பிள்ளையின் பெயர் | பெற்றோரின் பெயர் |
|---|---|---|
| 1. | சாமுவேல் ஜோனத்தான் | – அருட்திரு. அகஸ்டஸ் புஷ்பராஜ் |
| 2. | பல்லவி பாங்சிங் | – அருட்திரு. வசாவா பாங்சிங் மௌல்யா |
| 3. | ஜெஃபின் பிலிப் | – அருட்திரு. ஆசீர் மோசஸ் தியாகராஜ் S. |
| 4. | ஆனிகுட்டி மனோஜ் | – அருட்திரு. மனோஜ் P. J. |
| 5. | ஜீவா ரோஷினி | – திரு. கிறிஸ்டோபர் P.G. |
| 6. | ஜாண் ஜெபராஜ் | – அருட்திரு. செல்லதுரை J. |
| 7. | ஜெரேமியா ஜெசுமோன் | – அருட்திரு. கோல்டன் J. இன்பராஜ் |
| 8. | ஜான்டி ராக்சன் | – திரு. வில்சன் D. |
| 9. | சுனாட்டி தான்டி | – அருட்திரு. சித்தரஞ்சன் தான்டி |
| 10. | பாக்கியா அக்ஷா | – திரு. தாமஸ் R. |
| 11. | ஃப்ரானிச்சா முஷாஹரி | – அருட்திரு. புரொதீப் முஷாஹரி |
| 12. | ஸ்நேகா | – திரு. திம்மேஷ் M.P. |
| 13. | ஜான் வெஸ்லி | – திரு. செந்தில் குமார் P. |
| 14. | கிறிஸ்டி இவாஞ்சலின் | – அருட்திரு. பாலாஜி G. |
| 15. | ஜான் விக்ளிப் | – திரு. பென்ஹர் Y. |
| 16. | கிரேஸ்லின் வனியா | – திரு. நாகராஜன் M. |
| 17. | ஈவ்லின் ஜாய்ஸ் | – திரு. ஃபெலிக்ஸ் கமாலியேல் எட்வர்ட் S.S. |
| 18. | ஆக்னஸ் ஃபேனி கிராஸ் | – திரு. முத்தையா U. சாமுவேல் |
| 19. | ஷாலோம் பிரின்ஸ் | – திரு. வடகேர் திலீப்பாய் ரங்குபாய் |
| 20. | எபனேசர் ஐசக் | – திரு. கிங்ஸ்லி ஐசக் ஜாண்சன் M. |
| 21. | இம்மானுவேல் ஆரோன் | – திரு. கின்ஸ்லி A.R. |
| 22. | ஹெசத் ஜாண் பரத் | – திரு. ரமாமுனி J.B.V. பிரசாத் |
| 23. | ஐடா மிராக்ளின் | – திரு. மயில்சாமி T. |
| 24. | சன்னி ஜாய்சன் | – அருட்திரு. பாகி சதீஷ் |
| 25. | அனுகிரஹன் ஜுபெல் | – அருட்திரு. ரமேஷ் வேல்ராஜ் A. |
| 26. | பகவந்த் | – அருட்திரு. வேதியப்பன் L. |
| 27. | ஸ்ரவந்தி | – திரு. பாலாஜி நெட்டாலம் |
| 28. | பிரஷன்சா குமாரி | – (லேட்) கோகனி பிரவின்பாய் |

*– மனிதவள மேம்பாட்டுத்துறை – FMPB*



# உலக பெண்கள் தினம்

உலக நாடுகள் மார்ச் 8-ம் தேதியை உலக பெண்கள் தினமாக 1910-லிருந்து அனுசரித்து வருகின்றன. பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதி, பாலின வேறுபாடு, வன்முறைகள், சமபங்கு இல்லாமை போன்ற காரியங்களை உலகின் கவனத்திற்குக் கொண்டுவரும் நாளாக இது நினைவுக்கூரப்பட்டு வருகிறது. இவ்வருட பெண்கள் தினத்தின் கருப்பொருள் 'சமபங்கு தழுவல்' (Embrace equity) என்பது. அதாவது, அனைத்து வேற்றுமைகளையும் (கலாச்சாரம், இனம், மொழி) ஆதரிப்பதாலும், மதிப்பீடு தருவதாலும் உண்டாகும் பற்றும் உற்சாகமும் சமத்துவத்திற்கு நேராக சமுதாயத்தை (equality) வழிநடத்துமாம்.

*வேற்றுமையில் ஒற்றுமை* என்ற சித்தாந்தத்தைக் கொண்ட நம் இந்திய தேசத்தில் கூட, அதைக் கடைப்பிடிக்க முடியாமற்போகும் சூழ்நிலையைக் காண்கிறோம். வெவ்வேறு மொழி, இனம், ஜாதி, மதம், கலாச்சாரம் நிறைந்த நம் தேசத்திலே உலகம் கூறும் சமபங்கு தழுவலோ, சமத்துவ வாழ்க்கைமுறையோ ஒரு பெண்ணிற்கு எட்டாக்கனியாக இருக்கலாம். ஆனால் கர்த்தரைச் சார்ந்து நிற்க, தேவ திட்டத்திற்குக் கீழ்ப்படிய விருப்பம் தெரிவிக்கும் பெண்ணால் அவள் வாழும் சமுதாயத்திற்கும் தேசத்திற்கும் நலமானவற்றைச் சாதிக்க முடியுமா என்றால், அதற்கு வேதாகமமும் திருச்சபை வரலாறும் *ஆம்* என்றே ஆமோதிக்கிறது.

மோசே என்ற தேவ மனிதனைப் பெற்றெடுத்த யோகெபேத் என்ற பெண்ணும், மோசேயின் சகோதரியான மிரியாம் என்ற சிறு பெண்ணும் மோசேயை உயிரோடு காக்க எடுத்துக் கொண்ட முயற்சிகள் ஆச்சரியமானவைகள். விளைவு என்ன? மோசேயின் மனதில் கர்த்தரைக் குறித்த வைராக்கியம் விதைக்கப்பட்டது. அவர் எகிப்து தேசத்தின் அரண்மனை வாழ்வைத் துறந்து தேவனுக்கு நண்பனாய், இஸ்ரவேல் ஜனங்களின் தலைவனாய், தகப்பனாய் உருவானாரே!

புதிய ஏற்பாட்டில் தீமோத்தேயுவின் பாட்டி லோவிசாளும் தாய் ஐனிக்கேயாளும் தங்களுடைய மாதிரியான வாழ்வினாலும், கிரமமான போதனைகளாலும் தீமோத்தேயுவை ஒரு மாயமற்ற விசுவாசியாக வளர்த்தார்களே! அது அல்லவோ, அவரைப் பவுல் பாராட்டும் "மாதிரி வாலிபனாக" பின்நாட்களில்

பேராயராக சமுதாயத்திற்கும் திருச் சபைகளுக்கும் பொறுப்பாக நிற்க வைத்தது!

அது மட்டுமல்ல, சர்வதேச மருத்துவ உலகுக்கும் நன்கு பரிச்சயமானதும், இந்தியாவின் அனைத்து மாநிலத் தோருக்கும் நல்நம்பிக்கைக்குப் பாத்திர முமான வேலூர் கிறிஸ்தவ மருத்துவ மனையை நிறுவிய ஐடா ஸ்கடர் அம்மை யார், 1900-களில் தேவ அழைப்புக்குக் கீழ்ப்படிந்து அவர் திட்டம் நிறைவேற்ற இந்திய மண்ணில் கால்மிதித்தபோது, சூழ்நிலைகள் அத்தனை எளிதாக இருந்திருக்கவில்லை. ஆனால், இன்றும் அது இலட்சக்கணக்கானோருக்கு வாழ்வளிப்பதாக இருக்கிறதே!

நமது நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவிலும் ஆரம்ப நாட்கள் தொட்டு தேவ அழைப்புக்குக் கீழ்ப்படிந்து கலாச்சாரம் கடந்து சென்று தேவதூது சொல்ல அடியெடுத்து வைத்த பெண் மிஷனரி களின் தியாகம், தைரியம், அயராத உழைப்பு ஆகியவற்றை என்னவென்று சொல்வது! அவர்களைத் தாங்கும் பெண்கள் ஜெபக்குழுக்களின் கண்ணீர் நிறைந்த ஜெபமும் தியாகமும் சொல்லி முடியாதவைகளல்லவா? இவற்றின் பலன்தான் இன்று உருமாற்றம் பெற்று நிற்கும் இத்தனை திரளான விசுவாசிகளும், திருச்சபைகளும்!!!

சகோதரிகளே! எத்தனை வேறுபாடுகள் நிறைந்திருந்தாலும் நம்மைப் பெயர் சொல்லி அழைத்துத் தெரிந்துகொண்ட தேவனை நாம் முழுமையாகச் சார்ந்து கொள்ளும்போதும், தேவ திட்டத்திற்குக் கீழ்ப்படியும்போதும் நாம் ஒவ்வொருவரும் சரித்திரம் படைப்பவர்களே!

***அனைவருக்கும் பெண்கள் தின வாழ்த்துக்கள்!***

**– மணிசெல்வி சாரதி**


**இப்பொழுது விற்பனையில்**

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் வெளியீடு**




**திருச்சபை சந்திக்கும் சவால்களை அலசி ஆராய இந்த புதிய வெளியீட்டை**

**வாங்கிப் பயன்பெறுங்கள்!**


### *ஒருமணிநேர அற்புதம்!*

*மகாராஷ்டிரா, போரடி பணித்தளம். வகனியாபானி கிராம சோன்பாய் விவசாயப்பயிர்களைச் சேகரித்துக் கொண்டிருக்கும்போது அவரது விரலில் பாம்பு கடித்துவிட்டதினால், அவரது விரல் வீக்கமடைந்து இரத்தம் சொட்ட ஆரம் பித்தது. உடனே அவர் விசுவாசத்துடன் தேவனிடத்தில் தன்னை விஷ ஆபத்தி லிருந்து காக்கும்படி ஜெபித்தார். ஜெபித்த ஒரு மணி நேரத்தில் தேவன் அற்புதமாக அவரைச் சுகப்படுத்தினார். அல்லேலூயா!*

# மறக்க முடியாத மாமனிதர்கள்



## திருமதி. அமலா விக்டர்
(1957 - 2015)

திருமதி. அமலா விக்டர் நெல்லை மாவட்டம், ஆலங்குளம் என்ற ஊரில் 1957-ம் ஆண்டு அக்டோபர் 11-ம் தேதி ஒரு கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்தார். இவருடைய தந்தை திரு. முத்தையா, தாயார் திருமதி. சொர்ணம். சகோதரி. அமலா விற்கு அன்னபாக்கியம், ஞானசுந்தரி என்ற இரு சகோதரிகளும், ஞானதிரவியம், மோசஸ் என்ற இரு சகோதரர்களும் உண்டு. இவர்தான் கடைசியாகப் பிறந்தவர். எனவே, செல்லப்பிள்ளையாக வளர்க்கப்பட்டார்.

### இளமைப்பருவமும் இரட்சிப்பின் அனுபவமும்

சகோதரி. அமலா பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும்போதே இவருடைய தந்தை மரித்துவிட்டதினால், பள்ளி இறுதி வகுப்பு முடித்தவுடன் இவரை மேற்படிப்பிற்கு அனுப்ப இவரது தாயார் மறுத்துவிட்டார். எனவே, சகோதரி. அமலா தட்டச்சு பயின்றார். 1975-ம் ஆண்டு மார்ச் 29-ம் தேதி நடந்த ஒரு ஆவிக்குரிய கூடுகையில் இவர் கிறிஸ்துவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். பின்னர் திருச்சபையின் ஊழியங்களில் குறிப்பாக ஓய்வுநாள் பாடசாலை ஆசிரியையாகப் பணியாற்றி வந்தார். 1976-ம் ஆண்டு குற்றாலத்தில் நடந்த ஒரு மிஷனரி முகாமில் தன்னை மிஷனரிப்பணிக்கென அர்ப்பணித்தார். அந்தக் கூடுகையில் வட இந்தியாவின் ஆவிக்குரிய தேவையைப் பற்றியும், மிஷனரிப்பணியின் அவசியத்தைப் பற்றியும் பகிர்ந்து கொண்டது சகோதரி. அமலாவையும் ஒரு மிஷனரியாகச் செல்ல உந்தி தள்ளியது. ஆனால் இவர் கடைசி பெண் பிள்ளையாக இருந்தபடியால், குடும்பத்தார் தனியாக இவரை ஒரு மிஷனரியாக அனுப்ப முன்வரவில்லை.

### திருமண வாழ்க்கை

வேதம் வாசித்து ஜெபித்து முடிந்த வரையில் தேவனுடைய பணியைச் செய்து வந்த சகோதரி. அமலா, மிஷனரிகளுக்காக ஜெபிக்கும் ஜெபங்களில் உற்சாகமாகப் பங்குப்பெற்று வந்தார். நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் மிஷனரியாகப் பணியாற்றிவந்த சகோ. விக்டர் முருகேசனை இவருக்குத் திருமணம் செய்ய சகோதரர்களும், தாயும் முன் வந்தனர். சகோதரி. அமலா அதற்கு சந்தோஷமாக இசைந்தார். இவர் நேர்முகத்தேர்வில் பங்குப்பெற்று, தேர்ச்சி பெற்றப்பின் மிஷனரிப்பயிற்சிக்காக வட இந்தியா விலுள்ள அலகபாத்திலுள்ள கல்வாரி வேதாகமப்பள்ளிக்கு 1981-ம் ஆண்டு அனுப்பப்பட்டார். இதற்காக சகோதரி. அமலா சென்னையிலிருந்து தமிழ்நாடு அதி விரைவு ரயிலில் 1981-ம் ஆண்டு ஆகஸ்டு 30-ம் தேதி சென்றார். இவர் பிரயாணம் செய்த ரயில் கோர விபத்திற்குள்ளானது. கிட்டதட்ட 50 பேர் மரித்துவிட்டநிலையில் இவர் பயணம் செய்த ரயில் பெட்டி தடம்புரண்டு சரியாமல் அப்படியே

நின்றதால், சேதமேதுமின்றி தேவன் இவரைக் காப்பாற்றினார். சகோதரியிடம், 'நீங்கள் அடுத்த ரயிலில் திரும்பி சென்னை செல்கிறீர்களா?' எனக் கேட்டபோது, உடனே சகோதரி. அமலா, 'இல்லை, நான் அலகபாத் செல்ல விரும்புகிறேன்!' எனக் கூறினார். இவ்வாறு இவருடைய முதல் வட இந்தியப்பயணமே அதிக சவாலாக இருந்தது. பயிற்சிக்குப் பின் சகோதரி. அமலா & சகோ. விக்டர் முருகேசனுடைய திருமணம் 28-ம் தேதி டிசம்பர் மாதம் 1981-ம் வருடம் நடைபெற்றது.

## பணித்தள திருச்சபை நாட்டும் பணியில்

திருமணத்திற்குப்பின் திரு. விக்டர் முருகேசன் குடும்பம் குஜராத்திலுள்ள செலம்பா என்ற பணித்தளத்திற்கு அனுப்பப்பட்டனர். அங்கு சகோதரி குஜராத்தி மற்றும் மக்கள் பேசும் மொழியைக் கற்று ஊழியத்தைப் பெண்கள் மற்றும் சிறுவர்கள் மத்தியிலும், கணவனுடன் பல கிராமங்களுக்குச் சென்று சுவிசேஷத்தை அறிவித்தும் வந்தார்கள். பணித்தளத்தில் அடிப்படை வசதிகளான தங்கும் வீடு, தண்ணீர், மின்சாரம், கழிவறை போன்ற வசதிகள் மிகவும் குறைவு. எனினும் தேவன் கொடுத்த பணியை மகிழ்ச்சியாகச் செய்து வந்தார்கள். அதற்குப்பின் நவாப்பூர், வியாரா, வகை போன்ற பணித்தளங்களை மையமாக வைத்துப் பணியாற்றினார்கள். 2007-ம் ஆண்டு இறையியல் கல்லூரிக்காக மேற்கு வங்காளத்திலுள்ள செராம்பூர் பல்கலைக்கழகத்திற்குச் சென்று இறையியல் படித்தனர். பின்பு சகோ. விக்டர் தென் மேற்கு மற்றும் மத்திய மண்டலங்களுக்குச் செயலராக நியமிக்கப்பட்டார். சகோ. விக்டர் அவர்களுடன் இணைந்து, இவரும் தங்களுக்குக் கொடுத்த பணியைத் திறமையாக நிறைவேற்றினார்கள்.

தேவன் இவர்கள் குடும்ப வாழ்வை ஆசீர்வதித்து இரண்டு பெண் குழந்தைகளைக் கொடுத்தார். முதல் மகள் பெர்சிஸ் பாக்கியவதி திரு. ஆல்வினுடன் திருமணமாகி, கணவனுடன் சாட்சியாக வாழ்ந்து வருகிறார்கள். இரண்டாவது மகள் ஷகினா திரு. சார்லஸ் சாமுவேலுடன் திருமணமாகி, சென்னையில் வாழ்ந்து வருகிறார்கள்.

## இறுதி நாட்கள்

அருட்திரு. விக்டர் முருகேசன் 2014-ம் ஆண்டு முதல் சென்னை தலைமைச் செயலகத்தை மையமாக வைத்து பணித்தளத்தில் ஆலயக்கட்டுமானப் பணிகளுக்கு மேற்பார்வையாளராகச் செயல்பட்டு வந்தார். சகோதரி பெண்கள் மத்தியில் இயங்கும் ஜெபக்குழுக்களைச் சந்தித்து, உற்சாகப்படுத்தி வந்தார். 2014-ம் ஆண்டு முதுகுவலியால் அவதியுற்ற திருமதி. அமலா விக்டர் வட சென்னையிலுள்ள சுகம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை பெற்று வந்தார். சிகிச்சையின்போது அது கேன்சர் என்றும், உடலின் உள்ளுறுப்புகளில் பரவி தண்டுவடத்தையும் அது பாதித்துள்ளது எனக் கண்டுபிடிக்கப்பட்டு, அதற்கான மேற் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. சற்று தேறிவந்த அவர்களை நோயின் வீரியம் அதிகமாகத் தாக்கவே, 2015-ம் ஆண்டு ஜனவரி மாதம் 8-ம் தேதி அவர்கள் கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்கள். அவர்களது உடல் உயிர்த்தெழுதலின் நம்பிக்கையோடு சென்னை திருமுல்லைவாயிலில் உள்ள கல்லறைத் தோட்டத்தில் அடக்கம் செய்யப்பட்டது. தேவன் அவர்களுக்குக் கொடுத்த ஊழியத்தைத் திறமையாக மகிழ்ச்சியுடன் செய்து முடித்த அவர்களது நல்வாழ்விற்காக கர்த்தரைத் துதிக்கிறோம். அவர்களது கணவர் மற்றும் பிள்ளைகளின் குடும்பங்களுக்காக ஜெபிப்போம்.

*– அருள்திரு. அறிவர். இ. ராஜன்*

# மிஷனரி டைரி

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் எனது ஊழியப்பயணத்தில் நேரிட்ட 2 மறக்க முடியாத சம்பவங்களைக் குறிப்பிடுகிறேன்.

## தேவ வார்த்தை:

எனது 2-வது பணித்தளப்பகுதியான பீஹாரிலுள்ள கயா பணித்தளத்தில் நான் என் உடன் ஊழியருடன் பணிசெய்தபோது எங்களுக்குத் தங்கியிருக்க வாடகை வீடொன்றும் கிடைக்காததால், நாங்கள் அங்குள்ள CNI ஆலயமொன்றில் தங்கியிருந்தோம். அவ்வாறு தங்கியிருந்த நாட்களில் ஒருநாள் மாலைப்பொழுதில் நான் தனியாக அந்த ஆலயத்திற்குள் அமர்ந்திருந்தபோது, கவலை தோய்ந்த முகத்துடன் ஒருவர் ஆலயத்திற்குள் வந்தார். அவரிடம் பேசியபோது, அவர் கயாவிலுள்ள ஒரு கல்லூரியில் படிப்பவரென்றும், அவர் பெயர் நந்தகுமார் என்றும் அறிந்து கொண்டேன். அவருடைய தகப்பனார் பீஹார் அரசாங்கத்தில் நல்ல உயர்ந்த நிலையில் இருந்ததால், அவர் தன் மகனுக்கு உணவு சமைத்து கொடுப்பதற்கேற்ற நல்ல வேலையாளுடன் அவரை வாடகை வீடொன்றில் தங்க வைத்திருந்தார். நந்தகுமார் என்னிடம், தான் அந்த ஆலயத்தின் சுற்றுச்சுவரில் எழுதப்பட்டிருந்த வேத வசனத்தை வாசித்ததாகவும், அதனால் இயேசுவைக் குறித்து மேலும் அறிய விரும்புவதாகவும் கூறினார். ஆனால், எனக்கு அந்நாட்களில் ஹிந்திமொழி அதிகப் பரிச்சயமாகாததால், சற்று சமாளித்து அவரிடம் சுவிசேஷத்தைக் கூற ஆரம்பித்தேன். அதைத்தொடர்ந்து அவர் தினமும் மாலையில் அங்கு வரத் தொடங்கினார். பின்பு அவர் அநேக நாட்களாக என்னைத் தனது வீட்டிற்கு வரும்படி வருந்தி கேட்டுக்கொண்டதின் பொருட்டு, ஒருநாள் மாலை அவருடைய வீட்டிற்குச் சென்றேன். அப்போது, அவ்வீட்டின் சுவரில் வேறு எந்த கடவுளின் படமுமில்லாமல் இயேசுகிறிஸ்துவின் படம் மாத்திரம் இருப்பதைப் பார்த்து மிகுந்த ஆச்சரிய மகிழ்ச்சி கொண்டேன். அவருக்கு இயேசுவின் படம் எப்படி கிடைத்தது என்பதும், அவர் அதை தைரியமாக அவரது வீட்டின் சுவரில் போட்டிருந்ததும் என்னைப் பெரும் வியப்பிற்குள்ளாக்கியது. ஆம்! சுவிசேஷம் எத்தனையாய் மனிதர்களை மாற்றுகிறது. பார்க்லே என்பவர் கூறுவது போல, 'தேவ வார்த்தை' மனிதர்களை மாற்றும் ஆற்றல் கொண்டது.

## தியாகம்:



அருட்திரு. அலெக்ஸாண்டர் அருளானந்தம்
(பணி நிறைவுப்பெற்ற மிஷனரி)

ஒருநாள் காலையில் அதிக நாட்களாக எனக்கு அறிமுகமான ஒரு குடும்பத்தைச் சந்திக்கச் சென்றேன். அவ்வீட்டு நபர் தணிக்கை நிறுவனமொன்றை நடத்திக்கொண்டிருந்தார். அவருக்குத் திருமணமாகி, 2 பிள்ளைகள் இருந்தனர். அவருடைய மனைவி நல்ல வசதியான குடும்பத்தைச் சார்ந்தவர். சில மணித்துளிகள் நான் அவர்களோடிருந்து தேனீர் அருந்தி, அவர்களுக்காக ஜெபித்துவிட்டுப் புறப்படும்போது, அவருடைய மனைவி என்னைக் காத்திருக்கச் சொல்லிவிட்டு வீட்டிற்குள் சென்றார். சென்றவர், துணியால் மூடப்பட்டிருந்த ஒரு பொட்டலத்தை என்னிடம் கொண்டுவந்து கொடுத்தார். பின்பு சில விநாடிகளில் தெரியவந்தது, அப்பொட்டலத் திற்குள் இருந்தது அவருடைய தாலியும், அவரது திருமணத்திற்குப் பெற்றோர்கள் கொடுத்த பிற

நகைகளும் என்பது. அவர் அதைக் கொடுத்துவிட்டு, நமது பணித்தளத்தில் ஓர் ஆலயம் கட்ட அதைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்றார். அவரிடமிருந்து அதை நான் பெற்றுக்கொள்ளும்போது, என் கைகள் நடுங்கின. அதைப் பெற்றுக்கொள்ளலாமா, வேண்டாமா? என எண்ணி, அவருடைய கணவரைப் பார்த்தேன். அவர் அதை நமது ஊழியத்திற்குப் பயன்டுத்திக்கொள்ள பெற்றுக்கொள்ளுமாறு தனது தலையை அசைத்தார். கர்த்தருக்குக் கொடுப்பது மனிதர்களுக்குத் தெரிய அவசியமில்லை. அது தேவனுக்கு மட்டுமே தெரிந்திருந்தால் போதுமானது. நம் தேசத்தை தேவன் தமது வார்த்தையாலும், நமது ஜெபத்துடன்கூடிய தியாகத்தாலும் சந்திக்க உதவி செய்வாராக!



## பணித்தள விஜயம்

மதுரையிலிருந்து பணித்தள விஜயமாக ஒடிசா மாநிலத்தின் பணித்தளங்களைப் பார்வையிட 10 பேர் கொண்ட குழுவினர் சென்றோம். 2022 நவம்பர் 2,3-ம் தேதிகளில் தல்பும்கார் சிறுவர் இல்லத்தில் உத்கல் பிராந்திய மிஷனரிகளோடு இணைந்து உபவாசித்து ஜெபித்தோம். பின்பு தல்பும்கார் சிறுவர் விடுதிக்கென ஜெனரேட்டர் வாங்குவதற்கு உதவிசெய்யத் தீர்மானித்தோம். 4-ம் தேதி ஜகனாத்பூர் விசுவாசிகளோடு இணைந்து தேவனை ஆராதித்தோம். அதன்பின் ஒடிசா மாநிலத்தில் தேவன் அநேக ஊழியர்களையும், மகத்தான ஆத்தும அறுவடையையும் தர இன்னும் தீவிரமாய் ஜெபிக்க, கொடுக்கத் தீர்மானித்து மதுரை வந்தடைந்தோம். தேவனுக்கே மகிமை!


## FORM IV

| | | |
|---|---|---|
| Place of Publication | : | 29, High School Road, Ambattur, Chennai - 53 |
| Periodicity | : | Monthly |
| Printer's Name | : | RASI GRAPHICS PRIVATE LIMITED |
| Nationality | : | Indian |
| Address | : | 69-71-A, Sidco Industrial Estate, Thirumalisai - 600124. |
| Publisher's Name | : | S. John Berlin |
| Nationality | : | Indian |
| Address | : | FMPB - HEAD QUARTERS, 29, High School Road, Ambattur, Chennai - 600 053. Phone: 044-26570404 |
| Owner's Name | : | Friends Missionary Prayer Band |

I hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Date: 01.03.2023

Publisher
S. John Berlin

**1 மார்ச் புதன்**

*உபவாச ஜெபநாள்*

## பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. டிங்கு செமி, திரு. தல்சகாம் சுவாண்தக்
திருமதி. சுரபி பீரோ அசோக் நாயக்
திருமதி. இலா பமெய் செமி
திரு. பினோத் சம்பிரமரி, திரு. லெட்கோலுன் பய்தே
திரு. லுன்கிம் டோங்காம் கோங்சய்
திரு. டிட்டுங்பௌ K., திரு. ஜெய்பீர் சிங்
திருமதி. டிங்நய் நேங் சிங்சன்
திரு. தீஹோ S., திரு. ஓம்பிரகாஷ் குப்தா
திரு. தாங்வான்சாங் G., திரு. குல்தீப் சிங்
திரு. ஜம்கோன்காம் ஹயோகிப் L.
திருமதி. மார்கிரெட் சிங் தாஸ்
திரு. நிங்தௌஜம் அலோன்சிங்
திருமதி. ஹாய்ட்டின் மேட் லால்

# ஜம்மு

### நரோத்: ஜீவர் ஜோஸ்வா & ஷேத்ரிமயூம் பிரியா தேவி

**துதிக்க:** மேலும் ஊழிய முன்னேற்றத்திற்காக டோக்ரி மற்றும் பஞ்சாபி மொழிகளையும் தேவ கிருபையால் நமது ஊழியர்கள் நன்கு கற்றுக்கொண்டு வருகின்றனர். 2 விசுவாசிகளுக்கான முகாம்கள், 2 ஆத்தும ஆதாய முகாம்கள், 2 பெண்கள் கூடுகைகள் சிறப்பாக நடத்தப்பட்டுள்ளன. சந்தோஷ் குடிப்பழக்கத்திலிருந்து விடுபட்டு, இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளார். லாலு அதிகமான இரத்தழுத்தப் பிரச்சினையிலிருந்து சுகமடைந்துள்ளார். பதன்கோட் பகுதி லக்கி தீய ஆவியின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். அநேக நாட்களாக தீராத தலைவலியினால் கஷ்டப்பட்டுவந்த பூஜா தனது விசுவாச ஜெபத்தின் மூலம் நல்ல சுகமடைந்து, தற்போது அவரும் அவரது கணவரும் நமது ஆலய ஆராதனைகளில் தவறாமல் பங்கேற்பதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** உள்ளூர் போதகரின் அச்சுறுத்தலால் நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் நாண் கிராம ஆலயக்கட்டுமானப்பணி மீண்டும் தொடங்கப்பட; நாகிரி கிராமப்பகுதியில் ஆலயம் கட்டுவதற்கு தகுந்த நிலமொன்று வாங்கப்பட; நமது விசுவாசியொருவரின் கணவர் அதிக நாட்களாகச் சிக்குண்டு இருக்கும் தனது போதைப்பழக்கத்திலிருந்து மீள; நமது ஊழியத்தை எதிர்க்கும் மாய்சுக் கிராம தீபக் மனந்திரும்ப; போதைப்பழக்கத்திற்கு அடிமையாகி, தனது மனைவியிடம் கொடூரமாக நடந்துகொள்ளும் லக்கி அப்பழக்கத்திலிருந்து விடுபட; திருமணமாகி 20 வருடங்களாகியும் குழந்தையில்லாமல் இருக்கும் பல்வீர் & ஜோதி தம்பதியருக்கு அற்புதமாக குழந்தை பாக்கியம் அருளப்பட; கிராமத்தலைவரால் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கும் பில்லர் கிராம ஆராதனை மீண்டும் ஆரம்பிக்கப்பட ஜெபிப்போம்.

# ஹிமாச்சலப் பிரதேசம்

### ஆனி:

### ஹின் சாவ்ம் & சிங் கோயி கிம்

**துதிக்க:** புதிதாக 600 பேருக்கு சுவிசேஷம் உரைக்கப்பட்டுள்ளது. 80 சுவிசேஷ கைப்பிரதிகளும், 20 புதிய ஏற்பாடுகளும் மக்களிடையே கொடுக்கப்பட்டுள்ளன. கேக்கர் ஆலயத்தில் வைத்து நடைபெற்ற வாலிபர் பயிற்சிக்கூட்டத்தில் 11 பேர் கலந்துகொண்டு தேவாசீர்வாதம் பெற்றுள்ளனர். கழுத்துவலி மற்றும் மூச்சுத்திணறல் பிரச்சினைகளினால் கஷ்டப்பட்டுவந்த புஜுரு ஜெபத்தின் மூலம் சுகமடைந்துள்ளார். ஆலயப்பயன்பாட்டிற்கான கேஸ் சிலிண்டர் மற்றும் அடுப்பு போன்ற பொருட்களை கிறிஸ்துமஸ் நன்கொடை மூலம் வாங்க தேவன் கிருபை அளித்துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கயலிராம் மற்றும் கன்லிராமின் குடும்பங்கள் தீய ஆவியின் பிடியிலிருந்து விடுதலை பெற; மன்பகதூர் குடிப்பழக்கத்திலிருந்து விடுபட; இயேசுவைக் குறித்து கேள்விப்பட்டுள்ள 3 புதிய குடும்பங்கள் அவரை விசுவாசிக்கவும், அதன் பலனைக் காணவும்; வரும்நாட்களில் நடக்கவிருக்கும் வாலிபர் மற்றும் விசுவாசிகளுக்கான பயிற்சிக்கூடுகைகள் நல்லமுறையில் நடைபெற ஜெபிப்போம்.

**2**
**மார்ச்**
**வியாழன்**

### நேர்வா: S. இம்மானுவேல் & சங்கீதா ஜெசிந்தா

**துதிக்க:** புதிதாக 7 கிராமங்களில் கிறிஸ்துவின் நற்செய்தி கூறப்பட்டதின் விளைவாக 235 பேர் ஆவிக்குரிய பயனடைந்துள்ளனர். தனது இரு சக்கர வாகனம் ஆற்றுக்குள் தவறிவிழுந்த விபத்திலிருந்து சஞ்சு ஆபத்தின்றி உயிர் பிழைத்துள்ளார். இப்பணித்தளத்திலுள்ள அத்தால் சபையில் முதல்முறையாக நடத்தப்பட்ட பெண்கள் பயிற்சி நிகழ்ச்சி மிக ஆசீர்வாதமாக நடந்து முடிந்துள்ளது. பாரனு சபையில் வைத்து நடத்தப்பட்ட 2 நாள் சிறுவர் விடுமுறை வேதாகமப்பள்ளி நிகழ்ச்சியில் 8 பிள்ளைகள் பங்கேற்று இயேசுவைப்பற்றி அறிந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இப்பணித்தள விசுவாசிகள் ஞாயிறு ஆராதனையின் முக்கியத்து வத்தை மனதில் கொள்ள; நமது பாரனு சபையாருக்கு ஆராதனை நடத்த இடமளித்துள்ள உரிமையாளர் சிறுநீரகக் கோளாறிலிருந்தும், ஷாமலின் மகன் புற்றுநோயிலிருந்தும் பூரண சுகமடைய; ஆலயத்தை மூடச்சொல்லி மிரட்டுதலுக்குள்ளாகியிருக்கும் அத்தால் சபை மக்களுக்கு தேவ காவலும், வழிநடத்துதலும் கிடைக்க; அலைபேசியையும், ரூ.30,000/-யையும் தொலைத்துவிட்டதினால் மனசோர்புக்கு ஆளாகி, இனி வாழ முடியாது எனச் சொல்லி, வீட்டைவிட்டு வெளியேறியிருக்கும் லலித் சுகபத்திர மாக வீடு வந்து சேர; ஞாயிறுப்பள்ளி வகுப்பு பிள்ளைகள் மத்தியில் எழுச்சியும், ஆவிக்குரிய வளர்ச்சியும் உண்டாக; நமது விசுவாசிகள் தங்களது பழைய பாவங்களுக்கு மீண்டும் அடிமைப்படாமல் இருக்க அவர்களுக்கு அதிக தேவ இரக்கம் கிடைக்க ஜெபிப்போம்.

### ரிகாங்பியோ:
### பப்லு பரசேத் & கல்பனா மாலிக்; சங்கர் A. & ரூத் மேரி

**துதிக்க:** சுவிசேஷம் முதல்முறையாக 6 கிராமங்களைச் சென்றடைந்திருப்பதின் மூலம் 630 பேர் இயேசுவைக் குறித்து அறிந்துள்ளனர். சிறியளவில் தலைவர்கள் பயிற்சியும், விசுவாசிகள் பயிற்சியும் நல்லமுறையில் நடத்தப்பட்டுள்ளன. தேவ கிருபையால் நமது புதிய விசுவாசியான பஞ்சாரகி இரத்தவாந்தி பிரச்சினையிலிருந்தும், மன்பகதூர் இரத்தத்திலிருக்கும் யூரிக் அமிலப்பிரச்சினையிலிருந்தும் அற்புத சுகமடைந்துள்ளனர். ரீனாவின் குடும்பம் விசுவாச மந்தைக்குள் வந்து சேர்ந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தீராத வயிற்றுவலியினால் அவதிப்படும் வசந்த் சுகமடையவும், அவரது குடும்பம் விசுவாச வாழ்விற்குள் வரவும்; கழுத்திலுண்டாயிருக்கும் தீப்புண்களிலிருந்து அனிதாவின் பேரன் விரைவில் முழு சுகமடைய; நமது ஊழிய விரிவாக்கத்திற்கு தன்னார்வ ஊழியரொருவர் கிடைக்க; ரிகாங்பியோ, பாவ்ரி, சாங்லா இனமக்கள் கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை துணிவுடன் அறிக்கை செய்ய ஜெபிப்போம்.

## 3
## மார்ச்
வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. பால் ஆனந்தன் R.
திரு. ஜீவன் ரஞ்சன் மஹாபத்ரா
திரு. ஜாண் சாமுவேல் A.
திருமதி. பிரஸ்துதா பட்டி பானி
திருமதி. மெர்சி எலிசபெத் சிவசங்கரன்
திரு. தாங் சின் லியான் L.

# பஞ்சாப்

### லேஹ்ரகாகா: ஐசக் ஆபேல் & அன்னா ரோஸ்லின்

**துதிக்க:** புதிதாக 2 பேர் கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் வந்து சேர்ந்துள்ளனர். குடிப்பழக்கத்திற்கு அடிமையாகியிருந்த சோம்நாத்தும், சோனமும் அப்பழக்கத்திலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். கிறிஸ்துமஸ் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட சில வாலிபர்கள் ஆலய ஆராதனைக்கு தொடர்ச்சியாக வர ஆரம்பித்திருப்பதை முன்னிட்டு, அங்கே சிறிய ஆராதனைக் குழுவொன்று உருவாகியுள்ளது. வாலிபர்களுக்கென நடத்தப்பட்ட கூடுகையில் 46 வாலிபர்கள் கலந்து கொண்டு, ஊழியத்தில் உதவிசெய்ய தங்களது அர்ப்பணிப்பைப் புதுப்பித் துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பாரு, மங்ரு, மன்பிரீத் மற்றும் ஜெய்பாலின் குடும்பங்கள் கர்த்தரை அறிகிற அறிவில் வளர; நமது ஆலய ஆராதனையில் பங்குப்பெறும் சுனில், சோம்நாத் மற்றும் அவரது நண்பர் கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; வரும்நாட்களில் நடக்க இருக்கும் லெந்துகால கூடுகைகளுக்காகவும், பெண்கள் கூடுகைக்காகவும் ஜெபிப்போம்.

### அஹ்மத்கட் மண்டி: சௌதரி ராஜேஷ் தவ்லேபாய் & சரிதா பால்

**துதிக்க:** இங்கு நடைபெற்ற 2 சத்சங் கூடுகைகளில் பங்குப்பெற்ற 120 பேரில் 90 புதியவர்கள் தேவ வார்த்தையை முதல்முறையாகக் கேட்டுள்ளனர். 15 புதிய ஏற்பாடுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. புதிதாக ஒரு கிராமத்தில் இயேசுத் திரைப்படம் திரையிடப்பட்டதில் அநேகர் கிறிஸ்துவண்டை சேரும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். நடைபெற்ற வேதாகம வகுப்பில் கலந்துகொண்ட சபை மூப்பர்கள் தங்களது பொறுப்புகளைச் சரியாகச் செய்ய ஊக்கம் பெற்றுள்ளனர். அக்பர்பூர் சானா பகுதியைச் சார்ந்த சூரஜ்மாலா தேவி தீய ஆவியின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டு, பித்தப்பைக்கல்பிரச்சினையிலிருந்தும் சுகமடைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிதாக சுவிசேஷத்தைக் கேட்டுள்ள 600 பேரும் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ள; வேதாகம வகுப்புக்குழுவில் உற்சாகமாக ஈடுபட்டு வருகிற வாலிபர்கள் ஆவிக்குரிய வாழ்வில் நன்கு வளர: பரம்ஜீத் கௌர் மற்றும் ரக்ஷ்மண் சிங் மூச்சுத்திணறல் பிரச்சினைகளிலிருந்து விடுதலை பெற; சௌமான் கௌரும், அவரது மகன் அஜையும் தீய ஆவிகளின் போராட்டங்களிலிருந்து விடுவிக்கப்பட; தலையில் ஏற்பட்ட காயத்திற்கு அறுவை சிகிட்சை மேற்கொண்டுள்ள பிரேம் அதிலிருந்து விரைவில் பூரண சுகம் பெற; சுவிசேஷப்பணி செய்யும் நமது ஊழியர்கள் இயேசுவின் நற்செய்தியைக் கேட்பதற்கு மக்களை ஜெபத்துடன் ஊக்குவிக்க ஜெபிப்போம்.

4
மார்ச்
சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜாண் பெர்லின் S.
திரு. திம்மேஷ் M.P., திரு. கிஷாந்தா லிமா
திரு. தினேஷ் மரையா
திருமதி. பன்சூரி மொஹ்லின்

### பர்னாலா: பிதன் ஹன்ஸ்தா & பன்சூரி மோஹ்லின்

**துதிக்க:** தேவ வார்த்தையை 250 பேர் புதிதாகக் கேட்டுள்ளனர். வாலிபர் கூட்டமொன்றும், பெண்கள் கூடுகையொன்றும் அதில் கலந்துகொண்டோருக்கு மிகுந்த ஆசீர்வாதமாக இருந்துள்ளது. மலேரியா காய்ச்சலிலிருந்து ஜஸ்பீன் கௌருக்கு நல்ல சுகம் கிடைத்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஒருவருடக்காலமாக நாக்கில் ஏற்பட்டிருக்கும் தொற்றுக்கிருமி பாதிப்பினால் சாப்பிட இயலாமல் கஷ்டப்படும் பூஜா கௌருக்காக; பிரியங்கா கௌரின் குடும்பம் பிசாசுப்பிடியிலிருந்து விடுபட; குர்மீத் சிங்கின் குடும்பம் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவும், அவ்வீட்டாருக்கு விரோதமாக இருக்கும் நீதிமன்ற வழக்கிலிருந்து அவர்கள் விடுதலை பெறவும்; ஹப்பி, குர்மீத் மற்றும் பிரியங்கா இயேசுகிறிஸ்துவின் விசுவாச மந்தையில் வந்து இணைய; மக்கான் முதுகெலும்பு முறிவுப்பிரச்சினையிலிருந்து பூரண சுகம் பெற ஜெபிப்போம்.

### பட்டிண்டா: சஞ்ஜீப் ஆனந்த் & பிரஸ்துதா

**துதிக்க:** சத்திய வசனத்தை 150 பேர் புதிதாகக் கேட்டுள்ளதோடு, 6 பேர் விசுவாசிகளாகி கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். மண்டிகாலாவில் வைத்து நடைபெற்ற வாலிபர் கூட்டத்தில் 25 பேரும், பெண்கள் கூட்டத்தில் 50 பேரும் கலந்துகொண்டு தேவாசீர்வாதம் பெற்றுள்ளனர். தொடர் மற்றும் ஊக்கமான ஜெபத்தினால் மனநிலை பாதிப்பிலிருந்த கிரண் கௌர் சுகமடைந்துள்ளார். நமது மிஷனரி சகோ. பிரதாப்பின் மனைவி ரேஷ்மி அதிகமான இரத்தசோகை பெலவீனத்திலிருந்து தேவ கிருபையால் சுகமடைந்து வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அநேக புதிய கிராமங்களைச் சுவிசேஷத்தினால் சந்திக்கவும், அப்புதிய மக்களைக் கிறிஸ்துவண்டை வழிநடத்தவும் சரியான தேவ வழிநடத்துதல் கிடைக்க; தர்செம் சிங், ராஜேந்திர சிங் மற்றும் சுக்பால் குடிப்பழக்கத்திலிருந்து மீள ஜெபிப்போம்.

### மான்சா: தெப்ரத்தோ பிஸ்வாஸ் & மன்னா சிங்

**துதிக்க:** சுவிசேஷத்தைப் பகரும்வண்ணமாக 2 சத்சங் நிகழ்ச்சிகள் சிறந்த முறையில் நடத்தப்பட்டுள்ளன. 3 கிராமங்களில் சுவிசேஷம் முதல்முறையாக அறிவிக்கப்பட்டுள்ளது. 800 பேர் புதிதாக சத்திய வசனத்தைக் கேட்டுள்ளனர். 15 நாட்களாக உடல்நிலை பாதிப்பிலிருந்த சந்தீப் சிங்கும், அவரது குடும்பமும் ஜெபத்தின் மூலம் நல்ல சுகம் பெற்றுள்ளனர். 2 கிராமங்களில் வைத்து நடைபெற்ற முழுஇரவு ஜெபங்களில் தேவ பிரசன்னத்தைத் தத்ரூபமாக உணர தேவன் பாராட்டியுள்ள கிருபைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வருகிற மாதங்களில் சந்திக்கத் திட்டமிட்டிருக்கிற 1250 புதிய ஆத்துமாக்களை ஜெபத்துடன் நமது ஊழியர்கள் கண்டெடுக்கவும், அந்த ஆத்துமாக்களின் மனங்களை தூய ஆவியானவர் தமது சத்திய வசனத்திற்கேற்றவாறு ஆயத்தப்படுத்தவும்; நமது விசுவாசியான பூஜா கௌரின் திருமண வாழ்வு நன்கு ஆசீர்வதிக்கப்பட; சுவிசேஷத்தினால் சந்திக்கப்படாத மக்கள் மத்தியில் நடத்தப்போகும் 3 சத்சங் நிகழ்ச்சிகள் அதில் வந்து கலந்துகொள்ளப்போவோருக்கு மிகுந்த ஆவிக்குரிய ஆசீர்வாதத்தைக் கொண்டுவர ஜெபிப்போம்.

## 5 மார்ச்
ஞாயிறு

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. தங்கம்மாள் ஜெபராஜ்
திரு. டேவிட் பாண்டிங், திரு. சுனில் மேத்யூ K.
திருமதி. ஸ்டெல்லா டேவிட் பெருமாள்
திரு. சம்புநாத் நாயக், திரு. ரவி குமார் S.
திரு. லுபின் முர்மு

## மோகா:

### ஜஸ்டின் & சாராள் ஜான்சி ராணி

**துதிக்க:** கிறிஸ்துவின் மந்தையில் 4 புதிய விசுவாசிகள் வந்து சேர்ந்துள்ளனர். 250 புதியவர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. பற்பல கிராமங்களில் 7 இரவுநேர ஆவிக்குரிய கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. ஹர்தீப் சிங் ஜெபத்தின் மூலம் போதைப்பொருள் பழக்கத்திலிருந்து விடுபட்டுள்ளார். கேரத் நெடுநாள் சளி இருமல் தொல்லையிலிருந்தும், குர்பிரீத் நெஞ்சுவலியிலிருந்தும் முழு சுகமடைந் துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அஜித்வால், ஜலாலாபாத், சத்சாக், ராய்கோட், கோட்லி, தரம்கோட், போபாரா, பிந்தர்கலான், கிஷான் புரா, ஜக்ரோன், சிதக் மற்றும் துடிக்கி கிராமங்களில் சுவிசேஷத் திற்கான வாசல்கள் திறக்கப்பட; தங்களது விசுவாசத்தை கிறிஸ்துவில் அறிக்கை செய்து சபையில் இணைந்திருப்போர் கிரமமாக சபை ஆராதனைகளில் வந்து பங்குப்பெற; ரிக்கி, ரசன், மம்தா ரிஜியன் மற்றும் சீமா குழந்தை பாக்கியங்கள் பெற; போப்பிந்தர் கௌர் புற்றுநோயிலிருந்து பூரண சுகமடைய; நமது அஜித்வால் திருச்சபை மூப்பர்கள் ஊழியத்தை அதிக உற்சாகத்துடனும், மிகுந்த அர்ப்பணிப்புடனும் செய்ய; கிறிஸ்தவ வாழ்க்கைத்துணையைப் பெற வாஞ்சிப்போருக்கு அவர்களது விருப்பங்கள் ஈடேற ஜெபிப்போம்.

# ஹரியானா

## ஃபத்தேஹ்பாத்:

### டேவிட் S. & ஜெப கிரேஸ்

**துதிக்க:** சுவிசேஷம் 140 பேருக்கு அறிவிக்கப் பட்டுள்ளது. 10 புதிய ஏற்பாடுகளும், 4 வேதாகமங்களும் விநியோகிக்கப்பட்டுள்ளன. 8 பெண்கள் கூடுகைகளும், 14 சத்சங் கூடுகைகளும், 12 வீடு சந்திப்புகளும் நடந்து முடிந்துள்ளன. குழந்தைப்பேற்றில் சிக்கலுடன் அரசு மருத்துவமனைக்குச் சென்ற ஆஷாவை அவருடைய உறவினர்கள் மந்திரவாதியிடம் அழைத்துச்சென்று, ஒருவித இனிப்பு வகை ஆகாரத்தைத் தந்து அதைச் சாப்பிட்டால் சிரமமின்றி சுகப்பிரசவம் நேரிடும் என்று கூறியபோது, ஆஷா தன்னுடைய ஜெபத்தைக் கேட்டு இயேசு தனக்கு சுகப்பிரசவம் கொடுப்பார் என்று கூறின அவரது விசுவாச அறிக்கையை முன்னிட்டு தேவன் அவருக்கு சுகப்பிரசவத்தைக் கட்டளையிட்டுள்ளார். புதிய விசுவாசியான அஞ்சு கிறிஸ்துவுக்காக ஆத்துமாக்களை ஆதாயம் செய்து வருகிறார். கிறிஸ்துவின்மீது விசுவாசம் கொண்டிருப்பதற்காக தனது மனைவி ரஜினியை எதிர்த்துவந்த கைலாஷ் தனது எதிர்ப்பை கைவிட்டுள்ளார். மூட்டு வலியினிமித்தம் மருத்துவர்களால் அறுவை சிகிட்சைக்கு வலியுறுத்தப்பட்ட பிரகாஷிற்கு ஜெபத்தின்மூலம் அற்புத சுகம் கிடைத்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் ரோகித், அசோக் மற்றும் ராதாவின் கணவர் மனந்திரும்பி இயேசுவை ஏற்றுக்கொள்ள; ஹன்ஸ்ராஜின் வீட்டில் கூடி ஆராதிக்கும் ஜண்சால் கிராம திருச் சபையினருக்கு இடையூறாக இருக்கும் அவரது வீட்டினருகிலுள்ள மதுக்கடை நிரந்தரமாக மூடப்பட; லட்டு தோல் ஒவ்வாமைப்பிரச்சினையிலிருந்தும், கணவனை இழந்துள்ள உஷா எய்ட்ஸ் நோய்ப்பிரச்சினையிலிருந்தும் பூரண சுகமடைய; நிஷா, நஜீப் கௌர், சரோஜ், பபிதா ஆகியோருக்கு தங்களது கணவர் களோடிருக்கும் பிரச்சினைகள் நீங்கி, அவர்கள் மீண்டும் சந்தோஷமான குடும்ப வாழ்வு வாழ ஜெபிப்போம்.

## 6 மார்ச் திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜேம்ஸ் அருள்ராஜ் M.

### ஜீவன் நகர்:

**அலியாக்கீம் ஜெனா & தீபிகா**

**துதிக்க:** சுவிசேஷம் 130 பேருக்கு முதல்முறையாக எடுத்துரைக்கப் பட்டுள்ளது. 27 புதிய ஏற்பாடுகளும், 2 வேதாகமங்களும் விநியோகிக் கப்பட்டுள்ளன. 6 சத்சங் கூடுகைகளும், 12 உபவாச ஜெபக்கூடுகைகளும், ஊழியப்பின்தொடர்ப்பணிகளும் செய்யப்பட்டுள்ளன. ஓட்-ராஜ்புத் இன மக்களிலிருந்து 3 குடும்பங்களும், தனக் இனமக்களிலிருந்து 2 குடும்பங் களும் சுவிசேஷத்திற்கு செவிசாய்ப்ப தோடு, தபாவாலி சபை ஆராதனையில் தவறாமல் வந்து பங்குப்பெறவும் செய் கின்றனர். தபாவாலி சபை வாலிபர்கள் ஆவிக்குரிய செயல்பாடுகளில் தங்களது ஈடுபாட்டை உற்சாகமாகக் காட்டிவருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஓட்-ராஜ்புத் இனமக்கள் மத்தியில் 50 குடும்பங்கள் சுவிசேஷத் தினால் சந்திக்கப்பட்டு, கிறிஸ்துவின் மந்தைக்குள் இணையவேண்டும் என்ற ஊழியத்திட்டம் நிறைவேற; சாந்த் நகர் பகுதியைச் சார்ந்த நமது விசுவாசிகளை மிரட்டி, அவர்களைக் கிராமத்தை விட்டு வெளியேற்ற முனையும் நம்தாரி குழுவினர் மனந்திரும்பவும், நமது விசுவாசிகள் தயங்காமல் தங்களது விசுவாசத்தில் உறுதியாக நிற்கவும்; சத்திய வசனத்தைக் கேட்கும் பால்மிகி, பசிகார், கும்ஹார், சமார், ஓட்-ராஜ்புத், ராய் சீக், மஜ்பி சீக், தனக் மற்றும் நாயக் இனமக்கள் கிறிஸ்துவின் மந்தையில் இணைய ஜெபிப்போம்.

### கலான்வாலி:

**விஜயகுமார் & ஜெபலா**

**துதிக்க:** இப்பணித்தளத்தில் நடைபெற்ற வாலிபர் கூடுகையில் சிறப்பாக 20 பேர் பங்கேற்றுள்ளனர். 5 புதிய ஏற்பாடுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. புதிதாக 50 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டிருப்பதோடு, ஒரு கிராமமும் சுவிசேஷத்தினால் சந்திக்கப் பட்டுள்ளது. கருத்து வேறுபாட்டின் காரணமாக 6 மாதங்களாகப் பிரிந்து இருந்த குர்தித்தா சிங் & ராமனின் குடும்பம் மீண்டும் இணைந்து வாழ்கின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பன்னிவாலா ரூல்டு மற்றும் ஜோதக்கா தானி பகுதிகளிலுள்ள புதிய தொடர்பாளர்கள் கிறிஸ்துவைக் குறித்து மேலும் அறிய; பக்கவாதத்தினால் வலதுபக்க சரீரத்தில் பாதிப்படைந்துள்ள பன்னிவாலா ரூல்டு பகுதியைச் சார்ந்த நமது புதிய தொடர்பாளர் ஹர்பன் பூரண குணமடைய; இப்பணித்தள பகுதி யில் நடைபெற்றுவரும் மூர்க்கவெறி சண்டைக்கலவரங்கள் நிறுத்தப்படவும், அப்பகுதி மக்கள் பாதுகாப்புடன் சமாதானமாய் வாழவும்; விசுவாசத்தில் பின்மாற்றமடைந்திருக்கும் கஹாசிங், தாரி மற்றும் கோராசிங் மீண்டும் கிறிஸ்துவை விசுவாசிக்கத் துவங்க ஜெபிப்போம்.

## 7 மார்ச் செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. கில்பர்ட் வில்லியம்ஸ் S.
திரு. சாலமோன் ஞானசேகர் J.
திரு. தாங் கொ லுன் கிப்ஜென்
திரு. ஜாண் அருள்ராஜ்
திருமதி. லியான்பியக்னெமி சிங்

# உத்தராகண்ட்

## நானக்மட்டா:

### சிவகுமார் & சுசிலா மராக்

**துதிக்க:** முதல்முறையாக சுவிசேஷத்தை 60 பேர் கேட்கும் பாக்கியமடைந்துள்ளனர். 4 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. தேவ கிருபையால் ஒருவர் கிறிஸ்துவின் மந்தைக்குள் இணைந்துள்ளார். 10 புதிய ஏற்பாடுகளும், 4 வேதாகமங்களும் மக்கள் மத்தியில் கொடுக்கப்பட்டுள்ளன. 6 வீட்டு ஜெபக்கூட்டங்களிலும், ஒரு ஆராதனைக்கூட்டத்திலும் விசுவாசிகள் பலர் தங்களது விசுவாசத்தை கிறிஸ்துவில் அறிக்கையிட்டுள்ளனர். திருமணமாகி 3 வருடங்களுக்குப்பின் பிங்கி ஜெபத்தின்மூலம் குழந்தை பாக்கியம் பெற்றுள்ளார். நமது மிஷனரி விஷப்பாம்புக்கடியிலிருந்தும், நமது விசுவாசி சத்விந்தர் சிங் பெரிய விபத்தினின்றும் பாதுகாக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ரிம்கு சிங்கிற்கு அவரது குடும்பத்தின் தேவைகளைச் சந்திப்பதற்கேற்றவாறு நல்லதொரு வருவாயுள்ள வேலை கிடைக்க; பெரி கரேயிற்கு சூடான தண்ணீர் கால்களில் கொட்டிய தினிமித்தம் உண்டான காயங்களிலிருந்தும், குர்மித் கௌருக்கு பெண்ணியப்பிரச்சினையிலிருந்தும் விரைவில் நல்ல சுகம் கிடைக்க: ராஜ் கரே தீய ஆவியின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட; முதுகலைப்பட்டதாரிகளான ரவிந்தர் கரே மற்றும் சிமிர்ஜீத் கௌருக்கு நல்ல அரசாங்க வேலைகள் அமைய ஜெபிப்போம்.

## மல்தன்சோர்:

### ஷிஷு பால் & அனிதா

**துதிக்க:** சிவாரா மற்றும் காந்த்ராபாத் கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டு, 80 பேர் புதிதாக சத்திய வசனத்தைக் கேட்டுள்ளனர். 20 புதிய ஏற்பாடுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. சாய்னா மற்றும் பஞ்சாரா சமூகத்திலிருந்து 4 குடும்பத்தினர் புதிதாக நமது ஊழியத்தொடர்பிற்குள் வந்துள்ளனர். ரனோ கௌர் பக்கவாதப் பிரச்சினையிலிருந்து பூரண சுகமடைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தூய ஆவியானவர் தாமே கிறிஸ்துவை விசுவாசிக்க அப்புதிய 4 குடும்பத்தினரின் இதயங்களை ஆயத்தப்படுத்த; மோகன் நகர் மற்றும் தாரி கிராமத்திலிருக்கும் ஆலய நிலப்பிரச்சினை விரைவில் சுமூகமாக முடிவடைய; அனிதா, கீதா, பரம்ஜீத் மற்றும் உமா தீய ஆவிகளின் கட்டுகளிலிருந்து விடுவிக்கப்பட; கீதா, அஞ்சலி, பசந்தி, அனிதா, தேஜ்பால், பிரஜேஷ், காளிச்சரண், சம்பா ஆகியோர் கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை அறிக்கையிட ஜெபிப்போம்.

**8**
**மார்ச்**
**புதன்**

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஹமுவேல் லிமா
செல்வி. ராணி உராண்வ்

# டெல்லி

## பட்பர்கன்ஜ்:

### P.G. கிறிஸ்டோபர் & மேபல்

**துதிக்க:** சுவிசேஷத்தினால் 430 புதியவர்கள் சந்திக்கப்பட்டுள்ளனர். 47 புதிய ஏற்பாடுகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. குடியரசு தின விழாவை முன்னிட்டு, 20 விசுவாசிகள் சபையில் கூடி தேசத்திற்காக பாரத்துடன் ஜெபித்துள்ளனர். 85 பிள்ளைகள் இவ்விழா ஆராதனைகளில் பங்கேற்று சுவிசேஷத்தை கதைகள் வாயிலாக கேட்டறிந்துள்ளதோடு, பரிசுப் பொருட்களாலும் உற்சாகப்படுத்தப் பட்டுள்ளனர். காயங்களினாலும், எலும்பு முறிவுகளினாலும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த பால்ராஜ் ஜெபத்தின்மூலம் சுகமடைந்துள்ளார். கத்கேடா கிராமத்தில் நடந்த எதிர்ப்புச் சம்பவத்திலிருந்து நமது சபை விசுவாசிகள் 4 பேர் தேவ கிருபையால் காப்பாற்றப்பட்டுள்ளனர். ஸ்டென்ட் வைத்திருப்பதினால் உண்டான சிறுநீர்நோய்த்தொற்றிலிருந்து பென்னி குணமாகியுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விஜய் பகதூர் மற்றும் குருதீனின் குடும்பங்கள் தங்களது வாழ்வாதாரத்தில் ஏற்பட்டுள்ள நஷ்டத்திலிருந்து மீண்டுவர; அரசாங்கப் பொதுத்தேர்வு எழுதிக்கொண்டிருக்கும் நமது விசுவாசிகளின் பிள்ளைகளுக்காக; பூனம், ராஜா, பிரீத்தி, நேகா, ரோஷன் மற்றும் ஆஷிஷிற்கு நல்ல கிறிஸ்தவ வாழ்க்கைத்துணைகள் அமைய; சுந்தரி, பாத்திமா, கோமல், கரோலின், ரேணு ஆகியோர் சுகப்பிரசவம் பெற; ஆஷா, எலிசபெத், லதா ஆகியோர் குழந்தை பாக்கியமடைய; திரிலோக்புரி மற்றும் கல்யாண்புரி கிராமங்களில் விசுவாசிகளிடையே ஒற்றுமையும், சபை கமிட்டி அங்கத்தினர்களிடையே சீரான செயல்பாடும் காணப்பட; விகாஷும், திவானும் வலிப்பு நோயிலிருந்து சுகமடைய ஜெபிப்போம்.

# ராஜஸ்தான்

## காஜுவாலா: V. குமார் & பெட்ரிசியா தமிழ்ச்செல்வி

**துதிக்க:** சுவிசேஷத்தின் மூலம் புதிதாக 100 பேர் சந்திக்கப்பட்டுள்ளனர். 8 சுவிசேஷ கூடுகைகளும், 12 வேதாகம வகுப்புகளும் மற்றும் ஊழியப்பின்தொடர்ப்பணிகளும் முறையே நடத்தப்பட்டுள்ளன. குடும்பப் பிரச்சினையினால் விஷமருந்திய ராஜன்தீப் அற்புதமாக மரணத்திற்கு நீங்கலாகி காப்பாற்றப்பட்டுள்ளார். குர்பிரீத் சிங், ஹர்மன் சிங் மற்றும் ஜஸ்பிரீத் சிங்கின் குடும்பங்கள் சுவிசேஷத்தின்மீது ஆர்வம் காட்டி வருகின்றனர். சுமன் சுவிசேஷத்தின் மீது ஆர்வம் காட்டுவதோடு, கிறிஸ்துவில் நன்கு வளர்ந்தும் வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பொல்லாத ஆவியின் பிடியிலிருந்து வித்யா விடுவிக்கப்பட்டு, அவரும் அவரது குடும்பத்தாரும் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள; சந்தீப் சிங் கிறிஸ்துவில் தனது விசுவாசத்தை அறிக்கை செய்ய வழிநடத்தப்பட; கிரிஷான் சிங்கிற்கு நல்ல வாழ்க்கைத்துணை கிடைக்க; பூலா சிங் மற்றும் அவரது குடும்பம் தங்களது வாழ்வில் கிறிஸ்துவை அறிந்துகொள்ள; குல்தீப் சிங் தனது அந்தரங்கப் பகுதியிலிருக்கும் கட்டிப்பிரச்சினையிலிருந்து பூரண குணமடைய ஜெபிப்போம்.

9
மார்ச்
வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. வசந்தி ஸ்டெல்லா இம்மானுவேல்
திருமதி. பொன்னுத்தாய் ஞானசுந்தரி ஆர்தர்
திரு. டேவிட் P., திருமதி. பிரவதிமணி வினோத் குமார்

## உதய்பூர்:

### ஆஷிஷ் குமார் & சவிதா தேவி

**துதிக்க:** புதிதாக ஒரு கிராமம் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டதின் பொருட்டு, 50 பேர் இயேசுவைக் குறித்து கேள்விப்பட்டுள்ளனர். 30 புதிய ஏற்பாடுகளும், 4 வேதாகமங்களும் அம்மக்களிடையே விநியோகிக்கப்பட்டுள்ளன. கட்கியாபாலா கிராமத்தில் சிறுவர் விடுமுறை வேதாகமப் பள்ளி ஊழிய நிகழ்ச்சியில் 125 சிறுபிள்ளைகள் கலந்துகொண்டு தேவாசீர்வாதம் பெற்றுள்ளனர். ஆஷா இரத்தப்போக்கு பிரச்சினையிலிருந்து நன்கு சுகமடைந்துள்ளார். இரத்த சோகை கோளாறினால் மகப்பேறு மருத்துவர்களால் கைவிடப்பட்டு, மருத்துவ மனையிலிருந்து வெளியேற்றப்பட்ட லாலு சகோதரி தேவகிருபையால் சுகப்பிரசவம் மூலம் ஆரோக்கியமான குழந்தையைப் பெற்றெடுத்துள்ளார். குடியா தீய ஆவியின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** உபத்திரவத்திற்குள்ளாகி இருக்கும் காளிவாஸ் மற்றும் அல்சிகார் கிராம மக்கள் தங்களது விசுவாசத்தில் கிறிஸ்துவுக்குள் உறுதியாக இருக்க; அருணாவிற்கும், மஞ்சுவிற்கும் சுகப் பிரசவம் நேரிட; நமது புதிய தொடர்பாளர் திலீப்பின் மனைவி மீரா பிசாசுப் பிடியிலிருந்து விடுபடவும், அதன் மூலம் அவரது முழுக்குடும்பமும் கிறிஸ்துவில் விசுவாசம் கொள்ளவும்; நரேஷ், ராகுல், ஷாம்புஷ், தேவிலால் மற்றும் பிரபுலாலிற்கு நல்ல கிறிஸ்தவ வாழ்க்கைத்துணைகள் அமைய; சோபானி தனது மனநிலைப் பாதிப்பிலிருந்தும், தீய ஆவியின் கட்டிலிருந்தும் விடுபட ஜெபிப்போம்.

## மிஷனரிப் பிரதிஷ்டை ஆராதனை



ரெட்ஹில்ஸ், எம்.ஏ. நகரிலுள்ள புனித ஜோசப் பள்ளியில் கடந்த 08.01.2023 அன்று நடந்த குடும்பக்கூடுகையில் அருட்திரு. அன்பழகன், அருட்திரு. செல்வராஜ், பாஸ்டர். ஸ்டீபன், பாஸ்டர். பால் அவர்களால் நமது கர்நாடகா மிஷனரி செல்வி. ஹேனா சிங் மற்றும் மகாராஷ்டிரா மிஷனரி செல்வி. சாந்தி முர்மு பிரதிஷ்டை செய்யப் பட்டுள்ளார்கள். அவர்களை திரு. மோகன் மற்றும் திருமதி. பிரசன்னா மகேஷ் தங்களது ஜெபத்தாலும் காணிக்கையாலும் தாங்க முன் வந்திருப்பதற்காக அவர்களுக்கு நன்றிக்கூறி, தேவனைத் துதிக்கிறோம்.

**10 மார்ச் வெள்ளி**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. செல்வகுமார் R.@ ஜோசப் வில்சன்
திருமதி. புரோமிளா சோரேன்
திருமதி. ஷர்மிளா சதீஷ்

# உத்தரப் பிரதேசம்

## கைம்கஞ்ச்:

### எபநேசர் G. சாம் & ஜெபராணி

**துதிக்க:** தேவ வார்த்தையை 50 பேர் முதல்முறையாக ஆவலுடன் கேட்டுள்ளனர். 14 வேதாகமங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஷியாம் நகரைச் சார்ந்த நமது புதிய தொடர்பாளரொருவர் மற்றும் ஹரியானா மாநில சபேரா மக்களினம் மத்தியில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. ரமாபூர் தபீர் கிராம அசோக் தனக்கிருந்த இரத்த தொற்றுநோயினால் உண்டான சரீரக்கட்டிகளின் பாதிப்பை பில்லி சூனியத்தினால் சரிசெய்ய முனைந்தும் இயலாமல், இறுதியில் உபவாச ஜெபத்தின் மூலம் பூரண குணமடைந்துள்ளார். அலிகன்ஜ் கிராம பள்ளி மாணவனான 9 வயது அங்குஷ் தனது திக்குவாய்ப் பிரச்சினையிலிருந்து பூரண குணமடைந்து, தற்போது நன்கு வாசிப்பதோடு தனது கல்வி நிலையிலும் 90% மதிப்பெண்கள் பெற்று, மேலும் பல வேத வசனங்களையும் மனனம் செய்கிறதைக் குறித்து தேவ நாமம் மகிமைப்படும்படி சாட்சி பகன்று வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சோபித் போட்டித் தேர்வுகளிலும், மோனு மற்றும் வந்தனா அரசாங்க பொதுத்தேர்வுகளிலும் நல்ல மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சிப்பெற; நமது விசுவாசிகளான மகேஷ், செர்மன், ரேணு, சத்தின்த் ஆகியோர் தங்களது வியாபாரங்களில் நல்ல வருவாய்ப்பெற்று தங்களது கடன் பிரச்சினைகளிலிருந்து மீள; தனது குடும்பத்தில் ஏற்பட்ட தொடர் சுகவீனங்களினிமித்தம் கடனாளியாகி இருக்கும் ஷியாம் நகரைச் சார்ந்த நமது புதிய தொடர்பாளர் ஜித்தேந்தருக்கு கடன் பிரச்சினை தீர; சபேரா மக்களினத்தைச் சார்ந்த 3 வயது குழந்தையான குணால் நன்கு பேசவும் நடக்கவும் ஆரம்பிக்க; லஜோரி பகுதி 3 வயது குழந்தை ரித்திக் மற்றும் சிலக்கா பகுதி 12 வயது ஹன்ஸ் நன்கு கேட்கும் திறனையும், பேசும் திறனையும் பெற்றிட; ஒரு வருடமாகக் கணவரை விட்டுப்பிரிந்திருக்கும் வீராம்பூர் கிராம லக்ஷ்மி மீண்டும் சமாதானமாய் இணைந்து வாழ; ஜெய்பாலின் மகள் சிவாங்கி சத்துருவின் கட்டிலிருந்து விடுபட; கடியா கிராம பவன் தன் காலில் ஏற்பட்டுள்ள காயத்திலிருந்தும், அவருடைய சகோதரரின் மகன் இருதயத்துளைப் பிரச்சினையிலிருந்தும் விரைவில் சுகமடைய ஜெபிப்போம்.

## *சுவிசேஷ வாய்க்கால்!*

*மத்தியப்பிரதேசம், கால்வா பணித்தளம். தொடர் வயிற்றுவலியினால் அவதிப்பட்டுவந்த லக்கன்பூர்பன்தி கிராம அனிதா சபைக்கு வந்தபோது, நமது மிஷனரிகள் மற்றும் சுதேச ஊழியர்கள் அவருக்காக ஜெபித்தனர். ஜெபத்தினால் அற்புத சுகம் பெற்ற அவர், தேவ வார்த்தையை விசுவாசிக்கத் தொடங்கி அவருடைய உற்றார் உறவினர்கள் 20 பேருக்கு சுவிசேஷத்தை அறிவித்தார். சுவிசேஷத்தைக் கேட்ட அவர்கள் தற்போது சுவிசேஷத்திற்கு செவிசாய்க்கத் தொடங்கியுள்ளனர். அனிதாவை சுவிசேஷ வாய்க்காலாக அக்கிராமத்திற்கு எடுத்து பயன்படுத்திய தேவனுக்கு ஸ்தோத்திரம்!*

**11**
**மார்ச்**
**சனி**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஆசீர் செல்வராஜ் C.
திரு. பிரவீன் தாஸ்
திரு. சத்திகாந்தா பரிச்சா

# மத்தியப் பிரதேசம்

## பன்சேமால்: வசாவா பாங்சிங் மௌலியா & ஏமன்பேன்

**துதிக்க:** இயேசுவைக் குறித்த நற்செய்தி 206 பேருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. 4 கிராமங்கள் சுவிசேஷத்தின் மூலம் சந்திக்கப்பட்டுள்ளன. 5 விசுவாசிகள் புதிதாக கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். 33 புதிய ஏற்பாடுகளும், 3 வேதாகமங்களும் மக்களிடையே பகிரப்பட்டுள்ளன. 4 கிராமங்களில் பெண்கள் கூடுகைகள் நடத்தப்பட்டுள்ளன. கால் வீக்கத்தினால் கம்பு ஊன்றி நடந்துகொண்டிருந்த ரானு ஜெபத்தின் மூலம் பூரண குணமடைந்துள்ளார். மால்பூர் கிராம ஹேமாராஜின் குடும்பம் மீண்டும் கிறிஸ்துவை விசுவாசிக்கத் தொடங்கியுள்ளனர். 3 குழந்தைகளை ஒரே பிரசவத்தில் பெற்றெடுத்துள்ள ஷோபிபாயும், அவரது குழந்தைகளும் நன்கு ஆரோக்கியமாய் இருப்பதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கலாபாய், ஜம்தேவி, சுகாலால், கட்டியா, தாருபாய், ரெக்காமிபாய், ஃபுல்தார், சுசாபாய், மசிபாய் மற்றும் சாய்சிங் நமது ஊழியத்திற்குக் காட்டிவரும் எதிர்ப்பை கைவிட்டுவிட்டு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள; கலாபாய், பிக்லாபாய், மொசம்பிபாய், ரீனாபாய், தலியாபாய், ஃபாதிபாய் மற்றும் அம்பிபாய் மாந்திரீக செயல்களிலிருந்து மீள; நமது விசுவாசிகளை மிரட்டும் கிராம மூப்பர்கள் மனம் மாற; உமர்வேதா, கேவ்டி, கட்டியா, ராய்கேதா, மன்குய், தெம்லா மற்றும் சப்கத்தி கிராமங்களில் இருக்கும் எதிர்ப்புகள் யாவும் மறைய; லக்ஷ்மிபாய் சிறுநீரகக்கல் கோளாறிலிருந்தும், உஷாபாய் வாய்ப்புற்றுநோயிலிருந்தும், கலாபாய் காசநோயிலிருந்தும் பூரண சுகம் பெற ஜெபிப்போம்.

## குணா: சதீஷ் & ஷர்மிளா

**துதிக்க:** புதிதாக 7 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டதின் விளைவு 450 பேர் கிறிஸ்துவைக் குறித்துக் கேள்விப்பட்டுள்ளனர். அதில் 9 பேர் விசுவாசிகளாகி கிறிஸ்தவ மந்தையில் இணைந்துள்ளனர். விசுவாசமுள்ள ஜெபத்தினால் மான்சிங் கழுத்து புற்றுநோயிலிருந்து பூரண சுகமடைந்துள்ளார். தொடர்ச்சியாக 3 முறை உண்டான தொடர் கருச்சிதைவுகளுக்குப்பின், தற்போது சாரதா அழகிய பெண்குழந்தையைப் பெற்றெடுத்துள்ளார். தேவ கிருபையால் அனிதா வயிற்று வலியிலிருந்து நல்ல சுகம் பெற்றுள்ளார். மோகன்பூர் மற்றும் அம்ரோஜ் கிராமங்களில் நடைபெற்ற 3 விசுவாசிகள் கூடுகையில் 60 பேர் கலந்துகொண்டு தேவாசீர்வாதம் பெற்றுள்ளனர். அதிக வாந்திப் பிரச்சினையினால் அவதிப்பட்டு வந்த 5 வயது சிறுவன் சுரேஷ் அற்புத சுகம் பெற்றுள்ளதால், அவனது முழுக்குடும்பமும் ஆலய ஆராதனைக்கு வரத் தொடங்கியுள்ளது. ஹசலி கிராமத்தில் புதிதாக ஜெபக்கூட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிய விசுவாசிகள் அனைவரும் தங்களது விசுவாசத்தில் உறுதியாக வளர; மோகன்பூர் கிராமத்தில் நடைபெற்ற கூடுகையின்போது பத்திரிக்கை நிருபர்களால் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களின் மூலமாய் ஊழியத்திற்கு எத்தடையும் வராதிருக்க; தங்களது 2 சிறுபிள்ளைகளையும் இழந்து தவிக்கும் நமது சுதேச ஊழியரின் மகன் கபிலுடைய குடும்பத்தார் தேவ ஆறுதல் பெற; தற்கொலையின் மூலம் தங்கள் வாழ்க்கையை முடித்துக்கொள்ள நினைக்கும் பரேலா சமூகத்தினர் மனந்திரும்பி, கிறிஸ்துவிடமிருந்து வரும் ஆசீர்வாதமான வாழ்வைப் பெற்றிட ஜெபிப்போம்.

**12 மார்ச்**
**ஞாயிறு**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஷைனி கின்ஸ்லி

## கண்ட்வா பிராந்தியம் & கால்வா:

**ஐசக் & சீதா**

**துதிக்க:** பிராந்திய அளவில் 37 கிராமங்களில் புதிதாக சுவிசேஷம் கூறப்பட்டிருப்பதின் பொருட்டு, 2649 பேர் கிறிஸ்துவைக் குறித்து கேள்விப்பட்டுள்ளனர். 46 பேர் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். 87 புதிய ஏற்பாடுகளும், 32 வேதாகமங்களும் அம்மக்களிடையே கொடுக்கப்பட்டுள்ளன. பிராந்திய அளவில் நடத்தப்பட்ட எல்லா நிகழ்ச்சிகளும் சிறப்பாக நடந்து முடிந்துள்ளன. மனசோர்பினால் பாதிக்கப்பட்டிருந்த நமது விசுவாசிகளில் சிலர் தேவனால் அச்சோர்பிலிருந்து விடுவிக்கப்பட்டு, தேவ சமாதானத்துடன் காணப்படுகின்றனர். சுப்புவின் 2 மகன்களும் கிறிஸ்துவுக்குள் விசுவாசத்தில் நன்கு வளர்ந்து வருகின்றனர். நடக்க முடியாமலிருந்த சோமா அற்புதசுகம் பெற்றுள்ளார். குழந்தைபேற்றிலிருந்த பல சிக்கல்களினூடே சோனுபாய் அழகிய குழந்தையொன்றைப் பெற்றெடுத்துள்ளார். கும்சிங் தனது எலும்புப் பிரச்சினையினிமித்தம் பல மந்திரவாதிகளை நாடிச்சென்றும் பயனில்லாமல், இறுதியில் கிறிஸ்துவில் கொண்ட விசுவாசம் மற்றும் ஜெபத்தின் மூலம் அற்புத சுகமடைந்துள்ளார். முகேஷ் மற்றும் கடந்த 12 வருடங்களாக பொல்லாத ஆவியின் தொந்தரவினால் பாதிக்கப்பட்டிருந்த கோரி ஜெபத்தின் மூலம் பூரண குணமடைந்துள்ளனர். மாந்திரீக சக்தியினால் பலனில்லாதிருந்த நிருபாயின் வெள்ளை கொண்டைக்கடலை விளைநிலம், தற்போது ஜெபத்தினால் அபரிமிதமான அறுவடையைத் தந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பாலிபுரா, வடுஃபாலியா, முகேதி, ரத்லிபுரா, கலிக்கிரயா ஆகிய கிராமங்களில் புதிதாக ஆராதனைக்கூடுகைகள் தொடங்கப்பட; அனிதா நீரிழிவு நோயினால் ஏற்பட்டிருக்கும் பல்வேறு சுகவீனங்களிலிருந்து சுகம் பெற; தனது கடையில் திருடுபோனதினால் காவல் துறையில் புகாரளிக்கச் சென்றபோது, அங்குள்ளவர்களால் மிரட்டலுக்கும் உபத்திரவத்திற்கும் உட்பட்டு விசுவாசத்தை கைவிட வற்புறுத்தப்பட்டிருக்கும் நமது விசுவாசி ராஜு அப்பிரச்சினையிலிருந்து மீளவும், அவருடைய பொருளாதார நிலைமைகள் சீர்ப்படவும்; அனில் மற்றும் முகேஷ் மனநிலைப் பாதிப்பிலிருந்து சுகமடைய ஜெபிப்போம்.

## *தேவ வசன விடுதலை!*

*உத்தரப்பிரதேசம், கைம்கஞ்ச் பணித்தளம். லஜோரி கிராம நமது புதிய தொடர்பாளரான நன்னிதேவி வயிற்றுவலியோடு அநேக நாட்கள் தூக்கமின்றி அதற்காக மருந்து சாப்பிட்டு வந்தார். சில வாரங்களாக அவரது கிராமத்தில் நடத்தப்படும் ஆராதனையில் பங்குப்பெற்று, படிப்பறிவில்லாததினால் அங்கு தரப்பட்ட புதிய ஏற்பாட்டை வீட்டிற்குக் கொண்டுவந்து தனது பேரப்பிள்ளைகளிடம் கொடுத்து, அதை தினமும் வாசித்துக்காட்டச் சொல்லி கருத்தாய் கேட்டுவந்தார். பின்பு தேவ வசனத்தின்படி அவரும் இயேசுவின் நாமத்தில் ஜெபித்தபோது, பயமும் வலியுமின்றி நன்கு தூங்கும் சிலாக்கியம் பெற்றார். பின்னர் அவர் தனது சாட்சியை ஆலய ஆராதனையில் பகிர்ந்துகொண்டு, தேவ நாமத்தை மகிமைப்படுத்தினார். அல்லேலூயா!*

**13 மார்ச் திங்கள்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஹுட்டோய் அச்சுமி K.

திரு. ஏசு பிரகாஷ் J.

## கர்கோன் / கோகாவ்:

### பினித் பிரசாத் பர்தன் & அமோஜிதா

**துதிக்க:** சுவிசேஷத்தின்மூலம் 1106 பேர் புதிதாகச் சந்திக்கப்பட்டுள்ளனர். 28 புதிய ஏற்பாடுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. 32 கிராமங்களில் ஊழியப்பின்தொடர்ப்பணிகள் முறையே செய்யப்பட்டுள்ளன. எதிர்ப்புகளின் மத்தியிலும் வெளிப்புற ஊழிய நிகழ்ச்சிகள் சிறப்பாக நடந்து முடிந்துள்ளன. சானு உடல் வீக்கத்திலிருந்தும், பெண்ணியப் பிரச்சினையிலிருந்தும் உபவாச ஜெபத்தின் மூலம் நல்ல சுகம் பெற்றுள்ளார். ஜோஸ்னா திடீரென மயங்கி விழுந்தபோது நமது விசுவாசிகளும், சுதேச ஊழியர்களும் கூடி ஜெபித்த ஜெபத்தின் விளைவு, அவர் நன்கு குணமடைந்துள்ளார். போதைப்பழக்கத்திற்கு அடிமையாகி 18 வருடம் குடும்பத்தை விட்டுப்பிரிந்திருந்த ரமேஷ் தனது மனைவியின் ஜெபத்தின்மூலம் சுகபத்திரமாக வீடு திரும்பி, தற்போது நமது ஞாயிறு ஆராதனையில் வந்து கலந்துகொள்கிறார். விசுவாசிகளின் ஜெபத்தைக் கேட்டு, லட்குவிற்கு மனநோயிலிருந்தும், ஞாபக மறதிப் பிரச்சினையிலிருந்தும் தேவன் தந்துள்ள சுகத்திற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புயின்டா, பட்கியா, ராய்பெட்புரா, பல்சாமுத், ஓட்டாவத், லிங்திபய்தி ஆகிய பகுதிகளில் எதிர்ப்பினிமித்தம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஜெபக்கூடுகைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட; மனநிலைப்பாதிக்கப்பட்டு, தனது மனைவியைக் கொல்ல துணியும் ரூம்சிங் பூரண குணமடைய; தினேஷ் தொழுநோயிலிருந்தும், 13 வயது சிறுவன் லோகேஷ் மற்றும் சோனு வலிப்புநோயிலிருந்தும் அற்புத சுகமடைய; தொண்டை சதை வளர்ச்சியினால் அறுவை சிகிச்சைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ள லைலா விரைவில் சுகமடைய; பொக்ராணியில் எதிர்ப்பினிமித்தம் நிறுத்தி வைக்கப் பட்டிருக்கும் ஆலயக்கட்டுமானப்பணி விரைவில் தொடங்கப்பட்டு முடிவடைய; சரீரம் முழுவதும் ஏற்பட்டுள்ள விநோதமான அரிப்பு பிரச்சினையினால், திடீரென வாய்ப்பேச முடியாமலும், பின்னர் கண்பார்வையையும் இழந்து தவிக்கின்ற வாலிபன் விராத்திற்காக; திலீப் மற்றும் பிலோர் சிங்கின் குடும்பங்கள் மீண்டும் கிறிஸ்துவை விசுவாசிக்கத் துவங்க ஜெபிப்போம்.

# பீஹார்

## அரரியா:

### ஜென்னிஸ் & சுகந்தி புஷ்பம்

**துதிக்க:** சுவிசேஷ கைப்பிரதிகளோடு 3 இடங்களில் நிகழ்த்தப்பட்டுள்ள இயேசுத் திரைப்பட நிகழ்ச்சிகளை 600 பேர் கண்டு பயனடைந்துள்ளனர். பாம்புக்கடியின் ஆபத்திலிருந்து 2 சிறுபிள்ளைகளும், 2 பெரியவர்களும் காப்பாற்றப்பட்டுள்ளனர். காய்ச்சலுக்கு தவறான சிகிச்சை கொடுக்கப் பட்டதின் விளைவாக கடுமையான தோல் ஒவ்வாமை பிரச்சினை ஏற்பட்டு அவதிப்பட்ட 2 வயது குழந்தை அன்சு குமாரி ஜெபத்தின் மூலம் பூரண சுகமடைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** லக்ஷ்மிபுர்கா, ரங்தகா, பால்பட்டி, கஜ்வி சங்கர்பூர், கொச்காமா, நகர்பத்கன்ஜ், டெடிமுசாரி மற்றும் புல்காசக்கதா கிராமங் களிலுள்ள நமது விசுவாசிகள் தங்களது ஆவிக்குரிய வாழ்வில் எழுப்புதல் அடையவும், ஜெபவாழ்வில் ஸ்திரப்படவும்; ரங்தகா, கஜ்வி சங்கர்பூர் மற்றும் கொச்காமா கிராமங்களில் ஆலயங்கள் கட்டப்பட; முசாஹர் இனப்பிள்ளைகளுக்கு அவர்கள் வசிக்கும் இடங்களிலுள்ள பள்ளிகளில் படிப்பதற்கு இடம் கிடைக்க ஜெபிப்போம்.

**14 மார்ச் செவ்வாய்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. எலிசபெத் டேவிட்
திரு. வியாசு பாபு A.
திருமதி. உங் தியான்சிங் தாங்
செல்வி. பிராரி ரீட்டாபேன்

# ஜார்க்கண்ட்

## பத்னா & பர்ஹர்வா சந்தால் சிறுமியர் விடுதி:

### பீட்டர் பிரபாகரன் & விமலா

**துதிக்க:** சுவிசேஷத்தினால் 18 கிராமங்கள் புதிதாகச் சந்திக்கப்பட்டதின் மூலம் 1950 பேர் இயேசுவின் நற்செய்தியைக் கேட்டுள்ளனர். 8 பேர் விசுவாசிகளாகி கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். 6 வேதாகமங்கள் பகிரப்பட்டுள்ளன. 10 சிறுவர் முகாம்களும், 20 விசுவாசிகள் முகாம்களும் சிறப்பாக நடத்தப்பட்டுள்ளன. இருசக்கர வாகன பெரும் விபத்திலிருந்து காயமேதுமின்றி நமது சபை மூப்பர் முன்ஜிலாலும், அவரது மகளும் உயிர் தப்பியுள்ளனர். ஜெபம் மற்றும் ஆயுர்வேத சிகிச்சையின் மூலம் சலோமி சோரேன் புற்றுநோயிலிருந்து குணமடைந்துள்ளார். மரண்மலை சோரேன் நெஞ்சுவலியிலிருந்தும், செலினா பாம்புக்கடியிலிருந்தும் ஜெபத்தின் மூலம் நன்கு சுகம் பெற்றுள்ளனர். நமது விடுதியில் தங்கியிருக்கும் 210 பிள்ளைகள் கிறிஸ்துவில் வளர்ந்து வருகின்றனர். விடுதி உணவருந்தும் அறையின் கட்டுமானப்பணி நிறைவடைந்துள்ளது. சிறுபிள்ளைகளுக்கான 3 நாள் ஊழிய நிகழ்ச்சிகள் யாவும் வெற்றிகரமாக நடைபெற்று முடிந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தங்களுக்கு வரும் சோதனைகளை மேற்கொண்டு, தெய்வ பயத்துடன் நமது சபை மூப்பர்களும் சுதேச ஊழியர்களும் தங்களது ஊழியப்பணியைச் செம்மையாய் செய்திட; தங்களது தொழிலினிமித்தம் பல மாநிலங்களுக்கு இடம்பெயர்ந்துச்செல்லும் நமது மக்கள் மீண்டும் தங்களது பழைய வாழ்விற்குட்பட்டு, விசுவாசத்திலிருந்து வழுவிவிடாமலிருக்க; சிமல்தாப் கிராமத்தைச் சார்ந்த 3 குடும்பங்கள் தங்களது விசுவாசத்தை கிறிஸ்துவில் தைரியமாக அறிக்கையிட; துர்காபூர் கிராமத்தில் ஆலயமொன்று கட்டப்பட திட்டமிட்டிருக்கும் அக்காரியம் முழுமையடைய; குடும்பப் பிரச்சினைகளினிமித்தம் விடுமுறைக்குப்பின் விடுதிக்கு வராமலிருக்கும் மாகு கிஸ்கு, சுகுர்முனி மராண்டி ஆகியோர் விரைவில் விடுதிக்கு வந்துச்சேர; மூளை காசநோய்ப்பிரச்சினையிலிருந்து பவுலினா முற்றிலும் சுகம் பெற; பிள்ளைகள் பள்ளிச் செல்வதற்குகேதுவாக வாங்கவிருக்கும் பள்ளிப்பேருந்து பதிவு செய்யப்படும் காரியம் விரைவில் நிறைவடைய; விடுதியிலிருக்கும் 210 பிள்ளைகளுக்கும், அங்குள்ள விடுதிப் பொறுப்பாளர்களின் குடும்பங்களுக்கும் மழைக்காலம் வரும்வரை போதுமான தண்ணீர் கிடைக்க ஜெபிப்போம்.

15
மார்ச்
புதன்

*உபவாச ஜெபநாள்*

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. அருணா கிங்ஸ்லி, திரு. ஸ்டாலின் ஜீவா N.
திருமதி. பரஞ்ஜோதி லூசினா சுப்ரமணியன்
திருமதி. ஏஞ்சலின் வசந்தி இளங்கோவன்
திரு. ஹிஜாம் கென்னடி சிங், திரு. ராஜன் S.

### லிட்டிபாடா:

### எபினேசர் சாமுவேல் & மேபல் ஃபிளாரன்ஸ்

**துதிக்க:** சுவிசேஷ வசனம் 7 கிராமங்களில் புதிதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சுவிசேஷத்தைப் புதிதாக கேட்டுள்ள 330 பேரில் 23 பேர் தங்களது விசுவாசத்தை கிறிஸ்துவில் அறிக்கையிட்டுள்ளனர். சாம் ஹெம்ரோமின் குடும்பம் கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டப்பின், தேவ சமாதானத்தை அனுபவித்து வருகின்றனர். ஆவிக்குரிய கூடுகையொன்றில் நமது பெண் விசுவாசியொருவரின் காலில் பாம்பு சுற்றிக்கொண்டபோதிலும், அப்பெரும் ஆபத்திலிருந்து தேவ கிருபையால் அவர் தப்பிப் பிழைத்துள்ளார். லக்கேந்தர் மடியா தீய ஆவியின் போராட்டத்திலிருந்து விடுபட அநேக பில்லிசூனிய மற்றும் பிற ஆன்மீக சடங்காச்சாரங்களைச் செய்துபார்த்தும் இயலாமல், பின்பு சுவிசேஷத்தைக் கேட்டு கிறிஸ்துவின்மீது நம்பிக்கை கொண்டதால், தற்போது அவர் அனைத்து தீமைகளிலிருந்தும் விடுதலை பெற்று கிரமமாக நமது சபை ஆராதனைகளில் பங்கேற்கிறார். நமது சிறுவர் பராமரிப்பு மையப் பிள்ளைகள் யாவரும் தங்களது தேர்வுகளை நல்லமுறையில் எழுதி தேர்ச்சியடைந்துள்ளனர். குமார்பாஜா கிராமத்தில் சபை மூப்பர்களுக்கான குடும்பக்கூடுகை அதிக இடைவெளிக்குப்பின் சிறந்த முறையில் நடைபெற்று முடிந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிய விசுவாசிகள் விசுவாசத்தில் பலப்பட; புதிதாக கிறிஸ்துவை விசுவாசிக்கத் தொடங்கியிருக்கும் ஒருவர் அதிகநாட்களாக கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் தனது வலிப்பு நோயிலிருந்து அற்புத சுகமடைய; விசுவாசத்தில் பலவீனமாயிருக்கும் நமது சபை மூப்பர்களில் சிலர் விசுவாசத்தில் நன்கு பலப்பட; லெந்துகால நாட்களில் நமது விசுவாசிகள் உற்சாகமாக ஜெபிக்க முன்வர; தங்களது தொழிகளினிமித்தம் பற்பல இடங்களுக்குப் புலம் பெயர்ந்து சென்றிருக்கும் நமது விசுவாசிகள் அவர்கள் இருக்கும் இடங்களில் கிறிஸ்துவுக்கு சாட்சிகளாய் வாழ ஜெபிப்போம்.

## *நெருப்பின் மத்தியிலும்!*

*மத்தியப்பிரதேசம், கண்ட்வா பணித்தளம். தத்தபானி கிராம தவ்லி தனது வீட்டில் சமைத்துக்கொண்டிருக்கும்போது, எரிவாயு கசிவினால் திடீரென நெருப்பு பற்றிக்கொண்டது. என்ன செய்வதென்றே தெரியாமல், "கர்த்தாவே எனக்கு உதவி செய்யும்! என்னைக் காப்பாற்றும்!" எனக் கதறியவாறே, அவர் வீட்டை விட்டு வெளியே ஓடிவந்தார். உடனே கிராம மக்கள் அவசரமாக அவர் வீட்டிற்குள் சென்று நெருப்பை அணைக்க உதவினர். பின்பு தவ்லி எவ்வாறு வீட்டைவிட்டு வெளியே வந்தார் என கிராம மக்கள் அவரை விசாரித்தபோது, அவர் தன்னை தனது இயேசு இரட்சகர்தான் விடுவித்தார் எனப் பதிலளித்தார். பேராபத்திலிருந்து காப்பாற்றப்பட்ட இச்சாட்சியைக் கேட்ட கிராம மக்கள் யாவரும் ஆச்சரியப்பட்டு கர்த்தரைப் போற்றினர். தேவனுக்கே மகிமை!*

## 16 மார்ச் வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. எக்டோ சோஃபி
திருமதி. அனிமோல் ஜேக்கப்
திருமதி. ஆக்னஸ் எபநேசர் எட்வர்ட்
திருமதி. ஷெஃபாலி ஹன்ஸ்தா

### அமலகாச்சி:

#### கஜன் சம்பிரமரி & ரோஷிலா

**துதிக்க:** தங்களது ஆவிக்குரிய நிகழ்ச்சி களுக்கான பணத்தேவைகளை நமது விசுவாசிகளே தன்னார்வமாக சந்திக் கின்றனர். 13 பேர் கிறிஸ்துவண்டை வழிநடத்தப்பட்டுள்ளனர். நமது விசுவாசிகள் விசுவாசத்தில் நன்கு வளர்ந்தேறி வருகின்றனர். பல்வேறு பெலவீனங்களில் சிக்கிக்கொண்டிருந்த நமது விசுவாசிகள் அநேகரை தேவன் சுகப்படுத்தியுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** படிப்பறிவில்லாத நமது சபை மூப்பர்கள் வாசிக்கும் திறனை தேவனிட மிருந்து பெற்றிட; அடிக்கடி சுகவீன மாகும் நமது உள்ளூர் சுதேச ஊழியரின் பிள்ளைகளின் உடல்நிலை நன்கு சீரடைய; நமது விசுவாசிகள் யாவரும் நல்ல முன்மாதியான வாழ்வு வாழ; தம்லி, கொட்டாகெப்பு, காலுபாரா, போரோரா ஆகிய கிராமங்களில் ஆலயங்கள் கட்டப்பட; பணத்தேவைகளிலிருக்கும் நமது சபை மூப்பர்களின் குடும்பத்தேவைகள் சந்திக்கப்பட; நமது விசுவாசிகளை கிறிஸ்தவ விசுவாசத்திலிருந்து திசைதிருப்ப முயலு கின்ற மால்தோ இனத்தைச் சாராத வேறு சிலர் கிறிஸ்துவில் மனமாற்றம் பெற; பர்னபாஸ், சுனில், சைமன் மற்றும் சாமுவேலின் குடும்பங்கள் யாவும் கிறிஸ்துவில் வளர; விசுவாசத்தில் பின்வாங்கி யிருக்கும் ருபியாவும், சுனிலாவும் மீண்டும் கிறிஸ்துவண்டை திரும்ப ஜெபிப்போம்.

### சந்தால் சீஷத்துவப்பயிற்சி ஊழியம் – சோட்டாகக்ரி:

#### சுதாகரன் & ஃப்ளாரன்ஸ்

**துதிக்க:** இப்பணித்தளத்தில் சுதேச ஊழியர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சிகள் இரண்டுப்பிரிவாக சிறப்பான முறையில் நடத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் தேவனால் வடிவமைக்கப்பட்டுள்ள குடும்ப வாழ்வு, திருமணம், விவாகரத்து, மறுமணம், தெய்வீக குணாதிசயங்கள் ஆகியவைகளை நமது சுதேச ஊழியர்கள் தாங்கள் கற்றுக்கொண்டு, பிறருக்கும் கற்றுக்கொடுத்து நல்லதொரு ஆவிக்குரிய வாழ்வு வாழ போதிக்கப்பட்டுள்ளனர். ஞாயிறு ஆராதனையை முடித்துவிட்டு, திரும்பிவரும்வழியில் ஏற்பட்ட இருசக்கர வாகன விபத்திலிருந்து நமது ஊழியர்கள் தேவஅருளால் எவ்வித சேதமுமின்றி காப்பாற்றப்பட்டுள்ளனர். பெல்பஹாத், கோல்யான்பூர், ஹரிசந்த் மற்றும் போட்பன்த் கிராமங்களில் வீடுசந்திப்புகள் மேற்கொண்டு அக்குடும்பங்களுக்காக பாரத்துடன் ஜெபித்துவர தேவன் நமது ஊழியர்களுக்கு காண்பித்துள்ள கிருபைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இரண்டாவது முறையாக நடத்தப் படவிருக்கிற சுவிசேஷப்பயிற்சி நிகழ்ச்சிகள் மற்றும் சந்தால் சாஹிப்கஞ்ச் பிராந்தியம், சந்தால் தும்கா பிராந்தியம், சந்தால் மேற்கு வங்காளப்பிராந்தியம் என பிராந்திய அளவில் இம்மாதத்தில் நடக்கவிருக்கும் கூடுகைகளின் ஆசீர்வாதங்களுக்காக; நமது ஊழியர்களான பாபு & வயலட், ரபீந்திரா & செலினா ஆகிய தம்பதிகளுக்கு மழலைப்பாக்கியங்கள் கிடைக்க; ஸ்டீபன் முர்மு மற்றும் முன்னி மராண்டியின் குடும்பங்களில் தேவ சமாதானம் நிலவ; மங்கல் மராண்டி தனது குழப்பழக்கத்தி லிருந்து விடுபட்டு, ஆலய ஆராதனையில் தவறாமல் வந்து கலந்துகொள்ள; தொடர் தலைவலியினால் பள்ளிக்குச் செல்ல முடியாமல் தவித்துக்கொண்டிருக்கும் 4-ம் வகுப்புப்படிக்கும் வில்லியம் ஹன்ஸ்தக்கிற்கு அற்புத சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**17**
**மார்ச்**
**வெள்ளி**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. செல்வராஜ் A.
திருமதி. சவிதா தேவி ஆஷிஷ் குமார்

## நோனிஹாட்:
### பென்ஹர் M. & மேரி ஜான்சி ராணி

**துதிக்க:** சுவிசேஷம் 800 பேருக்கு முதல்முறையாக அறிவிக்கப்பட்டுள்ளது. அவர்களில் 17 பேர் கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் இணைந்துள்ளனர். தலையில் ஏற்பட்ட ஒரு பிரச்சினையின் நிமித்தமாய் தனது ஞாபக சக்தியை இழந்திருந்த சுனிதா ஜெபத்தின் மூலம் நன்கு சுகமடைந்துள்ளார். ரூபிலால் தான் இழந்திருந்த பேச்சுத்திறனையும், ஞாபக சக்தியையும் ஜெபத்தினால் அதிசயமாய் திரும்பப் பெற்றுள்ளார். ஏதேச்சையாக நாகப்பாம்பை மிதித்துவிட்டபோதிலும், ஆபத்தின்றி ராகேஷ் சோரேன் காப்பாற்றப்பட்டுள்ளார். சர்சா, மம்தா, கிஸ்கு, குர்தோபி, பாபுலால் ஆகியோர் வலிப்புநோயிலிருந்து ஆரோக்கியமடைந்துள்ளனர். சிறுவர் மற்றும் விசுவாசிகளுக்கான முகாம்கள் அதில் கலந்துகொண்டோருக்கு மிகுந்த ஆசீர்வாதமாய் அமைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கடும் காசநோய்த்தொற்றினால் அவதிப்பட்டுவரும் நமது சுதேச ஊழியர் மைக்கேல் விரைவில் முழு சுகமடைய; குட்டாஹரி கிராம தீப்பல் சோரேன், திவ்யா, ராணி சோரேன் முடக்குவாத நோய்ப்பிரச்சினையிலிருந்தும், லலிதா சோரேன் புற்றுநோயிலிருந்தும், பாவுஹேனா முதுகுத்தண்டுவடத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினையினிமித்தம் நடக்க முடியாமலிருக்கும் நிலையிலிருந்தும் அற்புத குணமடைய; சஜீவா கிராமத்தில் ஆலயம் மற்றும் பயிற்சி மையமொன்று கட்ட தகுந்த நிலமொன்று கிடைக்க; இம் மாதத்தில் ரியாடி கிராமத்தில் வைத்து நடக்கவிருக்கும் சந்தால் ஆவிக்குரிய கூடுகை சமாதானமாகவும், அங்குள்ள விசுவாசிகளுக்கு மிகுந்த ஆவிக்குரிய பலனளிப்பதாகவும் அமைய; இயேசுத் திரைப்படம் மற்றும் இரவுநேர ஆவிக்குரிய கூடுகைகள் நடத்துவதற்கு எடுக்கும் முயற்சிகளை தேவன் கனப்படுத்தி, திரளான ஆத்துமாக்களைத் தர ஜெபிப்போம்.

## *விசுவாசம் வென்றது!*

*மகாராஷ்டிரா, டிண்டோரி பணித்தளம். கிறிஸ்துவை அறியாத கணவரை திருமணம் செய்திருந்ததால், கோமலை அவரது மாமியார் ஆண் குழந்தை பெற மந்திரவாதியைச் சந்திக்கும்படி கூறினார். கோமல் ஒரு விசுவாசி என்பதால் அதை மறுத்துவிட்டு, மாமியார் குடும்பத்தார் தனக்கிழைத்த துன்பங்களைச் சகித்துக் கொண்டார். இதையெல்லாம் அவர் இயேசுவின்மீது கொண்டிருந்த உறுதியான நம்பிக்கையாலும், ஊக்கமான ஜெபத்தாலும் தாங்கிக்கொண்டு, தேவன் தனக்கு ஒரு ஆண்குழந்தையைத் தருவார் என காத்திருந்தார். அவரது விசுவாசத்தின்படியே தேவன் அவருக்கு ஆண்குழந்தையைத் தந்தார். அக்குழந்தைக்குப் பெயர் சூட்ட நமது மிஷனரியைக் கேட்டுக்கொண்ட போது, அவர் அதற்கு ராயன் (குட்டி ராஜா) என்று பெயரிட்டார். கோமலின் மாமியாரும் அத்தகைய பெயரையே விரும்பியதால், கோமலும் கர்த்தருக்குள் மிக மகிழ்ச்சியடைந்தார். அல்லேலூயா!*

18
மார்ச்
சனி

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. இந்திராம்மா டேனியல் விஜயராஜ்

# மேற்கு வங்காளம்

## பாக்குவாஹாட்: ராமகிருஷ்ண அகிபாடா & அஞ்சலி தேவி

**துதிக்க:** சத்திய வசனம் முதல்முறையாக 25 கிராமங்களில் பறைசாற்றப்பட்டதின் விளைவாக 1800 பேர் ஆவிக்குரிய பயனடைந்துள்ளனர். அதிலிருந்து 2 பேர் கிறிஸ்துவின் மந்தையில் தஞ்சமடைந்துள்ளனர். அவர்கள் மத்தியில் 8 வேதாகமங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. தனித்தாள் ஊழியம் 12 கிராமங்களில் நடைபெற்றுள்ளது. தனது குடும்பத்தை ஆலயத்திற்குச் செல்லவிடாமல் கஷ்டப்படுத்தி வந்த சுரேஷ், தற்போது மனந்திரும்பி தானாகவே ஆலயத்திற்கு வரத் தொடங்கியுள்ளார். சல்போனா திருச்சபையினருக்கு சிறிய ஆலயமொன்று கட்டப்பட்டு, பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. குடிக்காரனாக இருந்த சுஜன் ஹெம்ரோம் இப்போது சுவிசேஷத்தின் மூலம் மனந்திரும்பி தன்னார்வ ஊழியராக மாறியுள்ளார். நமது ஊழியர்கள் மற்றும் சுதேச ஊழியர்களின் குடும்பங்களை இக்கடுங் குளிர்கால பெலவீனங்களுக்கு விலக்கி தேவன் பாதுகாத்துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்தைக் கேட்டுள்ள மக்கள் தங்களது பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவண்டை வந்து சேர; தங்களது விசுவாசத்தை அறிக்கையிட காத்திருப்போர் துணிவுடன் அதைச் செய்திட; தங்களது கணவன்மார்களை இழக்கக்கொடுத் திருக்கும் லக்கி முர்மு மற்றும் சுகி மர்தியின் குடும்பங்களுடைய அனுதின வாழ்வாதாரத் தேவைகள் சந்திக்கப்பட; குரு மனந்திரும்பி ஜீவனுள்ள தேவனண்டை வர; நமது சபை மூப்பர்கள் தங்களது சபைகளைப் பொறுப்புடன் கவனிக்க; காலு, சொர்ஜு, சுனில், முனி மற்றும் ராஜுவின் குடும்பங்கள் மீண்டும் சபை ஆராதனைகளில் பங்குப்பெற ஜெபிப்போம்.

## தபன்: R. கிங்ஸ்லி லிவிங்ஸ்டன் & டெல்ஃபின்

**துதிக்க:** அதிக நாள் ஜெபத்துடன்கூடிய தேடுதலுக்குப்பின் குமார்கன்ஜ் பகுதியில் நமது ஊழியர்களுக்கு தங்கி ஊழியம் செய்ய நல்லதொரு வாடகை வீடு கிடைத்துள்ளது. வெளிப்புற சந்திப்பு மற்றும் இயேசுத் திரைப்பட ஊழியங்கள் மூலம் 10 கிராமங்களில் புதிதாக சுவிசேஷம் ஏறத்தாழ 900 பேருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. 6 மாத போராட்டத்திற் குப்பின் நமது தன்னார்வ வாலிப ஊழியரான சாபித்திரிக்கு மார்பகப்புற்றுநோய்க்கட்டி அறுவை சிகிச்சை மூலம் அகற்றப்பட்டு, தேவ கிருபையால் தற்போது அவர் உடல்நலம் தேறி வருகிறார். பொல்லாத ஆவியின் மீதிருக்கும் பயத்திலிருந்து சுனிதா விடுதலை பெற்றுள்ளார். பிலிப்பின் தகப்பனார் இரத்தவாந்தி பிரச்சினையிலிருந்து பூரண குணமடைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சாபித்திரி பூரண சுகமடைய அவருக்கிருக்கும் இன்னொரு மார்பகக் கட்டியும் விரைவில் அகற்றப்படவும், அவர் எழுதவிருக்கும் அரசாங்கப் பொதுத் தேர்விற்கான ஞானமும் பெலனும் அவருக்கு தேவனால் அருளப்படவும்; வறுமை மற்றும் ஆவிக்குரிய ஆர்வமில்லாமையினால் கிரமமாக ஞாயிறு ஆராதனைகளில் பங்கேற்காமலிருக்கும் பஸ்பாடா, நக்தகார், நெகம்பா, போனஹார் ஆகிய கிராமங் களிலுள்ள நமது ஆண் விசுவாசிகளுக்காக; முத்ராபூர், குதும்சோர், ஜமால்பூர், ஹோலி தனா, போரம், புக்ரிகுட்டு, கலிடோலா, சியல்காச்சி, சிக்கர்தங்கா, கக்னா ஆகிய கிராமங்களில் ஆராதனை மையங்கள் தொடங்குவதற்கு திறந்தவாசல் கிடைக்க; தங்களது பழைய பாவ குடிப்பழக்கத் தினால் ஆவிக்குரிய வாழ்வில் பின்வாங்கிப் போயிருக்கும் நமது முரைப்பூர் கிராம விசுவாசிகள் மனந்திரும்பி மீண்டும் பரிசுத்த வாழ்வு வாழ; வாலிபர்கள் மத்தியில் தன்னார்வ ஊழியராகப் பணிபுரிய அர்ப்பணித்திருக்கும் சுகல் ஹன்ஸ்தக் சீக்கிரத்தில் சுதேச ஊழியராக மாற ஜெபிப்போம்.

**19 மார்ச் ஞாயிறு**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ரேணுமா சாடங்கி தீப்திலால் மாலி
திருமதி. டெல்ஃபின் கிங்ஸ்லி லிவிங்ஸ்டன்

# அஸோம்

## ஜோனை:

### சுனில் பிரசாத் சிங் & ஜாய் பெல்லா

**துதிக்க:** இவ்வருடத்திற்கான ஞாயிறுப் பள்ளி ஊழியவகுப்புப் பாட சம்பந்தமான பொருட்கள் யாவும் ஆயத்தமாக்கப் பட்டு, ஆசிரியர்களுக்கான பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது. உள்ளூர் தன்னார்வ ஊழியரொருவர் நமது ஊழியத்திற்கென பயிற்றுவிக்கப் பட்டுள்ளார். ஜார்க்கண்டிலுள்ள நமது மிஷனரிகளை மேலும் ஊக்குவிக்க அவர்களுக்கு நமது இயக்கத்தின்மூலம் ஒருங்கிணைந்த கருத்தரங்குகள் சிறப்பாக நடத்தப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சோடுனத்தோ டோலே தனது குடிப்பழக்கத்தை கைவிட; கோபின் தாவ் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தில் நிலைத்திருக்க; பாடி, காலி, பைரி ஜோனி, சில்லி, கினாமொமோரா ஆகிய இடங்களில் சுவிசேஷத்திற்கு திறந்தவாசல் கிடைக்க; ஞாயிறுப்பள்ளி வகுப்புகள் மற்றும் வாலிபர் கூடுகைகள் மூலம் அங்குள்ள வாலிபர்களும், சிறு பிள்ளைகளும் கிறிஸ்துவில் நன்கு வளர; ஓசாத் டோலே மனசோர்பிலிருந்து விடுபட ஜெபிப்போம்.

## கோஹ்பூர்:

### நாத்தான் குமார் பெபர்த்தா & நிருபோமா

**துதிக்க:** புதிதாக 13 கிராமங்களில் 200 பேருக்கு சுவிசேஷம் உரைக்கப் பட்டுள்ளது. ஹேமலதா டோலே, பிஜு மற்றும் தோனிராம் சரீரக்கட்டி களிலிருந்தும், பல்வேறு தொடர் பெலவீனங்களிலிருந்தும் விடுதலை பெற்றுள்ளனர். பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையினால் நமது விசுவாசிகள் விசுவாசத்தில் வளர்ந்து வருகின்றனர். புற்றுநோய்க்கான சிகிச்சைப்பெற்று வரும் நமது ஊழியரின் தாயார் சுலோச்சனா தேவ இரக்கத்தினால் சற்று சுகமடைந்து வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** லெப்ரங் கிராமத்தில் வசிக்கும் 70 குடும்பங்கள் மத்தியில் சுவிசேஷ வாசல்கள் திறக்கப்பட; சுவிசேஷத்தின் மீது விருப்பம் காட்டும் ஹேமலதா, தீபா, சுனில், திலீப் பட்டீர், அவுசர், ஜீவன் குலி, உபிகந்தோ, ஹேமோதர் ஆகியோர் கிறிஸ்துவின்மீது நம்பிக்கை கொள்ள; சுவிசேஷத்தை எதிர்க்கும் ஹங்கோரியா மற்றும் ஜோனோஜாட்டி என்ற இருகூட்டத்தார் மனந்திரும்ப; போலின் கும்பாங், குலாபட்டீர், பிபிகோன் ஆகியோர் கிறிஸ்தவர்கள்மீது காட்டும் வெறுப்பிலிருந்து மனம் மாற; மிரி மக்களினம் தீய ஆவியினால் உண்டாகும் *யாக்கமிலி* என்று அவர்கள் கருதும் பரம்பரை சாபநோயிலிருந்து விடுதலை பெற; சாப் பத்ரி, நபீன், சிபுசன் பத்ரி ஆகியோர் உண்மை யான மனமாற்றத்துடன் நமது ஞாயிறு ஆராதனைகளில் தொடர்ச்சியாகப் பங்குப்பெற ஜெபிப்போம்.

20
மார்ச்
திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. டேவிட் பெருமாள், திரு. ஜார்ஜ் C.R.
திருமதி. புஸ்பிதா ராணி பெஹறா
திருமதி. ஞான செல்வராணி ஜீவா
திரு. பிமல் சந்திர முர்மு
திரு. சாமுவேல் பெபர்த்தா

# குஜராத்

## மோஸ்தா:

### பால்ராஜ் R. & கோயில்புஷ்பம்

**துதிக்க:** சுவிசேஷம் 850 பேருக்கு பறைசாற்றப்பட்டுள்ளது. சுவிசேஷத்தின் மூலம் 4 கிராமங்கள் புதிதாகச் சந்திக்கப்பட்டுள்ளன. 8 வேதாகமங்கள் மக்களிடையே விநியோகிக்கப்பட்டுள்ளன. 8 கிராமங்களில் கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளதில் சிறப்பாக 2800 பேர் பங்கேற்றுள்ளனர். தகிவாடா கிராமத்தில் திறந்தவெளியில் முதல்முறையாக நடத்தப்பட்ட கிறிஸ்துமஸ் நிகழ்ச்சியில் சுமார் 500 புதியவர்கள் கலந்துகொண்டு இயேசுவின் பிறப்பைக்குறித்தும், இரட்சிப்பைக் குறித்தும் புதிதாகக் கேட்டறிந்துள்ளனர். கஜேந்திரபாயின் குடும்பமும், தன்ஜிபாயும் கிறிஸ்துவை தங்களது வாழ்வில் இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வெட்சா மற்றும் தகிவாடா கிராமங்களில் நடத்தப்பட்டுள்ள கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகள் மூலம் சுவிசேஷத்தைக் கேட்டிருப்போர் கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்க; விபத்தினிமித்தம் இடுப்பெலும்பு முறிவினால் அவதிப்பட்டுவரும் ஸ்வப்ணா சீக்கிரத்தில் முழு குணமடைய; குமினா பகுதி ஆலயக்கட்டுமானப்பணிக்கு ஏற்படும் தடைகள் நீங்க ஜெபிப்போம்.

## போடேலி:

### ஏசுபாபு & உஷா

**துதிக்க:** தேவ வார்த்தையை 58 புதிய மக்கள் கேட்டுள்ளனர். 7 பேர் புதிதாக கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். 4 வேதாகமங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. சங்கர்புரா கிராமத்தில் இரவுநேர ஜெபக்கூட்ட மொன்று சிறப்பான முறையில் நடத்தப் பட்டுள்ளது. இப்பணித்தள மக்களுக்குத் தொடர்ச்சியாக ஆவிக்குரிய கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன. புதிதாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ள கிராமங் களில் முறையாக பின்தொடர்ப்பணி ஊழியங்கள் நடத்தப்பட்டு வருகின்ற தற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தவறான புகாரின் பேரில் சிறையிலடைக்கப்பட்டு, ஜாமீன் கிடைத்தும் வெளியே வரமுடியாமலிருக்கும் நமது உள்ளூர் விசுவாசி விஜயிற்கு தேவ தயவு கிடைக்க; நமது விசுவாசிகளான ஷாரோன் மற்றும் தீபிகா தாங்கள் எழுதியுள்ள அரசுப்பணிக்கான தேர்வுகளில் நற்தேர்ச்சிப்பெற; விசுவாசிகளானதின் பொருட்டு சொந்த கிராமத்தினரால் கிராமத்தைவிட்டு வெளியேற்றப்பட்டு, தற்போது பக்கத்துக் கிராமத்திலுள்ள பண்ணையில் தங்கியிருக்கும் ஹீரா வுடைய குடும்பத்தினரின் இந்நிலை மாறவும், அவர்கள் தங்களது அர்ப்பணிப்பில் நிலைத்திருக்கவும் ஜெபிப்போம்.

## 21 மார்ச் செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. செலினா ஹன்ஸ்தக் கிஸ்கு
திருமதி. புரொபிலா பொசுமத்தாரி பிரதீப்
திரு. கோவிந்தராஜன் E.
திருமதி. சசிகலா வெங்கடேசன்
திரு. ராஜேந்திரன் J., திரு. கணேஷ் R.

### ஆரவல்லி பிராந்தியம்:
**ஐசக் ராஜா & மேக்தலின் கிரேஸ்**

**துதிக்க:** கிறிஸ்துவின் விசுவாச மந்தையில் புதிதாக 63 பேர் தஞ்சம் புகுந்துள்ளனர். 10 கிராமங்களில் முதல்முறையாக சுவிசேஷம் பறைசாற்றப்பட்டுள்ளது. நமது விசுவாசிகளில் சிலர் தங்களது வீடுகளில் ஸ்தோத்திரக்கூட்டங்கள் நடத்த தேவன் கிருபையளித்துள்ளார். நமது ஜாலோத் விடுதிப்பிள்ளைகளுக்கு கிறிஸ்துமஸ் நிகழ்ச்சியொன்று சிறப்பாக நடத்தப்பட்டுள்ளது. பிசாசுப்பிடியினிமித்தம் வீட்டை விட்டு ஓடிவிட்ட அபிஷாய், தொடர் ஜெபத்திற்குப்பின் 38 நாட்கள் கழித்து மீண்டும் சுகபத்திரமாக தனது வீடு வந்து சேர்ந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மனா, சந்தோஷ், விக்ரம், வர்சிங் ஆகியோர் தங்களது குடிப்பழக்கத்தை விட்டுவிட; நமது ராம்புரா சபையினர் தவறான போதனைகளுக்குட்பட்டு, விசுவாசத்தை விட்டு வழுவிச்செல்லாமலிருக்க; 6 வயது சிறுமியான சுகானி மீண்டும் பேசும், கேட்கும் திறனைப் பெற; கடந்த 7 வருடங்களாக தீய சக்தியின் போராட்டத்தினால் மனநிலை பாதிக்கப்பட்டிருக்கும் ரமேஷ் அற்புத சுகமடைய; மாந்திரீகக்கட்டிலிருக்கும் ராஜுபேன் அதிலிருந்து விடுபட; சாந்திலாலும் சுக்மாலும் பக்கவாதத்திலிருந்தும், நமது தன்னார்வ ஊழியர்களான அசோக் மற்றும் அமரி முதுகுத்தண்டுவட பிரச்சினையிலிருந்தும் பூரண சுகம் பெற; லக்கம்பூர் கிராமத்தில் எதிர்ப்பினிமித்தம் 4 வருடங்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் ஆலயக்கட்டுமானப் பணி மீண்டும் தொடங்கப்பட; விசுவாசிகளையும் ஊழியத்தையும் தீவிரமாக எதிர்க்கும் மக்கள் கிறிஸ்துவின் அன்பை ருசிக்க ஜெபிப்போம்.

### சொரம்பா:
**புஷ்பராஜ் & ஜோதி நிர்மலா**

**துதிக்க:** சுவிசேஷம் புதிதாக 3 கிராமங்களில் பறைசாற்றப்பட்டுள்ளது. நமது சுதேச ஊழியர்களுக்கு நடத்தப்பட்ட குடும்பக்கூடுகையின் மூலம் அவர்கள் மேலும் கிறிஸ்துவுக்குள் ஊக்கமடைந்துள்ளனர். ஞாயிறுப்பள்ளி வகுப்புகள் புதிதாக 2 இடங்களில் தொடங்கப்பட்டுள்ளன. சாந்து, காண்டு, அனிதாபேன் ஆகியோர் தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். கோண்டு கிராமத்தில் ஞாயிறு ஆராதனையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கணவரை இழந்த அனிதாபேன் தீய ஆவியின் பிடியிலிருந்து விடுதலை பெற்று, தற்போது நமது ஆலய ஆராதனைகளில் தவறாமல் வந்து பங்குப்பெறுகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சாந்துவின் மனைவி இயேசுவை ஏற்றுக்கொள்ளவும், அதற்குத் தடையாக இருக்கும் அவரது மகன் மனம் மாறவும்; தங்கினிபேனும் அவரது மகளும் கிறிஸ்துவில் இரட்சிப்பு பெற; குடிப்பழக்கத்திலிருந்து வினேஷ் விடுவிக்கப்பட; சாபக்கட்டுகளினால் தங்களின் கண் பார்வையை இழந்திருக்கும் தயாபாய் மற்றும் அவரது இரு மகள்களுக்காக; நமது விசுவாச வாலிபப்பிள்ளைகளுக்கு நல்ல வாழ்க்கைத்துணைகள் அமைய ஜெபிப்போம்.

**22 மார்ச்** புதன்

*உபவாச ஜெபநாள்*

## பிப்பள்வாடா சிறுமியர் விடுதி: பொன் அகஸ்டின் & ஜாய்ஸ் ஷோபனா

**துதிக்க:** மூத்த வயது பிள்ளைகளுக்கென்று நடத்தப்பட்ட ஒருநாள் ஆவிக்குரிய கூடுகை அவர்கள் அனைவருக்கும் ஆசீர்வாதமாக நடந்து முடிந்துள்ளது. சிறுவர் விடுமுறை வேதாகமப் பள்ளிக் குழுவிலிருந்து 5 சகோதரிகளை தேவன் இக்கூடுகையில் பயன்படுத்தினார். ஞாயிறு சிறப்புக்கூடுகையில் நமது மிஷனரி சகோதரி. ஸ்டெல்லா அவர்கள் மூலம் கொடுக்கப்பட்ட தேவ வார்த்தை யாவருக்கும் மிகுந்த ஆசீர்வாதமாக இருந்துள்ளது. நமது விடுதி வளாக மின் இணைப்பு சம்பந்தப் பணிகளுக்கான கட்டணத்தொகை சந்திக்கப்பட்டுள்ளது. இக்குளிர்கால சூழ்நிலைகளுக்கேற்றவாறு நமது பிள்ளைகளை தேவன் பத்திரமாகப் பாதுகாத்து வருகின்றதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விடுதிப்பிள்ளைகளின் ஒழுக்கம் மற்றும் ஆவிக்குரிய வாழ்விற்காக; அரசாங்கப் பொதுத்தேர்வு எழுதும் பிள்ளைகளுக்காக; பெலவீனமாயிருக்கும் பிள்ளைகள் விரைவில் பூரண சுகமடைய; மழைக்காலத்திற்கு முன்பாக விடுதிப்பொறுப்பாளர்களுக்கான தங்குமிட கட்டிடப்பணி விரைவில் ஆரம்பிக்கப்பட்டு முடிவடைய; மின் இணைப்பு பணிகளுக்கான பொருட்கள் தொல்வானிலிருந்து பத்திரமாக வந்து சேர; அனுதினமும் பள்ளிக்குச் செல்லும்வழியில் நமது பிள்ளைகள் ஆபத்தின்றி காக்கப்பட; விநோதமான கைவீக்கப்பிரச்சினையிலிருந்து மோகினி முழுவதுமாகச் சுகமடைய; அம்மை நோய்த்தொற்றிலிருந்து பிள்ளைகள் யாவரும் பாதுகாக்கப்பட ஜெபிப்போம்.

## சூரத்: மாதவராய் & ஜெபதங்கம்

**துதிக்க:** சத்திய வசனம் புதிதாக 35 பேருக்கு உரைக்கப்பட்டுள்ளது. 2 வேதாகமங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. தேவ கிருபையால் எதிர்ப்புகள் மற்றும் அச்சுறுத்தல்கள் மத்தியிலும் நமது ஊழியர்கள் நன்கு ஊழியம் செய்து வருகின்றனர். ராகுல், ரோமி மற்றும் ஹரேந்திராவிற்கு தகுந்த வேலைவாய்ப்புகள் கிடைத்துள்ளன. குடிப்பழக்கத்திலிருந்து ரோஷன் விடுதலை பெற்றுள்ளார். கணவன்மாரால் துன்புறுத்தப்பட்டு வந்த சங்கீதாபேன் மற்றும் லக்ஷ்மிபேனின் வாழ்வில் நல்ல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஸ்ரீகாந்த் பொல்லாத ஆவியின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். சைலேந்திராவும், அவரது மனைவியும் ஜெப ஆலோசனைகளின் மூலம் அவர்களது தாயாருடன் மனம் ஒப்புரவாகியுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சத்திய வசனத்தைக் கேட்டுள்ளவர்கள் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்க; சைலேஷ் மற்றும் சுபமிற்கு நல்ல வேலைவாய்ப்புகள் கிடைக்க; நீத்து, ரோஷினி, வித்யா, உஷா, பிஜுத், சங்கீதா, அனுஜ்குமார், அதுல் பூபேந்திரா, குசும், மீனா, கவிதா, குஷ்பு, சோனா கீதா சாதீர்பேன், பிரமிளா, நிலேஷ், நிஷா ஆகியோர் தங்களது பலவித சரீர உபாதைகளிலிருந்து விடுபட; சத்யம் இணையதள விளையாட்டு அடிமைத்தனத்திலிருந்து விடுபட; விசுவாசத்தில் பின்மாற்றமடைந்துள்ள நீருபேனின் குடும்பம், சீமாபேன் மற்றும் பிரியங்காபேன் மீண்டும் விசுவாச வாழ்விற்குள் வர; ஹேமுபேன், பூனம்பேன், சுமித்ராபேன் மற்றும் பிரியங்காபேன் தாங்கள் அர்ப்பணித்துள்ளபடி சிறுவர் ஊழியத்தில் உதவி செய்ய ஜெபிப்போம்.

**23**
**மார்ச்**
வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. சுகாந்தோ குமார் சிங்
திருமதி. நெம்ஸவா தாங்லால் ஜெள

## தாத்ரா & நகர் ஹவேலி

### ராண்தா விடுதி:

**மர்குஸ் மால்தோ & சாரா**

**துதிக்க:** வேதாகம வகுப்பு, ஞாயிறுப்பள்ளி வகுப்பு, புதன்கிழமை உபவாச ஜெபம் போன்ற ஆவிக்குரிய செயல்பாடுகள் புதிதாக நமது விடுதிகளில் தொடங்கப்பட்டுள்ளன. பலவித குளிர்கால வியாதிகளுக்கு நமது விடுதிப்பிள்ளைகள் விலக்கிக் காக்கப்பட்டு வருகின்றனர். தனது கை மணிக்கட்டிலுண்டான வலியிலிருந்து வினயிற்கு நல்ல சுகம் கிடைத்துள்ளது. எலும்பு முறிவு பிரச்சினைகளினால் பாதிக்கப்பட்டிருந்த பாதல், பிரதிக்ஷா, ஜோதி ஆகியோர் நல்ல சுகமடைந்துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விடுதியில் 10-ம் வகுப்பு அரசாங்கப் பொதுத்தேர்வு எழுதும் பிள்ளைகளுக்காக; இங்குத் தொடங்கப் பட்டுள்ள ஆவிக்குரிய செயல்பாடுகள் பிள்ளைகளின் ஆவிக்குரிய வாழ்விற்கு பேருதவியாக இருக்கும்படி தொடர்ந்து ஜெபத்துடன் நடத்தப்பட; இஸ்மாத் மற்றும் மான்சு தோள்பட்டை வலியிலிருந்து சுக மடைய; சொறிசிரங்கு பிரச்சினையினால் கஷ்டப்படும் பிள்ளைகளுக்கு முழு சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

### கான்வேல்: அருள் ஆசீர் & சுகுணா

**துதிக்க:** இங்குப் பெண்கள் கூடுகை நடத்தப்பட்டு, அதில் 250 பெண்கள் கூடி தேவாசீர்வாதம் பெற்றுள்ளதோடு, நடத்தப்பட்ட ஆண்கள் கூடுகை வாயிலாக அநேக ஆண்களும் பயனடைந்துள்ளனர். கின்னோலி கிராம சங்கீதாபேன் கண்பிரச்சினையிலிருந்து ஜெபத்தின்மூலம் சுகம் பெற்றுள்ளார். கால் மடக்கவும், நடக்கவும் முடியாமலிருந்த உமர்வாணி கிராம அர்விந்த்பாய் விசுவாசத்துடன் ஜெப எண்ணெய் பயன்படுத்தி அற்புத சுகமடைந் துளளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** 10-ம் & 12-ம் வகுப்புகளுக்கான அரசாங்கப் பொதுத்தேர்வு எழுதும் 15 பிள்ளைகள் நல்ல மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற; மதுபேன் கிராம விஜய்பாய் புற்றுநோயிலிருந்து சுகம் பெறவும், அவரது பெற்றோர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவும்; இப்பணித்தள சுதேச ஊழியர் சதீஷ்பாய் மனசோர்பிலிருந்து விடுபட்டு, ஊழியத்தை உற்சாகமாகச் செய்ய ஜெபிப்போம்.

## *கேட்கப்பட்ட ஜெபம்!*

*மகாராஷ்டிரா, பெயிண்ட் பணித்தளம். கிராமத்தலைவர் மற்றும் போலீஸ் அதிகாரியின் உதவியுடன் இங்குள்ள போர்பாடா ஆலயத்தை இடிப்பதற்காக சில கிறிஸ்தவ எதிர்ப்பாளர்கள் திட்டமிட்டனர். இதற்காக உலகின் பல்வேறு பகுதி களிலிருந்து ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. ஜெபத்தின் விளைவாக அக்கிராமத்தலைவர் ஏதோ சில காரணங்களால் பதவியிலிருந்து விலக்கப்பட்டதோடு, அப்போலீஸ் அதிகாரி யும் வேறொரு இடத்திற்குப் பணிமாற்றம் செய்யப்பட்டார். தேவ கிருபையால் தற்போது அவ்விடத்திற்குப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள போலீஸ் அதிகாரி கிறிஸ்தவர்களுக்கு மிகவும் ஆதரவாக இருக்கிறார். தேவனுக்கே மகிமை!*

**24**
**மார்ச்**
**வெள்ளி**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. நிரோலா டிகல்
திரு. கெனோஸ் ஸ்டான்லி இன்பராஜ்

# மகாராஷ்டிரா

## இகத்புரி: நாகராஜன் & திலகவதி

**துதிக்க:** புதிதாக 8 பேர் கிறிஸ்துவின் மந்தையில் தஞ்சம் புகுந்துள்ளனர். 140 பேர் முதல்முறையாக சத்தியவசனத்தைக் கேட்டுள்ளனர். வாகுபச்சவாடி, விகிகாவ், சிர்செட் ஆகிய கிராமங்களில் புதிதாக ஆராதனைக்குழுக்கள் தொடங்கப் பட்டுள்ளன. மொடலா கிராம ராம்தாஸ் போதைப்பழக்கத்திலிருந்து குடும்பமாக விடுதலை பெற்றுள்ளதோடு, அவர் தனது விசுவாசத்தை கிறிஸ்துவில் அறிக்கையிடவும் ஆயத்தமாய் இருப்பதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சரளாவிற்கு விசுவாசத்தினிமித்தம் எதிர்ப்புக்காட்டும் அவரது கணவரின் குடும்ப நபர்கள் மனம் மாற; போதைப் பழக்கத்திலிருந்து நிவ்ருதி, மோகன், எக்னாத், பாண்டுரங்கன் ஆகியோர் விடுபட; தனது தகப்பனார் ஜெத்துவின் மாந்திரீக செயல்பாடுகளினிமித்தம் குடும்பத்தில் பற்பல பிரச்சினைகளைச் சந்திப்பதோடு, கணவர்களால் கைவிடப்பட்ட நிலையில் இருக்கும் துக்காராமின் 4 சகோதரிகள் மீண்டும் நல்வாழ்வு பெறவும், அவர்களது தகப்பனார் மனந்திரும்பவும்; கெட் கிராம 7 மாத குழந்தையான சந்தோஷும், பச்சிளங்குழந்தையான ஆஷிஷும் கண்தொற்றுநோய்ப் பிரச்சினையிலிருந்தும், 16 வருடங்களாகக் கஷ்டப்பட்டுவரும் சிர்செட் கிராம சந்தர் அந்தரங்கப் பகுதியில் ஏற்பட்டுள்ள புண்களிலிருந்தும் பூரண குணமடைய; அவேலி கிராம ஹரிசந்தர் தீய ஆவிகளின் போராட்டங்களிலிருந்து முற்றிலும் விடுபட ஜெபிப்போம்.

## டிண்டோரி:

### அலெக்ஸ் பிரபு & பிரியா கெத்ஸி

**துதிக்க:** கங்கா மாலுங்கி மற்றும் சல்ஹாத் கோகன்காவ் கிராமங்களில் புதிதாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. தாரி மற்றும் லகன்மானி கிராமங்களில் புதிதாக வாரந்தோறும் நடத்தப்படும் இரவுநேர ஜெபக்கூடுகைகள் அம்மக்களுக்குச் சுவிசேஷம் அறிவிக்கும்பொருட்டு நடத்தப்பட ஒழுங்குச் செய்யப்பட்டுள்ளன. லதா, சாந்தா, குசும், பாலிபாய் ஆகியோர் தங்களது விசுவாசப் பின்னடைவிலிருந்து மீண்டு, திரும்பவும் ஆலயம் வரத் தொடங்கியுள்ளனர். நெஞ்சு வலியிலிருந்து குசும் ஜெபத்தின்மூலம் அற்புத சுகமடைந்துள்ளார். சுபாஷ் கர்த்தரை நம்பி ஜெபித்து நல்ல தொரு வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளார். நமது உள்ளூர் தன்னார்வ ஊழியரை இருசக்கர வாகன விபத்திலிருந்து தேவன் அற்புதமாகக் காப்பாற்றியுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வாமன் மற்றும் பூஜா வலிப்பு நோயிலிருந்து சுகமடைய; சுனிதா தீய ஆவியின் பிடியிலிருந்து விடுபட; கொத்தனார் பணிசெய்யும் மதுக்கர் பணிசெய்ய முடியாமல் தனது கைகளில் கொண்டிருக்கும் பெலவீனங்களிலிருந்து பூரண சுகமடைய; வாமன் மற்றும் ரேகா தேவகிருபையால் மனம்பொருந்தி சந்தோஷமான திருமண வாழ்வை வாழ; பீமா தனது கால்களிலிருக்கும் கட்டிகளிலிருந்தும், சிந்து மனநிலைப் பாதிப்பிலிருந்தும், சர்துல் மற்றும் சரத் நெஞ்சுவலியிலிருந்தும் சுகம் பெற; பயா & காஜலின் திருமணம் ஆசீர்வாதமாய் நடைபெறவும், அவர்கள் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்கவும் ஜெபிப்போம்.

25
மார்ச்
சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. லிங்நெய்ஹோய் ஜெள

## ஜிம்மலாகட்டா:
## ஸ்ரீனிவாசா லாசரஸ் & சுனிதா

**துதிக்க:** புதிதாக 1100 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு, அதிலிருந்து ஒருவர் கிறிஸ்துவின் மந்தையில் வந்து இணைந்துள்ளார். இங்கு தேவ நாம மகிமைக்காக ஆலயமொன்று கட்டப் பட்டுள்ளது. 6 கிராமங்களில் பெரிதளவில் வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. 6 கிராமங்களில் நடைபெற்ற தெருப்பிரசங்க நிகழ்வு களில் நமது மிஷனரிகளோடு விசுவாசி களும் கலந்துகொண்டு செயல் பட்டுள்ளனர். திரளானோர் புதிய ஏற்பாடு களைப் பெற்றுக்கொண்டு, சந்தோஷ மாக இயேசுவின் நற்செய்தியைக் கேட்டுச் சென்றுள்ளனர். செவிலியரான பிரேம்லதா மாந்திரீகக்கட்டிலிருந்து முழுவிடுதலை பெற்றுள்ளார். நமது தொடர் ஜெபத்திற்கு விளைவாக அரசாங்கத்திடமிருந்து புதிய வீடுகளைப்பெறுவதற்கென அங்கீகாரத்தை நமது விசுவாசிகள் கிடைக்கப்பெற்றுள்ளனர். எதிர்ப்பின் சப்தங்களை ஒழித்து, ஊழியத்தில் திறந்தவாசல்களை தேவன் தந்துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வெங்கட்டின் தாயாரை இழந்துதவிக்கும் அக்குடும்பத்தார் தேவஆறுதல் பெற; மல்லய்யா, ஹன் சக்கா, பிரியங்கா ஆகியோரின் குடும்பங்கள் இரட்சிக்கப்பட; மல்லேஷ் மற்றும் பெண்டக்காவின் குடும்பங்கள் தங்களது மனபயங்களிலிருந்து வெளிவந்து, கிறிஸ்துவின்மீது தாங்கள் கொண்டுள்ள நம்பிக்கையை அறிக்கை செய்ய; இரவுநேரங்களில் வீதிகளில் நடமாடும் புலிகளின் நடமாட்டத்திலிருந்து கிராம மக்கள் காக்கப்பட; மல்லேஷையும், அவரது சிறு மகளையும் கைவிட்டுவிட்டுச் சென்றிருக்கும் அவருடைய மனைவி மனந்திரும்பி மீண்டும் குடும்ப வாழ்விற்குள் வர; திலீப், லக்ஷ்மி, சுனிதா ஆகியோர் நமது ஆராதனைகளில் ஒழுங்காகப் பங்குப்பெற; ஷியாம் ராவ் தனது குடிப்பழக்கத்திலிருந்து மீள; இப்பணித்தளங்களில் காணப்படும் அடர்ந்த காடுகள், காட்டு விலங்குகள், கொள்ளையர்கள், நக்சலைட்டுகள் மற்றும் நரபலி போன்ற முக்கிய சவால்களை நமது ஊழியர்கள் தேவ பாதுகாப்புடன் மேற்கொள்ள ஜெபிப்போம்.

## *பிங்கியின் ஜெபம்!*

*ராஜஸ்தான், சாங்ரியா பணித்தளம். கேர்வாலா கிராம மிந்தர் தனது நிலத்தில் வேலை செய்துகொண்டிருந்தபோது பாம்புக்கடித்ததினால், அவரை கோகா மெடிக்கு (பாம்பு கோவில்) கொண்டுச்சென்று பூஜை செய்தால் உயிர்பிழைக்கலாம் என அவரது உறவினர்கள் கூறினர். ஆனால், அவரது மகள் பிங்கி தனது தந்தையை ஒருவாரம் வீட்டிலே தங்கியிருக்கும்படி வற்புறுத்தினாள். இதற்கிடையில் பாம்புக் கடித்த இடம் புண்ணாகி, கால் முழுவதும் ஊதா நிறத்தில் மாறிவிடவே, உடனே பிங்கி ஜெப எண்ணெய் பூசி தனது தந்தைக்காக ஊக்கமாக ஜெபித்தாள். அவளது விசுவாச ஜெபத்தை அங்கீகரித்த தேவன் மிந்தருக்கு பரிபூரண சுகம் கொடுத்தார். இதைப்போல் வேறொரு முறையும் மிந்தர் சற்றுநேரம் நின்றுவிட்டு நகன்ற இடத்தில் ஒரு பெரிய மரக்கிளை அவர்மேல் விழ இருந்த ஆபத்திலிருந்து தப்பிப்பிழைத்துள்ளார். தேவனுக்கே மகிமை!*

**26 மார்ச் ஞாயிறு**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜேக்கப் ஞானப்பண்டிதன் M.
திருமதி. மரிய செல்வி தர்மராஜ்
திரு. ஆல்பர்ட் சந்தோஷ் ராஜ் J.
செல்வி. சிங் நெய் சியான்

## காண்ட் பாரா & நவாபூர்:

### பாலாஜி நெட்டாலம் & ஜெகதீஷ்வரி

**துதிக்க:** தேவ வார்த்தை சுவிசேஷமாக 12 கிராமங்களில் முதல்முறையாக அறிவிக்கப்பட்டதின் விளைவு 1200 பேர் பயனடைந்துள்ளனர். 85 புதிய ஏற்பாடுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. 10 புதிய கிராமங்களில் பின்தொடர்ப்பணி செய்யப்பட்டுள்ளது. 2 புதிய குடும்பத்தினர் ஆலய ஆராதனைகளில் பங்கேற்கத் தொடங்கியுள்ளனர். பத்வாட் திருச்சபையிலிருந்து விசுவாசத்தில் பின்வாங்கிப் போயிருந்த 3 விசுவாசிகள் மீண்டும் ஆலயம் வர ஆரம்பித்துள்ளனர். வயிற்றுக்கட்டி பிரச்சினையிலிருந்து சம்ரியா பூரண சுகமடைந்துள்ளார். வெளிப்புற சந்திப்பு ஊழியத்தின் மூலம் சந்தித்த 12 புதிய குடும்பத்தினருக்கு தேவ வார்த்தை தனிப்பட்ட விதங்களில் பகரப்பட்டுள்ளது. தேவ் மொஹ்ரா மற்றும் சன்பாடா திருச்சபைகளில் புதிதாக கிராம சபை கவுன்சில்கள் தொடங்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது ஜீப்குழு சுவிசேஷ ஊழியத்தின்மூலம் மிகுந்த ஆத்தும கனிகள் கிடைக்க; தரிசனக் கூடுகைகள், வாலிபர் மற்றும் சிறுவர் கூடுகைகள் ஆசீர்வாதமாக நடைபெற; தீன்மாவி, பில்காவன், பெத்கி, பீலிபாடா, கசரே, தல்விபாடா, அசலிபாடா, சுதர்பாடா, கேவ்டிபாடா ஆகிய கிராமங்களில் இரவுநேர ஜெபக்கூட்டங்கள் கிரமமாக நடத்தப்பட திறந்தவாசல் கிடைக்க; நமது பஜன் மற்றும் இரவுநேர ஜெபக்கூட்டங்களில் பயன்படுத்துவதற்கான ஒலி, ஒளி சாதனங்கள் கிடைக்கப்பெற; நமது விசுவாசிகள் மத்தியில் பணிபுரிய உள்ளூர் சுதேச ஊழியரொருவர் கிடைக்க; விக்காந்த், ரவி மற்றும் ஜெயந்தியின் குடும்பங்கள் இரட்சிப்படைய; பாலிபட் கிராமத்தில் வாரந்தோறும் ஜெபக்கூட்டமொன்று நடத்துவதற்கு வாய்ப்பு கிடைக்க; கொல்கார் கிராமத்தில் சிறிய ஆலயமொன்று கட்டப்படுவதற்கான தேவைகள் சந்திக்கப்படவும், அதைக் கட்டுவதற்கான நிலத்தை பஞ்சாயத்தினர் கொடுக்கவும், அதற்கான அனுமதிச்சான்றிதழ் கிடைக்கவும் ஜெபிப்போம்.

## மேரி சிறுமியர் விடுதி - ஷிர்பூர்:

### சாந்தி முர்மு

**துதிக்க:** நமது விடுதிப்பிள்ளைகள் நல்ல பாதுகாப்புடன் இருப்பதோடு, தேவ கிருபையால் கர்த்தருக்குள் வளர்ந்தும் வருகின்றனர். நமது ஞாயிறு ஆராதனை, உபவாச ஜெபம், ஆலோசனை நேரம் மற்றும் ஞாயிறுப்பள்ளி நிகழ்ச்சிகள் யாவும் தடையின்றி தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இக்குளிர்க்கால பற்பல பெலவீனங்களுக்கு நமது விடுதிப் பிள்ளைகள் காக்கப்பட்டுள்ளனர். இப்பிள்ளைகள் தினந்தோறும் பள்ளிக்குச் செல்லும்வழியில் பெரும் சாலையொன்றைக் கடக்கும்போது, தேவகாவல் அவர்களோடு இருந்து வருகிறது. நமது விடுதிப்பிள்ளைகள் யாவரும் தங்களது கல்விப்பாடங்களைச் சிறப்பாகக் கற்றுவருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வாடகை கட்டிடத்தைத் தவிர்த்து தேவன் நமக்கென சொந்தமாக விடுதிக்கட்ட ஒரு நிலத்தைத் தர; நமது விடுதிப்பிள்ளைகள் விசுவாச வாழ்வில் ஆழமாய் வளர்ந்து, இயேசுவைப் பின்பற்றுகிறவர்களாக மாற; ஜக்ரூத்தின் குடும்ப அங்கத்தினர்கள் கிறிஸ்துவின் இரட்சிப்பிற்குள் வர; நமது விடுதிப்பிள்ளைகளுக்கிடையே செய்யப்படும் ஊழியத்தின் மூலம் வருங்காலத்தில் திரளான ஆத்தும கனிகள் கிடைக்க ஜெபிப்போம்.

**27**
**மார்ச்**
**திங்கள்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. மூர்த்தி T.

## கான்தேஷ் பிராந்தியம்:
### M. வினு & சுபிலா

**துதிக்க:** நடந்த ஜீப்குழு ஊழியம் மூலம் 12 கிராமங்களுக்குப் புதிதாக தேவ வார்த்தை எடுத்துரைக்கப்பட்டு, அதனால் 1200 பேர் கிறிஸ்துவைக் குறித்து அறிந்துள்ளனர். இதைத் தவிர ஜீப்குழு வெளிப்புற சந்திப்பு ஊழியத்தின் மூலம் 26 கிராமங்கள் சந்திக்கப்பட்டு, அதன் விளைவாக 3100 பேர் சுவிசேஷத்தைக் கேட்டறிந்துள்ளனர். 27 இடங்களில் இயேசுத்திரைப்பட ஊழியம் நடந்துள்ளது. 447 புதிய ஏற்பாடுகளும், 17 வேதாகமங்களும் பகிரப்பட்டுள்ளன. 20 பேர் கிறிஸ்துவை விசுவாசிக்கத் தொடங்கியுள்ளனர். 127 கிராமங்களில் ஊழியப்பின்தொடர் பணிகள் செய்யப்பட்டுள்ளன. தாராசிங் தீய ஆவியின் பிடியிலிருந்து காப்பாற்றப் பட்டுள்ளார். சுவிசேஷப்பணியினால் 35 புதிய குடும்பங்கள் நமது ஊழியத் தொடர்பிற்குள் வந்துள்ளனர். சிறப்பு இரவு நேர ஜெபக்கூடுகைகள் எல்லா பணித்தளங்களிலும் கருத்துடன் நடத்தப் பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்தினால் சந்திக்கப் பட்டுள்ள கிராமங்களில் தொடர்ந்து சுவிசேஷம் அறிவிக்கப்பட திறந்தவாசல் உருவாக; கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டி ருப்போர் விசுவாசத்தில் வளர; விசுவாசி களுக்கென நடத்தப்படும் தரிசனக் கூடுகைகளின் மூலம் நமது ஊழிய நோக்கங்கள் நிறைவேற; சத்தாரா, தினஸ்மால் ஆகிய இரு துணை மையங் களில் பணிபுரிய ஏற்ற ஊழியர்கள் கிடைக்க; விசுவாசத்தில் பின்மாற்ற மடைந்துள்ளோர் மீண்டும் கிறிஸ்துவை விசுவாசிக்கத் துவங்க ஜெபிப்போம்.

## தலாசரி:
### மயில்சாமி ஜோசப் & ஏசுமணி

**துதிக்க:** சுவிசேஷம் முதல்முறையாக 5 கிராமங்களில் அறிவிக்கப்பட்டு, 421 பேர் கிறிஸ்துவைக் குறித்து அறிந்துள்ளனர். 16 பேர் கிறிஸ்துவின் மந்தைக்குள் தஞ்சம் புகுந்துள்ளனர். சபையாரின் ஊக்கமான ஜெபத்தினால் 3 வயது சிறுமி சிரியாஸ் இரத்தக்கட்டி உருவாகும் பிரச்சினையிலிருந்து அற்புத சுகம் பெற்றுள்ளதோடு, அவளது தகப்பனார் தேவ நாமம் மகிமைப்படும்படி அதைக்குறித்து சபையில் சாட்சியும் கூறியுள்ளார். உதுவா கிராமத்தில் ஊழியப்பயிற்சி நிகழ்ச்சியும், குடும்பக் கூடுகையும் சிறப்பாக நடந்து முடிந் துள்ளது. கடுங்காய்ச்சலினால் அல்லல் பட்ட பாருவை தேவன் சுகப்படுத்தியுள்ள தற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தொழுநோயினால் பாதிக்கப் பட்டுள்ள நமது விசுவாசி தன்குவிற்கு அற்புத சுகம் கிடைக்க; லோக்கர்பாடா கிராமத்தில் தங்களது விசுவாசத்தை கிறிஸ்துவில் அறிக்கையிட காத்திருப் போருக்காக; கிராம மக்களுக்குப் பயந்து, விசுவாசத்தை கிறிஸ்துவில் அறிக்கையிட தயங்கும் புதிய விசுவாசியான வனிதா சுதரின் குடும்பத்தினருக்காக; வெலுகாம் கிராம மக்கள் கிறிஸ்துவின்மீது தைரியமாக நம்பிக்கை கொள்ள ஜெபிப்போம்.

28
மார்ச்
செவ்வாய்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்
திருமதி. ஜெரினா ஷிம்ரா

# கர்நாடகா

## நிடகுந்தி:

**நரேந்திர குமார், ஜோசப் கிருபாகரன்**

**துதிக்க:** சுவிசேஷம் 70 பேருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. புதிதாக ஒரு கிராமம் சுவிசேஷத்தினால் சந்திக்கப் பட்டுள்ளது. புதிய தொடர்பாளரொரு வருக்கு ஒரு வேதாகமம் கொடுக்கப் பட்டுள்ளது. 4 வயது சிறுமியான பிரதீபா பொல்லாத ஆவியின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதற்காகவும், இரண்டு வயது சிறுமியான சிவானி குடலிறக்கப்பிரச்சினையிலிருந்து சுகம் பெற்றுள்ளதற்காகவும் தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தனது கால்களில் உண்டான எலும்பு முறிவுகளினிமித்தம் மருத்துவர் களால் கைவிடப்பட்டு, நடக்க முடியாமல் ராஜஸ்தானில் ராணுவப்பணியிலிருக்கும் நமது மிஷனரியின் வீட்டு உரிமை யாளர் விரைவில் அற்புத சுகம் பெற; தேவர் கிப்பாரிகி மற்றும் சிந்தகி தாலுகாக்களில் புதியதொரு பணித் தளம் திறக்கப்பட எடுக்கும் முயற்சிகள் வாய்க்கவும், அங்குள்ள மக்கள் கிறிஸ்துவை ஏற்பதற்கேற்றவாறு அவர் களது உள்ளங்கள் ஆயத்தப்படவும்; வாலிபர்களான நாகேஷ், ஜெயனேஷ்வர், லீலாவதி, ஷாந்தவா, வித்யா, சுசிலா, ஹேமா, நாகம்மா, பாசு, தயமன்னா ஆகியோருடைய பெற்றோர்கள் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

## கஜேந்திரகடா:

**மஞ்ஜ்யா நாயக் & ரத்னா**

**துதிக்க:** புதிதாக 2 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டதின் விளைவு, 250 பேர் முதல்முறையாக சத்திய வசனத்தைக் கேட்டுள்ளனர். ஒருவர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண் டுள்ளார். மூளைக்கட்டிப்பிரச்சினை அதிகமாகி, மிக மோசமான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டிருந்த ரோசையா ஜெபத்தின் மூலம் இப்போது நன்கு சுகமாகி வருகிறார். குல்கப்பா சிறுநீரகக்கல் பிரச்சினையிலிருந்து குணமாகியுள்ளார். திருமணமாகி 12 வருடங்களாகியும் குழந்தையில்லாமலிருந்த நிர்மலா ஜெபத்தின் விளைவாக தற்போது இரட்டை குழந்தைகளைப் பெறும் பாக்கியத்தைப் பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** குஸ்தகி கிராம ஆலயக்கட்டு மானப்பணி நன்கு நடைபெற்று வருகின்றதற்காக; 5 வருடங்களாகக் குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டுள்ள ரமேஷ் அதிலிருந்து விடுபடவும், இயேசுவை விசுவாசிக்கத் துவங்கவும்; ஏற்கனவே ஒருமுறை கருசிதைவிற்கு ஆளாகி, வரும் ஏப்ரல் மாதத்தில் குழந்தையைப் பெற்றெடுக்கக் காத்தி ருக்கும் நல்லம்மாவிற்கு சுகப் பிரசவம் நேரிட; சுதாவிற்கு நல்ல வாழ்க்கைத்துணை அமைய; மனோ ரம்மா இருதயக் கோளாறிலிருந்து சம்பூரண சுகமடைய ஜெபிப்போம்.

29
மார்ச்
புதன்

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஆலிஸ் ரஞ்சித் ஜேம்ஸ்
திரு. ஜாண் ஆன்ட்ரூஸ் சுகிர்தராஜ்

## கோலார்:

### சாமுவேல் பெபர்தா, ஜோகன் மால்தோ

**துதிக்க:** இங்கே நடத்தப்பட்ட பெண்கள் கூடுகையில் 9 பேர் கலந்துகொண்டு ஆவிக்குரிய பெலனடைந்துள்ளனர். கவுடா இனமக்கள் சுவிசேஷத்திற்கு செவிசாய்க்கின்றனர். ஜெயாம்மா மற்றும் சால்பதி தீய ஆவியின் கட்டுகளிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். காய்ச்சலினால் அதிக சிரமத்திற்குள்ளான ராஜு ஜெபத்தின் மூலம் சுகமடைந்துள்ளார். இங்குள்ள மிஷனரிகள் கன்னட மொழியை தேவகிருபையால் நன்கு கற்றுத்தேறி வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** குப்பள்ளி, அந்தரங்கடா, பெட்டனஹள்ளி, கரங்கனஹள்ளி, சிலின்கிரி மற்றும் தேரனஹள்ளி கிராமங்களில் சுவிசேஷத்திற்கான வாசல்கள் திறக்கப்பட; சால்பதி குடிப்பழக்கத்திலிருந்து விடுபட; சௌதம்மா வாய்ப்புற்றுநோயிலிருந்து அற்புத சுகமடைய; நமது விசுவாசிகளும், ஞாயிறுப்பள்ளி சிறுவர்களும் விசுவாசத்தில் நன்கு வளர ஜெபிப்போம்.

# ஆந்திரப் பிரதேசம்

## மதனபள்ளி:

### வெங்கடேசன் & சசிகலா

**துதிக்க:** ஆத்தும ஆதாய முகாமொன்று வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளது. 7 புதியவர்கள் கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை அறிக்கையிட்டுள்ளனர். 2 வேதாகமங்கள் பணித்தள ஊழியச்சந்திப்பின்போது கொடுக்கப்பட்டுள்ளன. 2 இடங்களில் வெளிப்புற சந்திப்பு இரவுநேர கூடுகைகளும், 4 இடங்களில் விசுவாசிகளுக்கான கூடுகைகளும் சிறப்பாக நடந்தேறியுள்ளன. அதிவிலோபள்ளி, அவளபள்ளி மற்றும் கௌகுண்டா கிராமங்களில் சுவிசேஷத்திற்கான வாசல்களை தேவன் திறந்து தந்திருப்பதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தண்டலூரு கிராமத்தில் நடத்த ஒழுங்குச்செய்யப்பட்டுள்ள விசுவாசிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சி நல்லமுறையில் நடைபெற; ஊழியத்தின் பேரில் வாஞ்சைக் காட்டுவோருக்கும், அதில் கலந்துகொள்வோருக்கும் ஆத்தும ஆதாயப்பயிற்சி கொடுக்கப்பட; மதுரவேணி பல்வேறு பெலவீனங்களிலிருந்தும், தீய ஆவியின் பிடியிலிருந்தும் சீக்கிரத்தில் சுகவிடுதலை பெற; அவளபள்ளி கிராம மக்கள் இருளில் வாழும் பொல்லாத ஆவிகளின் பிடிகளிலிருந்து விடுவிக்கப்படவும், அவர்களுடைய மனக்கண்களை பரிசுத்த ஆவியானவர் திறந்து அவர்கள் கர்த்தரண்டை வழிநடத்தப்படவும்; ஜெப அறையொன்று கட்டப்படுவதற்கு கருணாகர் ரெட்டியால் காண்பிக்கப்பட்டுள்ள நிலத்தில் அத்திட்டம் நிறைவேற்றப்பட ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. கொன்கனி சம்பத்பாய்
திருமதி. ஷேத்ரிமயூம் பிரியா தேவி ஜீவர்
திரு. ஆபிரகாம் S.

## பெனுகொண்டா: தேசாய் திலீப் பாய் & ராந்தே லக்ஷ்மிபேன்

**துதிக்க:** தேவ வார்த்தை 580 பேருக்குச் சென்றடைந்துள்ளது. புதிதாக ஒரு கிராமம் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளது. இப்பணித்தளத்திலிருந்து 7 விசுவாசிகள் கோடிகொண்டா ஆலயத்தில் வைத்து நடைபெற்ற விசுவாசிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சியில் பங்கேற்று தேவாசீர்வாதம் பெற்றுள்ளனர். கூட்டிணைப்பு அலைபேசி அழைப்பு மூலம் காலை ஜெபம் விசுவாசிகள் மத்தியில் கிரமமாக நடத்தப்பட்டு வருகின்றது. இப்பணித்தளத்தைச் சார்ந்த சின்னப்பரெட்டிபள்ளி மற்றும் துட்டிபனடா கிராமங்களில் வெளிப்புற சந்திப்பு ஊழியம் நடைபெற்றுள்ளது. அடுதாகலப்பள்ளி கிராமத்தில் ஆத்தும ஆதாய முகாமொன்று நடத்தப்பட்டுள்ளது. சுவர்தம்மா கால் வலியிலிருந்து சுகம்பெற்று, தற்போது நமது ஆலய ஆராதனைகளில் வந்து கலந்துகொள்கிறார். தண்ணீர் சேகரிப்புத் தொட்டிக்குள் தவறிவிழுந்து மூழ்கிய சிறுவன் சாமுவேல் தேவ கிருபையால் உயிர்ச்சேதமின்றி காப்பாற்றப்பட்டுள்ளான். மரவப்பள்ளி கிராமத்தில் ஊழியத்திற்கு எதிராகக் கிளம்பும் பிரச்சினைகள் யாவும் தேவ அருளால் குறைந்து வருகின்றதற்காகத் தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நடக்க முடியாமல் படுக்கையிலிருக்கும் ஆனந்தம்மாவும், குருவம்மாவும் பூரண சுகம்பெற; அதிகப்பட்ச நீரிழிவுநோயினால் சோம்சேகர் காலில் ஏற்பட்டுள்ள நோய்த்தொற்றிலிருந்து விரைவில் அவர் குணமடைய; நந்தினி, ராகேலம்மா, மரியம்மா ஆகியோருக்கு மகப்பேறு பாக்கியம் கிடைக்க; சுற்றுச்சுவர் மற்றும் பயிற்சி மையக்கட்டிடப்பணி விரைவில் நிறைவுற ஜெபிப்போம்.

## ரோதம்:

### தேபதத்த லிமா & சோனியா ராணி

**துதிக்க:** சுவிசேஷம் 460 புதியவர்களைச் சென்றடைந்துள்ளது. 2 பேர் புதிதாக கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். தீராத வயிற்றுவலியினால் அநேக நாட்களாகக் கஷ்டப்பட்டுவந்த டேவிடிற்கு ஜெபத்தோடு மேற்கொள்ளப்பட்ட ஓர் அறுவை சிகிச்சை மூலம் பூரண சுகம் கிடைத்துள்ளது. நார்ஷா மற்றும் லக்ஷ்மி கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை அறிக்கை செய்துள்ளனர். ராமலிங்கப்பா மற்றும் ஸ்ரீனிவாசுலு நமது விசுவாசிகளைப் பயமுறுத்தி ஆராதனைகளைத் தடுத்து நிறுத்திய போதிலும், நமது விசுவாசிகள் தங்களது விசுவாசத்தில் உறுதியுடன் நின்றுள்ளனர். ராமன்ஜி மற்றும் நரேஷ் காவல்துறைப் பணிக்கான தேர்வுகளை வெற்றிகரமாக எழுதியுள்ளனர். நிக்கிதா அழகிய பெண் குழந்தையைப் பெற்றெடுத்துள்ளார். சுபா ராயப்பா மற்றும் கங்கம்மாவிற்கு நல்ல வேலை வாய்ப்புகள் கிடைத்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அதிக நாட்களாகப் பிள்ளைப் பேற்றிற்காக வாஞ்சிக்கும் ரவி & லக்ஷ்மி தேவிக்காக; தங்களது பல்வேறு வியாபாரத் தோல்விகளினால் வருந்திக்கொண்டிருக்கும் ராம சுப்பையா, நரேஷ், கமலம்மா, அர்ச்சனா, கங்கா ரத்தனம்மா, கௌதமி மற்றும் நிக்கிதா இரட்சிப்படைய; ஊழியத்திற்கு எதிர்ப்புக்காட்டும் திருக்குலப்பட்டணம் கிராம லிங்கப்பா மற்றும் ஸ்ரீனிவாசுலு மனந்திரும்பி இரட்சிக்கப்பட; ரோதம் கிராமத்தில் ஆலயம் கட்ட நல்லதொரு நிலம் கிடைக்க ஜெபிப்போம்.

31
மார்ச்
வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. அமிர்தா கோல்டா ஆசீர்
திரு. ஜாண் எசுங், திரு. பசந்தா குரு
திருமதி. தோதி குர்ரம்வாரி ஹிமா பிந்து ரமேஷ்

# தமிழ்நாடு

## இளம்பிள்ளை:

### வில்சன் செல்வகுமார் & ஜெயா

**துதிக்க:** சுவிசேஷத்தை 30 பேர் புதிதாகக் கேட்டுள்ளனர். பாலா, தான் பணிபுரிந்து வந்த நிறுவனத்திலிருந்து கட்டளையிடப்பட்ட பணிநீக்கங்களிலிருந்து விலக்கு பெற்றுள்ளார். பெரும் விபத்திலிருந்து குமார் காப்பாற்றப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சதீஷ், சந்தோஷ், ஆரோன், பிரபு, குமார், கிருஷ்ணன், ஞானப் பிரகாசம், லக்ஷ்மி, அழகம்மா, நீலா, மகேஷ்வரி, வெள்ளையம்மா, கீதா, மணிகண்டன் மற்றும் சுந்தர்ராஜின் குடும்பத்தினர்கள் யாவரும் இரட்சிக்கப்பட; நிர்மல், குமார் மற்றும் ஏஞ்சலுக்கு தகுந்த வாழ்க்கைத்துணைகள் கிடைக்க; பகிரகடை கிராம மக்கள் கர்த்தரை அறிகிற அறிவிற்குள் வர; குடிப்பழக்கத்தி லுள்ளோர் அப்பழக்கத்திலிருந்து முழுவதுமாக விடுதலை பெற; குப்புராஜ் புற்றுநோயிலிருந்து அற்புத சுகமடைய ஜெபிப்போம்.

## மிச்சேரி:

### தர்மராஜ் R.R. & மரியசெல்வி

**துதிக்க:** சத்திய வசனம் 50 புதியவர்களுக்கு உரைக்கப்பட்டுள்ளது. சுவிசேஷத்தினால் ஒரு கிராமம் முதல் முறையாக சந்திக்கப்பட்டுள்ளது. குடற்பிரச்சினையோடு இருந்த 5 வயது சிறுவன் ஜெபத்தின்மூலம் சுகமடைந்துள்ளான். நமது விசுவாசியொருவரின் கால்நடை பிராணிக்கு இருந்த கொப்பளங்கள் ஜெபத்தினால் நீங்கின. ஊழியப் பாதைகளிலெல்லாம் நமது ஊழியர்களை தேவன் பாதுகாத்து வருகிறதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** முனுசாமியின் மனைவி கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக் கொள்ள; அடிக்கடி கைகால் விரல்கள் மரத்துப்போகும் பிரச்சினையினால் கஷ்டப்படும் சாந்திக்காக; கண்ணிமைகளில் கூடுதல் சதை வளர்ச்சியினால் பாதிக்கப்பட்டிருக்கும் சாவித்திரி சுகமடைய ஜெபிப்போம்.

## *ஜீவனருளும் தேவன்!*

*குஜராத், ஜஜுலோத் பணித்தளம். வீர்பாய் சிங்கின் மனைவிக்கு தாமத பிரசவம் காரணமாக நுரையீரலில் தண்ணீருடன் குழந்தை பிறந்தது. எனவே குழந்தை மூச்சுவிட திணறியதால், 30 நிமிடங்களில் வேறொரு மருத்துவமனைக்கு குழந்தை எடுத்துச்செல்லப்படாவிட்டால் பிழைப்பது அரிது என மருத்துவரும் கூறிவிட்டார். இதைக் கேட்ட வீர்பாய்சிங் ஜெபித்து அர்ப்பணித்துவிட்டு, அக்குழந்தையைத் தூக்கிக்கொண்டு அதிக போக்குவரத்து நெரிசலின் மத்தியிலும் விரைந்து சென்றார். ஆச்சரியமாக கடைசி 5 நிமிடங்களில் மருத்துவமனையைச் சென்றடைந்து அக்குழந்தையை அவசர சிகிச்சைப் பிரிவிற்கு உட்படுத்தினார். என்ன ஆச்சரியம்! கர்த்தருடைய பெரிதான கிருபையால் இப்போது அக்குழந்தை நன்கு சுகத்துடன் காணப்படுகிறது. அல்லேலூயா!*

383

மிஷனரி ஆல்பம்



# திரு. கிரிபாபு & திருமதி. லூர்து மேரி குடும்பம்

ஆந்திரப் பிரதேசம், சித்தூர் மாவட்டத்தில் கிறிஸ்துவை அறியாத திரு. கொன்கா மார்கண்டையா & திருமதி. கிருஷ்ணம்மா தம்பதியருக்கு 01.01.1975-ல் மூத்த மகனாக சகோ. கிரிபாபு பிறந்தார். இவருக்கு இளைய சகோதரர்கள் இருவர் உண்டு. இவர்கள் யாவருமே இவர்களது தாத்தாவைப் போல தங்களுடைய தினசரி மத வழிபாட்டுச் சடங்குகளில் மிகுந்த வைராக்கியம் காட்டுபவர்கள். இவரது தாயார் தீய ஆவியின் பிடியினால் மத வழிபாட்டு ஸ்தலங்களில் ஆட்டமாடுவார். இவர்களது குடும்பத்தில் சமாதானம் இல்லை.

ஒருநாள் கிறிஸ்தவப்போதகரொருவர் இவர்களைச் சந்தித்தவேளையில் இவரது தாயாருக்கும், இவரது வீட்டு உரிமையாளருக்கும் அத்தீய ஆவியின் பிடியிலிருந்து தெய்வீக விடுதலை கிடைத்தது. இத்தனைநாட்கள் இவரிடத்தில் வேதாகமம் இருந்தும், பிறர்மீது கொண்ட பயத்தினால் இவர் அதை வாசிக்கவில்லை. ஆனால், இச்சம்பவத்திற்குப்பிறகு இவர் ஆலயம் செல்ல ஆரம்பித்தார். தனது கல்விப்பட்டத்தையும் திருப்பதியிலுள்ள S.V. கலைக்கல்லூரியில் பெற்றார்.

திடீரென ஒருநாள் இவர் ஆலயத்தினுடைய பரிசுத்த ஸ்தலத்தின் பக்கத்திலிருந்து தூங்கிக் கொண்டிருந்தபோது, 3 முறை ஒரு ஒளிபிம்பம் பளிச்சிட்டதைக் கண்டார். உடனே இவர் வேதாகமத்தைத் திறந்துபார்த்தபோது, யாத்.4:1-ம் வசனம் இவரது பார்வையில் தென்பட்டது. இவரது போதகர் கலி கங்கா ராஜு அந்த வசனத்தை இவருக்கு விளக்கிக்கூறும்போது, கர்த்தர் இவரை ஊழியத்திற்கு அழைப்பதாக எடுத்துரைத்தார். அதனால் அவர் இவரைச் சென்னையிலுள்ள HBI இந்துஸ்தான் வேதாகமக் கல்லூரியில் இறையியல் படிப்பு படிக்க ஏற்பாடு செய்தார்.

தேவன் இவருக்கு 'என் கிருபை உனக்குப் போதும்' என்ற திருவார்த்தையை பொன் எழுத்துக்களில் காண்பித்தார். ஆதலால் போதகர் மைக்கேல் இவரை 3 நாட்கள் உபவாசித்து ஜெபிக்குமாறு கூறினார். அதன்பின் ஒருவாரம் கழித்து இவர் சகோ. சாலமோன் ராஜுவை சந்தித்தபோது, அவர் இவரை அருட்திரு. டேவிட் ராஜுவிற்கு அறிமுகப்படுத்திய மாத்திரத்தில் அந்நபர் இவரை நமது இயக்கத்தில் தன்னார்வ ஊழியராகப் பணிசெய்ய சேர்த்து கொண்டார். பின்பு சிறிது காலகட்டத்திற்குள்ளேயே, நமது இயக்கத்தில் இணைந்து ஊழியம் செய்ய தேவ வழிநடத்துதலுக்குக் காத்திருக்கும் ஒரு பெண் இவருக்குக் காட்டப்பட்டார். அப்பெண் ஏற்கனவே பெங்களூரில் வாலிபர்கள் மத்தியிலும், மருத்துவமனை ஊழியங்களிலும் ஈடுபாடு கொண்டிருந்தார். இவர்கள் இருவரும் தூய திருமணபந்தத்தில் 03.06.2004-ல் இணைக்கப்பட்டனர்.

கிரிபாபுவின் மனைவி திருமதி. லூர்து மேரி பெங்களூரில் கிறிஸ்தவப்பெற்றோரான திரு. ராபர்ட் & திருமதி. தன்மணிக்கு 2-வது குழந்தையாக 23.09.1979-ல் பிறந்தார். இவரோடுகூட பிறந்தவர்கள் 3 பேர். இவர் பி. காம்., பட்டத்துடன் கூடுதலாக GNM தாதியர் படிப்பிற்கான தகுதியையும் பெற்றிருந்தார். இவர்கள் குடும்பமாக 11.01.2009-ல் முழுநேர ஊழியர்களாக நமது இயக்கத்தில் இணைந்து, உடனடியாக ஒருவருட மிஷனரிப்பயிற்சிக்காக உத்தரப்பிரதேசம்-ஜான்சிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அதன்பின் இவர்கள் ஜார்க்கண்டிலுள்ள பல இடங்களில் சந்தால் இனமக்கள் மத்தியிலும், பின் கர்நாடகா மற்றும் மத்தியப் பிரதேசத்திலுள்ள டப்ரா பணித்தளத்திலும் ஊழியம் செய்தனர். தற்போது இவர்கள் மத்தியப் பிரதேசத்திலுள்ள முரைனா பணித்தளத்தில் பணிசெய்து வருகின்றனர். தேவன் இவர்களுக்கு இருமகன்களைத் தந்து ஆசீர்வதித்துள்ளார். டேஹ்ராடூனிலுள்ள கிரேஸ் அகாடமியில் மூத்த மகன் ஜஸ்டின் கிங் பால் (D.O.B. 29.05.2005) 11-ம் வகுப்பும், இளைய மகன் ஜேஸன் பால் (D.O.B. 01.01.2007) 9-ம் வகுப்பும் படித்து வருகின்றனர். இம்மிஷனரிக் குடும்பத்தை நமது ஜெபங்களில் நினைவுகூருவோம்.





***Published by:*** S. John Berlin on behalf of Friends Missionary Prayer Band from 29, High School Road, Ambattur, Chennai 600 053. Tel. 044-2657 0404 E-mail: info@fmpb.org ***Printed by:*** Rasi Graphics Private Limited 69-71-A, Sidco Industrial Estate, Thirumalisai - 600124. ***Editor: S. John Berlin***